633

NEW METHOD
TAMIL READER

633

FOR FORM III

OFFICE OF THE RE...
27 FEB 1942
MADRAS

BY

VIDWAN - PANDIT N. KANAKARAJA IYER, B.O.L.

T.G.GOPAUL PILLAI
TEPPAKULAM * TRICHINOPOLY

PRICE
As. 10

புதுமுறைத் தமிழ் வாசகம்

மூன்றும் பாரத்திற்கு உரியது

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1942
MADRAS

ஆசிரியர் :

வித்வான் - பண்டித, N. கனகராஜையர், B.O.L.

தமிழாசிரியர், மஹாராஜா கலாசாலை, புதுக்கோட்டை.

967

T. G. கோபால் பிள்ளை

தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

1941

பதிப்புரிமை] [விலை அணா 10

First Edition 1941

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1942
MADRAS

முகவுரை

967

புதுமுறைத் தமிழ் வாசகம் என்னும் பெயர் கொண்டு வெளிவரும் இந்நூல் வரிசை, **ஆறு, ஏழு, எட்டாம் வகுப்புகளுக்கு 1939-ஆம்** வருஷத்தில் சென்னை கல்வித் துரைத்தனத்தார் வெளியிட்டுள்ள **புதிய பாட திட்டப்படி** தயாரிக்கப் பெற்றது. அப்பாட திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குறிப்பும் இதன்கண் இடம் பெற்றுள்ளது.

இக்காலத்து மாணவர்கள் தம்மளவில் உலகச் செய்திகளை அறிதற்கு வேண்டும் அளவு பிழையின்றிப் பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய தமிழ் அறிவையும் பொது அறிவையும் பெறச் செய்தலே இந்நூல் வரிசையின் நோக்கமாகும்.

பாட திட்டத்தில் கண்டுள்ளபடியே ஒவ்வொரு பாடத்திலும் போதிய **அரும்பத விளக்கம், பயிற்சி, இலக்கணம்** முதலியன தரப்பெற்றுள்ளன. கதை, விஞ்ஞானம், பயிர்த்தொழில், கைத்தொழில், சுகாதாரம், சரித்திரம், சம்பாஷணை, நாடகம் முதலிய பலவகைப் பாடங்கள் ஒவ்வொரு புத்தகத்திலும் எழுதப்பட்டுள்ளன. வகுப்புக்கு ஏற்றவாறு நடை உயர்த்தப் பெற்றுள்ளது. **மௌன வாசிப்பி**ன் அவசியம் கதைப் பாடங்கள், வரலாற்றுப் பாடங்கள் மூலம் வற்புறுத்தப் பட்டுள்ளது. பலவகைக் **கடிதங்கள், அழைப்பு இதழ்கள் எழுதுதல்** முதலியனவும் வகுப்புக்கு ஏற்றவாறு தரப்பெற்றுள்ளன. பலவகைக் **கட்டுரைகள்** எழுதுதற்கு மாதிரிக் கட்டுரைகள் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. **கட்டுரைப் பயிற்சி** பாடந்தோறும் வற்புறுத்தப் பெறுகின்றது. அந்தந்த வகுப்புக்கு ஏற்ற முறையில் **இலக்கண பாடங்கள்** எளிய முறையில் தரப்பெற்றுள்ளன.

இப்புத்தகங்களில் உள்ள **செய்யுட் பாடம்** (1) நீதிப்பகுதி, (2) கதைப்பகுதி, (3) பலவகைப் பகுதி என முத்துறைகளைச் சுவையுறப் பெற்றுள்ளது நோக்கத் தக்கது. இங்கும் **அரும்பதவுரை, கேள்விகள்** ஆகியவை தரப்பெற்றுள்ளன.

சுருங்கக் கூறின், இப் புதுமுறைத் தமிழ் வாசகம் இக்கால மாணவர்களுக்குத் தமிழ்ச் சுவையும் உலக அறிவும் ஊட்டும் எனத் துணிந்து கூறலாம். இதனை அறிஞர் உலகம் வரவேற்கும் என்னுந் துணிபுடையேன்.

1—9—1941,
மஹாராஜா கல்லூரி,
புதுக்கோட்டை.

N. கனகராஜையர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1942
MADRAS

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
1.	கங்கைகொண்ட சோழன்	... 1
2.	எனது அல்லஹபாத் யாத்திரை	... 9
3.	படக்காட்சி	... 15
4.	ஒலி பரப்பி	... 21
5.	கைத்தொழில்	... 28
6.	இரவீந்திரநாத் தாகூர்	... 34
7.	பெரியோர் உரை நடை	... 41
8.	கடிதமும் அழைப்பு இகழ்களும் எழுதுதல்	... 49
9.	ஈழ மண்டலம்	... 55
10.	கடல்	... 63
11.	சிற்பமும் சித்திரமும்	... 69
12.	பெரிய புராணம் இயற்றிய வரலாறு	... 77
13.	இரும்புத்தொழில்	... 84
14.	பாரி வள்ளல்	... 95
15.	தெய்வச்செயல்	... 103
16.	சென்னை நகரம்	... 109
17.	இயற்கையும் செயற்கையும்	... 119
18.	கண்ணகி—வீரபத்தினி	... 128
19.	நூல் நிலையங்கள்	... 137
20.	குகப்பெருமான் (நாடகம்)	... 148

செய்யுள் பாடம்

I. நீதிச்செய்யுள்

1. நீதி நெறி விளக்கம் ... 161
2. இனியவை நாற்பது ... 164
3. இன்னா நாற்பது ... 165
4. திரிகடுகம் ... 167
5. நான்மணிக்கடிகை ... 168

II. கதைச் செய்யுட்கள்

1. நள வெண்பா ... 170
2. குசேலோ பாக்கியனம் ... 172
3. குமண சரித்திரம் ... 175

III. பலசுவைச் செய்யுட்கள்

1. தனிப்பாடல்கள் ... 179
2. நாடு ... 182
3. தமிழ் மொழி ... 183

OFFICE OF ... 27 FEB 1942 MADRAS

புதுமுறைத் தமிழ் வாசகம்

1. கங்கை கொண்ட சோழன்

சோழ நாடு என்பது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களைக் கொண்ட நிலப்பகுதி. இதனை ஆண்டவர் சோழர்; படைப்புக்காலந் தொட்டு மேம்பட்டு வந்த பழங்குடி மரபினர். இவர் முற்காலச் சோழர், பிற்காலச் சோழர் என இருவகைப் படுவர். முற்காலச் சோழருள் சிறப்புடையவன் கரிகாலன். அவன் இமயம் வரை படையெடுத்துச் சென்று வடநாட்டரசர்பால் மரியாதை பெற்று மீண்டவன்; இலங்கையை வென்றவன். பிற்காலச் சோழருள் சிறந்தவர் இருவர்; ஒருவன் இராஜராஜன். மற்றவன் அவன் மகனான இராஜேந்திரன். இவன் காலம் கி. பி. 11-ஆம் நூற்றுண்டு. இராஜராஜன் சோழ நாட்டை விரிவாக்கி ஆண்டவன். இராஜேந்திரன் சோணுட்டை மேலும் விரிவாக்கிச் சோழச் சக்கரவர்த்தியாக இருந்து ஆண்டவன்.

இராஜேந்திரன் சேரனையும் பாண்டியனையும் வென்றான். அவர்கள் இவனது பேரரசை ஏற்றுக்கொண்டனர். சோழன் இலங்கைமீது படையெடுத்துச் சென்று வட இலங்கைப் பகுதியைத் தன் ஆட்சிக்கு உட்படுத்திக் கொண்டான்; சேர பாண்டியரை வென்றதால் 'மும்முடிச் சோழன்' என்னும் விருது பூண்டான். கங்கை நாடு, வேங்கி நாடு, இடை துறை நாடு இவற்றை வென்று கைக்கொண்டான்; வடக்கே துங்கபத்திரை வரையுள்ள நாட்டை அடிப்படுத்தினான்; மேலைச் சாளுக்கியருடன் போரிட்டு வெற்றித்தூண் நாட்டி மீண்டான்.

இப்பெரு வேந்தன் வட நாட்டின்மீது படையெடுத்துச் சென்றான்; ஒரிஸ்ஸா, வங்காளம், மத்திய மாகாணம் முதலிய இடங்களில் இருந்த அரசர்களை வென்றான்; அவர்கள் தலைமீது கங்கை நீரைக் குடங்களில் ஏற்றித் தன் நாடு மீண்டான். அதனால் இவன் **'கங்கை கொண்ட சோழன்'** என்னும் அழியாப் புகழ்ப்பெயர் பெற்றான். பின்னர் இவன் கடற்படையைச் செலுத்தி மலேயா தீபகற்பத்தையும், நிக்கோபார் தீவுகளையும், சுமத்ரா தீவில் உள்ள சில முக்கிய நிலப் பகுதிகளையும் வென்றான். கடற்படையைச் செலுத்திக் கடல் கடந்து, அயல் நாடுகளை வென்ற பெரும் புகழுடைய சோழன் இவன் ஒருவனே ஆவன்.

இவன் தான் வென்ற நாடுகளில் தன் பிள்ளைகளையும் தக்கவரையும் மாகாணத் தலைவர்களாக நியமித்தான்; நாடுகளைப் பிரித்து எல்லைகள் வகுத்தான்; எல்லைகளில் நிலப்படைகளை வைத்து அமைதியை நிலை நாட்டினான். இவனிடம் காலாட் படை, குதிரைப் படை, யானைப்படை, கப்பற் படைகள் இருந்தன. இவனது நாடு மண்டலங்களாகவும், மண்டலங்கள் கோட்டங்களாகவும், வள நாடுகளாகவும் பிரிக்கப்பட்டுப் பல அதிகாரிகளின் ஆட்சியில் விடப்பட்டிருந்தது. அரசன் ஆறில் ஒரு கடமையையே குடிகளிடம் பெற்றான். அரசன் அமைச்சர், சேனைத் தலைவர், புரோகிதர், தூதுவர், சாரணர் என்போர் யோசனைகளைக்கேட்டு நடப்பது வழக்கம். வரி வசூலிப்பவர், நியாயம் வழங்குபவர், அரசாங்கக் கட்டளைகளை நிறைவேற்றுபவர் முதலிய பல உத்தியோகஸ்தர் இருந்தனர். உத்தியோகஸ்தர் **'ஏனாதி, காவிதி, மூவேந்த வேளாளன்'** என்னும் பட்டம் பெற்றிருந்தார்கள். கிராம சபைகள் தம் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றி வந்தன.

அக்காலத்தில் நாணயங்கள் பொன், வெள்ளி, செம்பு ஆகியவற்றுல் ஆனவை. எடுத்தல், முகத்தல், நீட்டல் முதலிய பலவகை அளவைகள் இருந்தன. வைத்திய சாலேகள் நாட்டின் பல பாகங்களில் இருந்தன. கல்விச் சாலேகள் பல அரசனுல் ஆதரிக்கப்பட்டன. அரசன் தமிழ்மொழியைப் பெரிதும் ஆதரித்தான்; சைவ, வைணவ, பௌத்த கோவில்களுக்கு வேண்டிய உதவி செய்தான்; 'கங்கை கொண்ட சோழபுரம்' என்னும் புதியதொரு நகரத்தைத் திருச்சிராப்பள்ளி ஜில்லா வில் நியமித்தான்; அங்கொரு சிவன் கோவிலே வியப்புறத்தக்க வாறு கட்டிப் புகழ் பெற்முன். சோழ வேந்தன் மனேவியர் பலரையும், மக்கள் பலரையும் உடையவன்; எல்லா மதங்களிட மும் ஒத்த அன்புடையவன். எனினும், அவன் சைவன் ஆவான்.

தமிழ்நாட்டின் பெரும்பகுதியை அடிப்படுத்தியாண்ட இராஜேந்திரசோழன், தன் கங்கை விஜயத்துக்கப்பால் கட்டிய நகரம் **கங்கை கொண்ட சோழபுரம்** என்பது. இது திருச்சிராப் பள்ளி ஜில்லாவில் உடையார் பாளேயம் தாலுக்காவில் இப் பொழுது ஒரு சிற்றூராக இருக்கின்றது. ஆயினும், இவ்வூர் ஒரு காலத்தில் பெரிய நகரமாக விளங்கியது என்பதை இதைப் பார்ப்பவர் எவரும் எளிதில் அறிதல் கூடும். அக்காலத்தில் இந்நகரத்தின் பல பாகங்கட்கும் இடப்பட்டிருந்த பெயர்களே இப்பொழுதும் சுற்றுப்புறக் கிராமங்கட்கு வழங்கிவருகின்றன. இவ்வூர் இப்பொழுது காடும் செடியும் வளர்ந்து பாழாய்க் கிடக்கிறது.

இன்று இந்நகர எல்லேயில் காணப்படுபவை பெரிய **சிவன் கோவிலும், பெரிய ஏரியுமே** ஆகும். இராஜேந்திரன் கட்டிய கோவில் அவன் தந்தையான இராஜ ராஜன் தஞ்சாவூரில் கட்

டிய பிருஹதீசுவரர் ஆலயத்தைப் போன்றதேயாகும். அதன் பெயர் 'கங்கை கொண்ட சோழீசுவரம்' என்பது. அஃது ஆறு கோபுரங்களைப் பெற்றிருந்தது; சிற்ப வேலைப்பாடு சிறக்க அமைந்துள்ளது. அக்கோவிலின் பெரும்பகுதி இப்பொழுது இடிந்து கிடக்கிறது. அதன் வெளிப்புறத்து மதில் காணப்படவில்லை. கிழக்குக் கோபுரத்தைத் தவிரப் பிற



கங்கை கொண்ட சோழீசுவரர் கோவில்

கோபுரங்கள் இடிந்துவிட்டன. இப்பொழுது காட்சி அளிப்பவை கர்ப்பக்கிருஹமும் அதனைச் சுற்றியுள்ள பிராகாரமுமே ஆகும்.

இக்கோவில் விமானம் தஞ்சைப் பெரிய கோவில் விமானத்தைப் போலவே அமைந்துள்ளது. இது நூறடிச் சதுரமாக

அமைந்துள்ளது; ஒன்பது அடுக்குகளை உடையது; முதல் இரண்டு அடுக்குகள் நிமிர்ந்து ஒன்றன்மேல் ஒன்றாக இருக்கின்றன. மற்றவை மேலே போகப் போகச் சிறுத்துக் குறுகிச் செல்கின்றன. விமானத்தின் நாற்புறங்களிலும் வாசல்களும், மாடங்களும் உள்ளன. விமானத்தில் அழகான வேலைப்பாடுகொண்ட பதுமைகள் அமைந்துள்ளன. உச்சியில் ஒரே கல்லால் ஆன சிகரம் இருக்கின்றது.அதன் கலசம் இப்பொழுது காணப்படவில்லை. இந்த விமானம் மாத்திரம் 170 அடி உயரம் உள்ளது. கோவிலின் மூலலிங்கம் ஒற்றைக் கல்லால் அமைக்கப்பட்டுப் பெரியதாக இருக்கின்றது. அஃது இப்பொழுது உச்சியில் பிளப்புண்டு கிடக்கிறது. இடியால் பிளப்புண்டதென்று அவ்வூரார் கூறுகின்றனர். தஞ்சைப் பெரிய கோவிலைப் பாடிச் சிறப்பித்த **கருவூர்த் தேவர்** என்னும் சைவப் பெரியார் இக்கோவிற் பெருமானையும் ஒரு பதிகத்தால் போற்றியுள்ளார். அப்பதிகம் **திருவிசைப்பா** என்னும் நூலில் உள்ளது.

இராஜேந்திரன் வெட்டுவித்த ஏரி **சோழ கங்கம்** என்பது. இஃது இப்பொழுது 'பொன்னேரி' என வழங்குகிறது. இது நகரத்துக்கருகே இப்பொழுது மணல் கொண்டு கிடக்கிறது. இது தெற்கு வடக்காக 16 மைல் நீளமுள்ளதாக இருந்தது; பலம் பொருந்திய கரையைப் பெற்றிருந்தது. கொள்ளிடத்திலிருந்து இதற்குத் தண்ணீர் வர 60 மைல் நீளமுள்ள கால்வாய் வெட்டப்பட்டிருந்தது. வடக்கே வெள்ளாற்றிலிருந்து நீர்வரக் கால்வாய் இருந்தது. இக்கால்வாய்களின் கரைகள் இன்றும் காணப்படுகின்றன. சமதளமான இவ்விடத்தில் இவ்வளவு பெரிய ஏரியை அமைத்துப் பலமான கரைகளைக் கட்டிப் பள்ளத்திலிருந்து மேட்டில் உள்ள இவ்வேரிக்கு நீரைக் கொண்டுவரச் செய்த சோழன் ஆற்றலை எவ்வாறு புகழ்வது! இந்தியாவில் இவ்வேரியே வியக்கத் தக்கதாகும். மிக்க புகழ்

பெற்ற **போஜபுரத்து ஏரி**யும் இதற்கு இணையாகாது. தென் ஆற்காடு ஜில்லாவில் உள்ள **'வீராணம்'** ஏரியே இதன் வடிகாலாக இருந்ததெனின், இதன் சிறப்பை என்னென்பது! இஃது அக் காலத்தில் சோழ நாட்டுக்கு எவ்வளவு சேவை செய்து வந்தது என்பதை யாரே விளக்க வல்லார்! சோணாட்டை வளமிக்க நாடாகச்செய்து கடல்போல் காட்சி அளித்த இவ்வேரி, இன்று பொட்டலாக இருப்பதைக் காண வருந்தாதார் யாவர்?

நாட்டில் பக்தி மார்க்கத்தையும், வீரத்தையும், அரசியல் திறமையையும், நகரங்களையும் ஏரிகளையும் ஆக்குந் திறனையும் நிலைபெறச் செய்த இப்பேரரசனைத் தமிழ் மக்கள் மறத்தல் இயலாது.

1. அரும்பத விளக்கம்

மரபினர் - பரம்பரையினர், முற்காலச்சோழர் - கி. பி. 2-ஆம் நூற்றாண்டிலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் இருந்த சங்க காலச் சோழர், பிற்காலச்சோழர் - கி. பி. 7-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட சோழர், மும்முடி - சேர, சோழ, பாண்டியர் முடிகள், விருது - பட்டம்.

2. கேள்விகள்

1. முற்காலச் சோழர் - பிற்காலச் சோழர் யாவர்? முற்காலம் - பிற்காலம் யாவை?
2. மும்முடிச் சோழன் - பெயர்க்காரணம் யாது?
3. இராஜேந்திரன் போர்ச் செயல்கள் எவை?
4. இராஜேந்திரன் நாட்டை எப்படிப் பிரித்து ஆட்சி நடத்தினான்?
5. உத்தியோகஸ்தர் பெற்ற பட்டங்கள் எவை?
6. அரசியல் உத்தியோகஸ்தர்கள் யாவர்?

7. அவனுடைய குணாதிசயங்கள் எவை?
8. கங்கை கொண்ட சோழபுரம்—யாது?
9. அந்நகர அமைப்பு யாது?
10. அங்குள்ள சிவன் கோவிலைப்பற்றி யாது அறிவாய்?
11. சோழ கங்கம் என்பது யாது? அதன் அமைப்பு யாது?
12. அவ்வேரியின் சிறப்பு யாது?

3. இலக்கணம்

குற்றியல் உகரம்

(1) தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து வரும் உகரம் குற்றியல் உகரம் எனப்படும். அது தனிக் குற்றெழுத்தைச் சாராது வல்லின மெய்யெழுத்தோடு கூடி மொழிகளின் ஈற்றில் வரும்.

(2) இக்குற்றியலுகரம் தன் அயலெழுத்தை நோக்கி நெடிற்றொடர்க் குற்றியலுகரம், ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம், உயிர்த் தொடர்க் குற்றியலுகரம், வன்றொடர்க் குற்றியலுகரம், மென்றொடர்க் குற்றியலுகரம், இடைத் தொடர்க் குற்றியலுகரமென ஆறுவகைப்படும்.

(உ-ம்.) நெடிற்றொடர்க் குற்றியலுகரம் = நாடு, காடு
ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் = இஃது, எஃகு
உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் = அரசு, முதுகு
வன்றொடர்க் குற்றியலுகரம் = பொறுப்பு, சுக்கு
மென்றொடர்க் குற்றியலுகரம் = அன்பு, ஆண்டு
இடைத்தொடர்க் குற்றியலுகரம் = சார்பு, மார்பு

முற்றியல் உகரம்

குற்றியல் உகரம் அல்லாதது முற்றியல் (ஒரு மாத்திரை ஓசையுள்ள) உகரமே ஆகும். மடு, புழு, கணு - இவற்றில் உள்ள உகரம் முற்றியல் உகரமே.

குற்றியல் இகரம்

குற்றியல் உகரத்தின்முன் வருமொழி முதலில் யகரம் வரின், உகரம் இகரமாகத் திரியும். அஃது அப்போது குற்றியல் இகரம் எனப்படும். அதன் மாத்திரை அரை.

(உ-ம்.) நாடு + யாது ? = நா (ட் + உ) + யாது ?
= நா (ட் + இ) + யாது ?
= நாடியாது ?

பயிற்சி

1. இப்பாடத்திலிருந்து குற்றியல் உகரச் சொற்கள் ஆறு கூறு.
2. இவை எவ்வகைக் குற்றியல் உகரங்கள் ?
ஒன்று, அழகு, கேடு, சிறப்பு, ஏது, அங்கு, தீது, கருத்து, பருப்பு, முரசு, வேறு, இரண்டு, புலம்பு, நோக்கு, கலப்பு, அஃது, வீழ்து, பந்து, வைப்பு, மூழ்கு, சார்பு.
3. நாட்டு + யாத்திரை, மார்பு + அகலம், ஏது + இது, ஒன்று + ஆனேம், கேடு + அது, வேறு + யார்—சேர்த்துப்படி.
4. கணு, நுணு, மடு, பசு, பாசு, கடு, காடு, புகு, புக்கு, விடு வீடு, கறு, கற்று—இவற்றுள் குற்றியல் உகரங்கள் எவை ? முற்றியல் உகரங்கள் எவை ?
5. பாடத்தின் முதல் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறு.
6. இரண்டாம் பிரிவில் உள்ள வினைமுற்று, வினையெச்ச, பெயரெச்சங்களைக் கூறு.
7. மூன்றும் பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்ச் சொற்களைச் சொல்லு.
8. நான்காம் பிரிவில் உள்ள பொது-சிறப்பு, இடுகுறி-காரணப் பெயர்களைக் குறி.
9. ஐந்தாம் பிரிவில் இருக்கும் தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை, செயப்படுபொருள் குன்றிய வினை, குன்றுவினைகளைக் கூறு.
10. ஆறும் பிரிவில் உள்ள வேற்றுமை உருபுகளைச் சொல்லு.

11. கோவில், மணியடி, மண்ணருமை, நிலமிது, சேவடி-பிரித்துப் புணர்ச்சி விதி கூறு.

12. கீழ்வரும் வாக்கியங்களுக்கு ஏற்ற எழுவாய் தந்து எழுது:

(i) விடைபெறுக.

(ii) பன்னிரண்டு ஆண்டுகள் வரி செலுத்த வேண்டா.

13. நீ படுத்திருக்கும் இடமோ பிணங்கள் சூழ்ந்த சுடுகாடு. ['படுத்திருக்கிருய்' என்ற பயனிலையை வைத்து எழுது.]

14. அரசியே, நீ இத்துயர் அடைவதும் இக்காட்சியை நான் காண நேர்ந்ததும் நான் செய்த பாவத்தின் பயனன்ருே? [பயனுல், அடைவதை, நேர்ந்தது என்ற சொற்கள் வருமாறு வாக்கியத்தை மாற்றி அமைக்க.]

---

2. எனது அல்லஹபாத் யாத்திரை

நான் சென்ற கோடை விடுமுறையில் என் பெற்ருேருடன் வட இந்தியாவில் உள்ள ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த **அல்லஹபாத்** நகரம் சென்றேன். அங்குள்ள இயற்கைக் காட்சிகளும் செயற்கைக் காட்சிகளும் என் இதயத்தில் ஊடுருவின என்று கூறுதல் மிகையாகாது. இந்தியாவில் காசி, ஹரித்துவாரம் முதலிய சிறந்த நகரங்களைவிட அல்லஹபாத் சிறந்ததென்றே கூறலாம்.

கங்கையும் யமுனையும் ஒன்று சேருமிடமாதலின், அஃது உயர்ந்ததாகும். இவ்விரண்டு பெரு நதிகளும் கலக்குமிடத்தில், சிறிது வெளுத்த கங்கைப் பிரவாகத்துக்கும் கருநீலமான யமுனைப் பிரவாகத்துக்கும் நடுவிற் கோடு கிழித்தாற்போல் நெடுந்தூரம்வரை ஒரு **வெண்மைக்கோடு** தெரிகிறது. அது '**சரஸ்வதி**' என்று கூறப்படுகின்றது. இங்ஙனம் அல்லஹ

பாத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி என்னும் மூன்று ஆறுகள கலத்தலால், '**திரிவேணி**' என்றும் அது கூறப்படும்.

இவ்விடம் மிகப் பழைய காலத்திலிருந்தே சிறந்ததாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இங்கு **முனிவர்** பலர் தவம் செய்து கொண்டிருந்தனர். **புத்தர் பெருமான்** தம் உயரிய கொள்கைகளை இங்கு உபதேசித்தனர்; அறம் வளர்த்த **அசோக மன்னர்** இங்குக் கற்றூண் நட்டுப் புத்த மதக் கொள்கைகளை மக்கட்குப் போதித்தார். இங்குத்தான் **ஹர்ஷவர்த்தனர்** பண்டிதர்களையும் அறிஞர்களையும் வரவேற்று மத சம்பந்தமான மஹா நாடுகளைக் கூட்டினர். சீன யாத்ரிகரான **ஹியூன்ஸங்** இம்மஹா நாடுகளைக் கண்டு களித்த இடமும் இதுதான். **சங்கராச்சாரியார்** 'மக்கட்கு ஆத்ம ஞானம் இன்றியமையாதது' என்னும் உண்மையை விளக்கிப் பேசியதும் இங்குத்தான். இங்ஙனம் பெரியோர் பலர் இங்குச் செய்த சொற்பொழிவுகளும் உபதேசங்களும் பலவாம்.

மொகலாய மன்னரான **அக்பர்** புண்ணிய நகரமொன்றை இங்குத்தான் ஏற்படுத்தினர்; அதற்குக் 'கடவுளின் நகரம்' என்ற பொருள் கொண்ட 'அல்லஹபாத்' என்னும் பெயர் இட்டார். கி.பி. 1765-ல் **ஷா ஆலம் பாஷா** இராபர்ட் கிளைவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையில் அல்லஹபாத்துக்குப் பதிலாக வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா முதலியவற்றைக் கிழக்கிந்திய கம்பெனியாருக்குக் கொடுத்தார் எனின், அல்லஹபாத்தை அவர் எவ்வளவு சிறந்த நகரமாக மதித்திருந்தார் என்பது விளங்குகிறதன்றோ? 1858-ல் **லார்ட் கானிங்** அல்லஹபாத் கோட்டை மதில்மீது நின்றே கிழக்கிந்திய அரசியலைத் தாம் ஏற்றுக்கொண்டதாக விக்டோரியா மஹாராணியார் அனுப்பிய நற்பத்திரத்தைப் படித்தார். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் அல்லஹபாத் மத்திய மாகாணத்தின் தலைநகரமாக விளங்கிவருகின்றது.

சிவன் கோவிலும் வைணவக் கோவிலும் பரத்வாச முனிவர் கோவிலும் வாசுகியின் கோவிலும் ஆதிசேடன் ஆலயமும் அழியா ஆலமரம் ஒன்றும் முனிவர் பர்ணசாலைகளும் சேர்ந்து திரிவேணியை அழகுறச் செய்கின்றன. இராமரும் பாண்டவரும் இப்புண்ணிய பூமியைத் தரிசித்ததாக இதிகாசங்கள் கூறுகின்றன.

அல்லஹபாத்துக்கு உள்ள இயற்கை அழகோடு சேர்ந்துள்ள செயற்கை அழகு பார்க்கத்தக்கது. **அக்பர்** சக்கரவர்த்தியின் கோட்டையானது கண்டு களிக்கத் தக்கது. அக்கோட்டைக்குள் மிக்க அழகமைந்த அக்பரது அரண்மனை இந்தியாவின் பண்டைச் சிறப்பை விளக்கி நிற்கின்றது. அசோகன் அழகுற நாட்டிய கற்றூண் ஒன்று இக்கோட்டைக்குள் இருக்கின்றது. இக்காலத்தில் இக்கோட்டையைப் போர்க்கருவிகள் வைக்கும் இடமாக அரசியலார் பயன்படுத்துகின்றனர். இரயில்வே நிலையத்துக்கு அருகில் உள்ள **குஸ்ருபாக்** என்பது மொகலாயர் தம் சிறப்பைக் குறிக்கும் மற்றோர் அடையாளம் ஆகும். **ஜஹாங்கீர்** மன்னரின் மூத்த மகனான குஸ்ருவின் உடல் அங்கு அடக்கஞ் செய்யப்பெற்றுப் பெரிய கோரி கட்டப்பட்டுள்ளது. அதன் அருகில் குஸ்ருவின் தாயார் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அல்லஹபாத் நகரில் உள்ள அழகிய கட்டிடங்களும் சிங்காரப் பூஞ்சோலைகளும் கண்டு களிக்கத் தக்கவை. அங்குப் பல கலாசாலைகள் இருக்கின்றன. பெரிய சங்கங்கள் இருந்து பல துறைகளில் வேலை செய்கின்றன; நூல் நிலயங்களும் விளையாடும் இடங்களும் அறச்சாலைகளும் இருந்துவருகின்றன.

அவ்விடத்தில் நடைபெறும் **மகமேளா, கும்பமேளா** என்னும் இரண்டு சிறந்த விழாக்கள் காணத்தக்கவையாம். ஆண்டுதோறும் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் சூரியன் மகர ரேகை

யில் இருக்கையில் **மகமேளா** கொண்டாடப்படுகிறது. பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை **கும்பமேளா** நடைபெறுகின்றது. இக்காலங்களில் இலக்ஷக்கணக்கான இந்தியர் அல்லஹபாத் சென்று சங்கம இடத்தில் நீராடிப் பூசை புரிவர்.

கங்கை நதியின் வெண்ணிறம் வாய்ந்த நீர்ப்பெருக்கம் கருநிறம் பெற்ற யமுனை நீருடன் கலந்து ஒளிரும் காட்சியைப் பார்க்கும் பொழுதும், காலையில் கதிரவன் கிரணங்கள் நீர்த் துளிகளில் பல நிறமாக மாறி விளையாடலைக் காணும்பொழுதும், அமைதி கெழுமிய இரவில் தண்மதிக் கிரணங்கள் சங்கம நீரைத் தழுவி முத்தமிட்டுக் களிக்கும் காட்சியைப் பார்க்கும் பொழுதும் கன்மனம் படைத்தவரும் இயற்கை எழிலை நுகர்ந்து இன்புற்று இந்தியத் தாயின் இயற்கை அழகில் ஈடுபடாதிரார்.

1. அரும்பத விளக்கம்

ஊடுருவின - தைத்தன, மிகையாகாது - அதிகமாகாது, பிரவாகம் - வெள்ளம், திரி - மூன்று, திலகம் - பொட்டு, இதிகாசங்கள் - பாரதமும் இராமாயணமும், நுகர்ந்து - அனுபவித்து, கெழுமிய - பொருந்திய.

2. கேள்விகள்

1. அல்லஹபாத் 'திரிவேணி' எனப்படுகிறது—ஏன்?
2. அல்லஹபாத் சரித்திரப் புகழ்பெற்ற நகரம்-எப்படி?
3. திரிவேணிக்குத் திலகமாக உள்ளவை எவை?
4. அங்குள்ள கட்டிடங்கள் யாவை? அவற்றின் சிறப்பு யாது?
5. அங்கு ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்கள் எவை?
6. இயற்கை அழகில் ஈடுபடுவர்—யார்? எப்பொழுது?

3. இலக்கணம்

குற்றியல் உகரம், முற்றியல் உகரப் புணர்ச்சி

1. (1) குற்றியல் உகரத்தின் முன் வருமொழி முதலில் உயிர் வரின், குற்றியல் உகரம் தான் ஏறியுள்ள மெய்யைவிட்டு ஓடும்.

(உ-ம்.) காசில்லை = காசு + இல்லை
= கா + (ச் + உ) + இல்லை
= கா + ச் + இல்லை—'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்பது விதி.
= **காசில்லை.**

(2) குற்றியல் உகரத்தின் முன் வருமொழி முதலில் **ய**-வரின், குற்றியல் உகரம் குற்றியல் இகரமாகத் திரியும்.

(உ-ம்.) நாடியாது = நாடு + யாது
= நா + (ட் + உ) + யாது
= நா + (ட் + இ) + யாது—'**யவ்வரின் இய்யாம்**' என்பது விதி.
= நா + டி + யாது
= **நாடியாது**

(3) முற்றியல் உகரத்தின் முன் உயிர்வரின், சில இடங்களில் முற்றியல் உகரம் தான் ஏறியுள்ள மெய்யை விட்டுக்கெடும்.

(உம்.-) செலவானது = செல(வ் + உ) + ஆனது
= செல + (வ்) + ஆனது - 'முற்றும் அற்று ஒரோ வழி' என்பது விதி.
= **செலவானது.**

(4) முற்றியல் உகரத்தின் முன் **ய**-வரின், முற்றியல் உகரம் இகரமாகத் திரியும்.

(உ-ம்.) செலவியாது ? = செல + (வ் + உ) + யாது?
= செல + (வ் + இ) + யாது? — 'முற்றும் அற்று ஒரோ வழி' என்பது விதி.
= செல + வி + யாது ?
= செலவியாது ?

பயிற்சி

1. நாடானது, கேடுற்றது, வரவென்ன, செலவென்ன, கண்டொன்று, பருப்பழகு, வரகருமை—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறு.

2. பாடு, பட்டு, மன்று, வீழ்து, இஃது, கடுகு.—இவை என்னென்ன தொடர்க் குற்றியல் உகரங்கள்?

3. பாடத்தின் முதல் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறு.

4. இரண்டாம் பிரிவில் இருக்கும் அறுவகைப் பெயர்களைச் சொல்லு.

5. மூன்றும் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலைகளைக் கூறிப் பொருத்தம் காண்க.

6. நான்காம் பிரிவில் உள்ள முக்கால வினைமுற்றுகளைச் சொல்லு.

7. ஐந்தாம் பிரிவில் இருக்கும் வினையெச்ச, பெயரெச்சங்களைக் கூறு.

8. ஆறும் பிரிவில் உள்ள தன்வினை—பிறவினை, செய்வினை-செயப்பாட்டுவினை, செயப்படுபொருள் குன்றியவினை-குன்றுவினைகளைச் சொல்லு.

9. அல்லஹபாத்தைப் பற்றி 30 வரிகளில் கட்டுரை வரை.

10. ஒவ்வொரு பாராவிற்கும் தலைப்புக் கொடு.

3. படக் காட்சி

படக் காட்சி நாடகத்திலிருந்து பிறந்ததாகும். வெளிச்சத்தில் மனிதன் நிழல் படுவதிலிருந்து இப் படக் காட்சி தோன்றலாயிற்று. இது முதலில் செம்மையுற்றதாக இல்லை. ஆனால் அறிவும் ஆராய்ச்சியும் வளர வளர நடிப்பைத் திறம்படப் படமெடுக்கலாயினர். படத்திற் காணப்பட்ட உருவங்கள் கை கால்களை அசைத்தனவேயன்றி இடம் விட்டு நகர்வதாகத் தோன்றவில்லை. அந்நிலையில் அமெரிக்காவில் இருந்த புகழ்பெற்ற விஞ்ஞானியான **தாமஸ் ஆல்வா எடிசன்** என்பவர் இத்துறையில் ஆராய்ச்சி செய்யலானார். அவர் தமது கூரிய மதி வன்மையால் படக் காட்சியைத் திறமையுறச் செய்து முடித்தார். அவர் வேலையின் பயனாய்ப் படத்தில் காணப்பட்ட உருவங்கள் நகர்வது போலத் தோன்றின; பேசுதல் போலத் தோன்றின. இங்நிலையில் சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்வரை படங்கள் இருந்து வந்தன. ஆனால், அதன் பின்னர் அப்பெரியாரே, தாம் கண்டறிந்த கிராமபோனையும் படக்காட்சியையும் இணைத்து 1912-ல் பேசும் படக் காட்சியைக் கண்டறிந்தார். படத்தில் நடிப்பவர், பேசிய கிராமபோன் தட்டின் ஓசையை மின்சார சக்தியால் பெருகச் செய்து, படச் சுருள் சுழல்கையில் தட்டையும் ஓடச்செய்து, காட்சித் திரைக்குப் பின் மின்சார ஓசை பெருக்கும் கருவியை அமைத்துப் பேசும் படக்

தாமஸ் ஆல்வா எடிஸன்

காட்சியே இப்பெரியார் கண்டு பிடித்தது. இவரது உழைப்பின் பயனேயே இன்று உலகம் கண்டு களிக்கின்றது.

படக்காட்சி ஒன்று தயாரித்தல் எப்படி? அது தயாரிக்கப் பெறும் இடம் 'ஸ்டுடியோ' எனப்படும். அவ்விடம் மிகப் பெரிய மைதானமாகும். அஃது அழகிய சோலையாகவும் இருத்தல் வேண்டும்; படத் தயாரிப்புக்கு உரிய பல வசதிகளை உண்டாக்கிக் கொள்ளும் இடமாக இருத்தல் வேண்டும். அங்கு நடிகர்கள் நடிக்கும்பொழுது படம் எடுக்கும் நிபுணர் ஒழுங்காகப் படம் எடுப்பர். அது 'ஷூட்டிங்' எனப் படும். அவர்கள் பேசுவது முன் சொன்னவாறு கிராமபோன் தட்டுகளில் எடுக்கப்படும். இங்ஙனம் ஒரு படம் எடுக்கக் குறைந்தது மூன்று முதல் ஆறு மாத காலம் ஆகும்.

கதையை எழுதுபவர் ஒருவர்; பாட்டுக்களை இயற்றிக் கொடுப்பவர் ஒருவர்; நடிப்புக் கற்பிப்பவர் ஒருவர்; படம் பிடிப்பவர் ஒருவர்; காட்சிகளைத் தீட்டுபவர் பலர்; வேண்டும் ஆடைகளைத் தைப்பவர் சிலர்; நடிப்பவர் பலர்; ஸ்டுடியோவிலுள்ள சிப்பந்திகள் பலர். இங்ஙனம் பலர் இப் படக்காட்சியால் பிழைக்கின்றனர். ஸ்டுடியோக்களில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது அமெரிக்காவில் உள்ள 'ஹாலி வுட்' நகரில் இருக்கிறது. அந்த இடத்தில் சாதாரண மக்கள் இல்லை. நடிகர்களும் படக் காட்சிக்குச் சம்பந்தமானவர்களுமே இருக்கின்றார்களாம். அவ்விடம் 'பூலோக சுவர்க்கம்' என்று கூறப்படுகிறது.

சென்னை நகரத்தில் சுமார் பத்து ஸ்டுடியோக்கள் உள் ளன. அவற்றுள் தமிழ்ப் படங்களே மிகுதியாக எடுக்கப்படு கின்றன. தெலுங்கு, ஹிந்தி முதலிய படங்கள் கதையிலும்

நடிப்பிலும் முன்னேற்றம் பெற்றுள்ளன. ஆனல் தமிழ்ப் படங்கள் இவ்விரண்டிலும் பிற்போக்கை அடைந்துள்ளன. தமிழ்ப்படம் எடுப்போர் பழைய புராணக் கதைகளையே படம் பிடித்துக்கொண்டு சுவையற்ற நிலையில் போதல் வருத்தத்திற் குரியது. தமிழ் மக்களுடைய பழைய சொத்தாகிய சங்க நூல் களில் உள்ள படிப்பினையுள்ள—தமிழருடைய அறிவாற்றல் களை விளக்கும் காட்சிகளைத் திரட்டிப் படம் பிடித்தலே நன்ருகும். இப்போது **மணிமேகலை** என்னும் தமிழ்க் காவியம் படமேடைக்கு வந்துள்ளது பாராட்டத்தக்கது. இங்ஙனமே சிலப்பதிகாரம், சங்கப்புலவர் வரலாறுகள் முதலியன பட மாகப் பிடிக்கப்படல் வேண்டும். ஔவையார், நக்கீரர், இளங்கோ அடிகள், சீத்தலைச் சாத்தனுர், பண்டைத்தமிழர் வாழ்க்கை அமைந்த கதைகள் இன்ன பிறவும் நாடகமாகவும் படக் காட்சியாகவும் வெளிவரல் வேண்டும். 'கோவலன்' கதை சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருப்பதற்கு மாறுபாடாக எழுதப்பெற்றுத் தவருக நடிக்கப்படுதல் கண்டிக்கத்தக்கது.

தமிழ்ப் படக் காட்சிகளாலும் பிற படக் காட்சிகளா லும் மக்களின் அறிவு மேம்படுகிறதென்பதில் ஐயமில்லை. நாம் காணமுடியாத இடங்களையும், காட்சிகளையும், போர்களையும், பற்பல காட்டு மக்களையும், அவர்தம் பழக்க வழக்கங்களை யும், பிறவற்றையும் கண்டு உலகியலை அறிந்து இன்புறுகிறோம். இவ்வளவில் படக்காட்சிகள் நமக்குப் பேருதவி புரிகின்றன. ஆயினும் ஒழுக்கக் கேடான சில படங்களும் காட்சிகளும் இடையே புகுந்துவிடுவதால் அறிவும் மனவுறுதியுமற்ற மக்கள் கெட்டுவிடவும் அவை காரணமாகின்றன எனல் தவருகாது. வேடிக்கைக் காட்சிகள் ஆபாசமாகப் போகும்படி விடுதல் கூடாது. சீர்திருத்த நோக்குடைய கதைகள் தமிழில் மிகுதல்

வேண்டும். இக்காலத்திற் கேற்றவை அவையே. கம்பர், அம்பிகாபதி, காளமேகம், திருவள்ளுவர், மணிமேகலை முதலிய படங்கள் தமிழில் வந்துள்ளமை பாராட்டற்பாலதே. அவற்ருல் தமிழ் மக்கள் ஓரளவேனும் தமிழறிவு பெற்றுள்ளனர் என்பதில் ஐயமில்லை. இத்தகைய தமிழ்ப் படங்களே பெருகுதல் வேண்டும்.

தமிழ் மக்கள் தமிழ்ப் படங்களைச் சிறப்பாகவும் ஏனைய மொழிகளில் வரும் படங்களைப் பொதுவாகவும் பார்த்து உலகியலை அறிந்து நல்வழிப்படல் வேண்டும்.

1. அரும்பத விளக்கம்

செம்மையுற்றது - பரிபூரணமானது; மதி வன்மை - அறிவு நுட்பம்; மாருக-விரோதமாக.

2. கேள்விகள்

1. படக்காட்சி எப்படி யாரால் இன்றைய நிலையை அடைந்துள்ளது ?
2. படம் பிடிப்பது எப்படி ?
3. 'ஸ்டுடியோ' என்பது யாது? 'ஷூட்டிங்' என்பது என்ன?
4. தமிழ்ப்படங்கள் முன்னேற யாது செய்தல் வேண்டும் ?
5. படக்காட்சியால் நாம் பெறும் பயன் யாது ?

3. இலக்கணம்

குற்றியல் உகரத்தின்முன் வல்லினம்

(1) வன்ருெடர்க் குற்றியல் உகரத்தின் முன் வரும் வல்லினம் (க, ச, த, ப) மிகும்.

எழுத்து+கோணல் =எழுத்துக்கோணல்
எழுத்து+சிறியது =எழுத்துச் சிறியது

(2) சில இடங்களில் மென்றொடர்க் குற்றியல் உகரத்தின் முன் வரும் (க, ச, த, ப) மிகும்.

வண்டு +கால் =வண்டுக்கால்.

(3) இடைத்தொடர், நெடில்தொடர், உயிர்த்தொடர், ஆய்தத்தொடர் இவற்றின் முன் வரும் க, ச, த, ப மிகா.

(அ) பொழுது+சொல்=பொழுதுசொல்—இடைத்தொடர்
நாடு +பார் =நாடுபார்—நெடில்தொடர்
கயிறு +திரி =கயிறு திரி—உயிர்த்தொடர்
அஃது +பார் =அஃது பார்—ஆய்தத்தொடர்

(ஆ) போழ்து +போனது = போழ்துபோனது —இடைத்தொடர்
ஆறு +தலை =ஆறுதலை—நெடில்தொடர்
கயிறு +காய்ந்தது =கயிறு காய்ந்தது—உயிர்த்தொடர்
எஃகு +பெரிது =எஃகுபெரிது—ஆய்தத்தொடர்

பயிற்சி

1. இப்பாடத்தின் முதற் பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்ச் சொற்களைச் சொல்லு.
2. இரண்டாம் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப் படுபொருள்களைக் கூறு.
3. மூன்றும் பிரிவில் இருக்கும் முக்கால வினைமுற்றுக்களைக் குறிப்பிடு.
4. நான்காம் பிரிவில் உள்ள செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக மாற்று.
5. ஐந்தாம் பிரிவில் இருக்கும் தன்வினைகளைப் பிறவினைகள் ஆக்கு.

6. ஆரும் பிரிவில் உள்ள செயப்படுபொருள் குன்றிய வினைகளையும் குன்ரு வினைகளையும் கூறு.

7. ஏழாம் பிரிவில் உள்ள பெயர், வினை, வினைப்பயனிலை களைச் சொல்லு.

8. ஏழாம் பிரிவில் இருக்கும் வேற்றுமை உருபுகளைக் குறி.

9. இப் பாடப் பொருளைப் பிரிவுகட்குத் தலைப்புக் கொடுத்து ஒரு கட்டுரையாக எழுது.

10. படக்காட்சியின் தோற்றமும் வளர்ச்சியும்-தமிழ்நாட்டுப் படக்காட்சிகள்-செய்ய வேண்டுவன-முடிவு: இக்குறிப்பு களைக் கொண்டு 4 பிரிவுகளில் ஒரு கட்டுரை வரை.

11. பின்வரும் சொற்களை அடியிற் கண்டவாறு அட்ட வணையிட்டு வகைப்படுத்திக் காட்டு.

சுட்டுப் பெயர்	வினுப் பெயர்	அளவைப் பெயர்	ஆகுபெயர்	வினையால ணையும் பெயர்

அவன், எவன், ஒன்று, யார், இவை, ஆயிரம், வருவோர், மயில், யாவை, காதம், நூறு, அவர்கள், எவர்கள், போனவன், இளங்சிங்கம் கூறினன், வந்தவள், மணங்கு, அவள், வெள்ளை அடித்தான், எவள், வீசை, வீசை நான் கணு.

12. பின்வரும் வினைச் சொற்களுள், செயப்படுபொருள் குன்றிய வினையையும், செயப்படுபொருள் குன்ருவினை யையும் எடுத்துக் கூறு.

காணலாம், உள்ளன, உணர்கின்ருன், தோன்றுகிறது, குதிக்கின்ரேம், பார்க்கிரேம், மகிழ்கிரேம், இல்லை, அமைத்தான், பழகினுன், தொடங்கினுன், செய்தான்.

13. அடியில் வரும் வாக்கியங்களை மாதிரியிற் காட்டியபடி மாற்று.

மாதிரி:—எரிமலைகள் தீக்குழம்பைக் கக்குகின்றன.

தீக்குழம்பு எரிமலைகளால் கக்கப்படுகின்றது.

(1) நாம் காட்சிகளைக் காண்கிரேம்.
(2) மனிதன் ஆலயங்களை அமைத்தான்.
(3) பூகம்பம் மாளிகைகளைப் புரட்டுகிறது.
(4) மனிதன் செல்வத்தையும் புகழையும் தேடுகிருன்.

---

4. ஒலி பரப்பி

[ரேடியோ]

ரேடியோ என்பது, ஒருவர் ஓரிடத்திற் பேசுவதையோ, பாடுவதையோ பிறிதோர் இடத்திற் கேட்கச் செய்யும் கருவி களின் தொகுதியாகும். இஃது இக்காலத்தில் நாடெங்கும் ஏற் படுத்தப்பட்டுள்ளது.

மின்சார அலைகள் ஒரு விநுடிக்குச் சற்றேறக்குறைய 1,86,000 மைல் தொலைவு விரைந்து செல்லும் இயல்புடையன. அவை 'விண்' எனப்படும் 'ஈதர்' வழியே கொண்டு செல்லப்படு கின்றன. அவை வான்வழிச் செல்லுங்கால் வானில் தோன்றும் எல்லாப் பொருள்களையும் ஊடுருவிச் செல்லும். ஓர் இடத்தில் நாம் பேசும் ஒலியை மின்சார அலைகளாக மாற்றும் கருவி அமைக்கப்பட்டிருக்கும். நாம் அவ்விடத்திற்ருன் பேசுதல் வேண்டும். நாம் அங்ஙனம் பேசும் செய்தி குறிப்பிட்ட இடத் திற்கு விண் அலைகளின் உதவியால் அனுப்பப்படுகின்றது.

அங்கு இம் மின்சார அலைகளை மீண்டும் பழைய ஒலி வடிவமாக மாற்றவல்ல கருவி அமைக்கப்பட்டுள்ளது. அதன் உதவியால் செய்தி எல்லோருக்கும் கேட்கும்.

இவ்வாறே பாடகர் ஒருவர் பாடுகையில், எலக்ட்ரோ மாக்னட் என்னும் மின் காந்தத்தால் ஆகிய கருவி ஒன்று, அப்பாடலில் உள்ள பலவகை ஓசைகளை மின் அலைகளாக மாற்றி, வான் வெளியில் செலுத்துகின்றது. இந்த



ஒலி பரப்பி

அலைகளைத் தூரத்தில் உள்ள 'ரிசீவர்ஸ்' என்னும் 'வாங்கிகள்' ஏற்றுக்கொண்டு, இவற்றை 'ஒலிபெருக்கி' என்னும் 'லவுட் ஸ்பீக்கர்' மீது பாய்ச்சி, அப்பாடலைத் தெளிவாய்க் கேட்கும்படி செய்கின்றன. இக்கருவிகள் அனைத்தும் சேர்ந்த அமைப்பே ரேடியோ (ஒலிபரப்பி) என்பது.

இவ்வியத்தகு அமைப்பைக் கண்டறிந்த பெரியார் இத்தாலி நாட்டு விஞ்ஞானியாகிய **மார்க்கோனி** என்பவர் ஆவர். இவர், இளமை முதலே இத்தகைய ஆராய்ச்சிகளில் பேருக்கம் கொண்டவர். இவரே மின்சார அலைகளைக் கண்டு பிடித்தவர்; அவற்றைத் தம் விருப்பம் போல மாற்றும் முறையைக் கண்டு பிடித்தவரும்இவரே. இவர் 1896-ல் **கம்பியில்லாத் தந்தி**யைக் கண்டறிந்தார். இவர், தமது 27 வயதிற்குள்ளேயே**நோபல்பரிசு**பெற்றார்; ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவுக்குக் கம்பியில்லாத் தந்திமூலம் பேச வசதியளித்த முதற் பெரியார் இவரே. இவர் பட்ட இன்னல்கள் பல; ஆராய்ச்சியில் இராப்பகலாக உழைத்தார். மறை பொருளில் செய்திகளை அனுப்பப் பல ஆண்டுகள் பாடுபட்டு உழைத்து

மார்க்கோனி

வெற்றிபெற்றார். இப்பெரியார் இத்தாலிய அரசாங்கத்தவரால் நன்கு மதிக்கப் பெற்றார்; உலகப் பல்கலைக் கழகங்களால் மதிப்பளிக்கப்பெற்றார். இவர் கண்டறிந்த ரேடியோ மூலமே 'தொலைக் காட்சி' என்னும் **டெலிவிஷன்** கண்டறிய வழி ஏற்பட்டது. இப்பேரறிஞர் 1937-ல் காலமானார். ஆயினும், இவர் உழைப்பின் பயனை இன்று உலகம் அனுபவித்து வருகின்றது. இப்பெரியார் போன்ற ஆராய்ச்சியாளர்களே 'தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்' ஆவர்.

ஒலி பரப்பியின் பலவகை நன்மைகளிற் சிறந்தது உயிர்களைக் காத்தல் ஆகும். இது வழிதப்பிச் செல்லும் கப்பல்களுக்கு வழிகாட்டியாக உதவுகிறது. ஒரு கப்பல் கடலில் மூழ்கத் தொடங்குமுன் ரேடியோ மூலம் செய்தி அறிவிக்கப்படின், உடனே உதவிக்குப் பல கப்பல்கள் போய் உதவுகின்றன; பிரயாணிகளையும் மாலுமிகளையும் காக்கின்றன. வான ஊர்திகளிற் செல்லும் பிரயாணிகளும் இங்ஙனமே காக்கப்படுகின்றனர். ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள அரசாங்கங்கள் நேருக்கு நேரே பேசிக்கொள்வதைப் போலச் சிறு போழ்தில் பேசிக்கொள்ள இந்த ரேடியோ அமைப்புப் பேருதவியாக இருக்கின்றது. ரேடியோ இத்தகைய பல துறைகளில் பயன்படுகிறது. நமது நாட்டில் நாம் இதனல் டெல்லி, பம்பாய், கல்கத்தா முதலிய இந்திய நகரச் செய்திகளையும் அந்நகரங்களிலிருந்து பாடும் பாடல்களையும், மாஸ்கோ பாரிஸ், பெர்லின், ரோம், லண்டன், டோக்கியோ, வாஷிங்டன் முதலிய அயல்நாட்டு நகரங்களிலிருந்து பேசும் பேச்சுகளையும் பாடும்பாடல்களையும் அவ்வப்பொழுதே கேட்டு மகிழ்கின்ருேம். இம்முறையால், பல நாட்டார் இசைகளையும், பாடல்களையும், பேச்சு முறையையும், பிறவற்றையும் நாம் இருக்கும் இடத்திலிருந்தே கேட்டு இன்புறுகின்ருேம். இப்பெரு வசதியளித்த அறிஞராகிய மார்க்கோனிக்கு நமது நன்றியறிதல் உரியதாகுக.

1. அரும்பத விளக்கம்

தொலைவு - தூரம், பரப்பி - பரப்பும் கருவி, விண் - வானில் உள்ள ஈதர் (ether) என்னும் நீலநிறப் பொருள், வான்-ஆகாயம், காந்தம் - இழுப்புச் சக்தி, தொலைக்காட்சி - தூரத்துப் பொருள்களை நேரே காணுதல், வான ஊர்தி - ஆகாய விமானம்.

2. கேள்விகள்

1. 'ரேடியோ' என்பது யாது?
2. 'ஈதர்' என்பது யாது? மின்சார அலைகள் எப்படிப் பட்டவை?

3. மின்சார அலைகளால் செய்தி எப்படி எட்டுகிறது ?
4. பாடகர் பாட்டு நமக்குக் கேட்பது எப்படி ?
5. ரேடியோ சம்பந்தமான கருவிகள் யாவை ?
6. மார்க்கோனி என்பவர் யாவர் ? அவர் சிறப்பு யாது ?
7. 'டெலிவிஷன்' என்பது என்ன ?
8. ரேடியோவின் சிறந்த நன்மை யாது ?
9. 'மார்க்கோனிக்கு நமது நன்றியறிதல் உரியதாகுக'.—ஏன் ?

3. இலக்கணம்

(1) பகுபதம்—பகாப்பதம்.

சொற்கள், பகுபதம் பகாப்பதம் என இருவகைப்படும்.

(அ) கண், உண், காண்—பகாப்பதம்.

(ஆ) கண்ணன், உண்டான், கண்டான்—பகுபதம்.

(2) உறுப்பு இலக்கணம்.

பகுபதத்தில்தான் முதனிலை, இடைநிலை, இறுதிநிலை முதலிய சொல் உறுப்புக்கள் அமைந்திருக்கும். சென்ற வகுப்பில் முதனிலை (பகுதி), இறுதிநிலை (விகுதி), இடைநிலை என்ற மூன்றைப்பற்றியே கவனித்தோம். இங்கு அம்மூன்றுடன் ஏனைய சந்தி, விகாரம், சாரியை என்பவற்றையும் படிப்போம்.

(அ) முதனிலை (பகுதி)—சொல்லுக்கு முதலில் நிற்பது.

(ஆ) இறுதிநிலை (விகுதி)- ,, ஈற்றில் ,,

(இ) இடைநிலை — ,, இடையில் ,,

(ஈ) சாரியை —இடைநிலைக்கும் இறுதிநிலைக்கும் இடையில் பெரும்பாலும் நிற்பது.

(உ) சந்தி —முதனிலைக்கும் இடைநிலைக்கும் இடையில் பெரும்பாலும் நிற்பது.

(ஊ) விகாரம் —பகுதி குறைதல், வலி-மெலியாதல், மெலி-வலியாதல், நெடில்-குறில் ஆதல், குறில்-நெடில் ஆதல் முதலியன.

இங்ஙனம் ஒரு சொல்லைப் பல உறுப்புக்களாகப் பிரித்து இலக்கணம் கூறுதல் பகுபத இலக்கணம் கூறுதல் அல்லது உறுப்பு இலக்கணம் கூறுதல் எனப்படும்.

பயிற்சி

1. பின்வரும் பெயர்ச்சொற்களைக் கீழ்க்கண்டவாறு அட்டவணையிட்டு வகைப்படுத்தி எழுது:

பொருட் பெயர்	இடப் பெயர்	காலப் பெயர்	சினைப் பெயர்	பண்புப் பெயர்	தொழிற் பெயர்

கோழி, தோழி, வேலன், தோட்டம், காடு, குழி, நேரம், அழகு, பெருமை, ஓட்டம், மறதி, இலை, வேர், பழம், புதுமை, பலகை, பரப்பு, தொகுதி, பரவை, பறவை, குளம்பு, உடுப்பு.

2. பின்வரும் பெயர்ச்சொற்களை அடியிற் கண்டவாறு அட்டவணையிட்டு வகைப்படுத்திக் காட்டு:

கிளைப் பெயர்	சாதிப் பெயர்	அளவைப் பெயர்	சுட்டுப் பெயர்	வினாப் பெயர்

வேளாளன், அண்ணன், ஆழாக்கு, தாயார், எவன், நாவிதன், இவர்கள், மரக்கால், ஐம்பது, ஆயிரம், இது, எது, எவன், மாமன், தமக்கை.

3. தொழிற்பெயருக்கும்,வினையாலணையும் பெயருக்குமுள்ள வேறுபாடுகளை உதாரணங்களின் மூலம் விளக்கிக் காட்டு.

4. பின்கண்ட ஒவ்வொரு வகைப் பெயருக்கும் முறையே ஐந்தைந்து உதாரணங்கள் தருக:

எண்ணினடியாகப் பிறந்தபெயர், வினையாலணையும் பெயர், உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், ஆண்பாற்பெயர், பெண் பாற் பெயர், பலர்பாற்பெயர், ஒன்றன்பாற்பெயர், பலவின்பாற் பெயர், ஒருமைப்பெயர், பன்மைப்பெயர், தன்மைப்பெயர், முன் னிலைப்பெயர், படர்க்கைப் பெயர்.

5. எட்டு வேற்றுமைக்கும் உரிய உருபுகளைக் கூறு.

6. சொல்லுருபுகள் என்பவை எவை? மூன்றும் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறும் வேற் றுமை இவற்றிற்குரிய சொல்லுருபுகளை முறையே கூறி, அவை அமைந்து வருமாறு வாக்கியங்களை அமைத்துக் காட்டுக.

7. ஒவ்வொரு பிரிவையும் மௌனமாகப் படி; பிரிவு களுக்குத் தக்க தலைப்புக் கொடு.

8. ரேடியோவின் தோற்றம் - அதன் அமைப்பு - அதன் பயன்: இக் குறிப்புகள் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

5. கைத்தொழில்

[பாட்டு]

உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ ?
சோம்பலின் வாராத் துயரமும் உளவோ ?
எந்த நாட்டினில் வந்தவர் ஆயினும்,
வேண்டிய பொருளெலாம் விளைத்தல் வேண்டும்.
மண்ணிடை விளைவன மண்ணிடை வளருக;
மனித முயற்சியால் வருவன வருக.
பருத்தி நூலினும் பட்டு நூலினும்
பொன்னினின் இழைத்த நுண்ணிய நூலினும்
மிக்க விலைபெறும் வியன் துகில் நெய்வோர்
மானங் காக்கும் மதிப்பினர் அன்றோ ?
இரும்பினை அடித்தும் எஃகினை அடித்தும்
பெரும்பொறி முதலாச் சிறுபொறி ஈறா
நாட்டின் நலத்தினுக் கீட்டினர் தருவோர்
உலகங் காக்கும் உத்தமர் அன்றோ ?
எள்ளின் எண்ணெய் எடுக்கும் தொழிலும்
பொன்னினைப் பணியெனப் புனையும் தொழிலும்
செம்பினைத் தகடெனச் செய்யும் தொழிலும்
ஈயம் வார்க்கும் இயல்புறு தொழிலும்
வெள்ளியைப் பலபட விளக்குந் தொழிலும்
கரும்பினைச் சருக்கரை காய்ச்சுந் தொழிலும்
தேனினை முறையே திரட்டுந் தொழிலும்
கல்லினை மரத்தைக் கடையுந் தொழிலும்
புல்லினைப் பாயாய்ப் புனையும் தொழிலும்
வளையல் செய்யும் வாய்ப்புறு தொழிலும்
கண்ணடி செய்யும் கவினுறு தொழிலும்
காகிதஞ் செய்யுங் கருத்துறு தொழிலும்

மையின் வகைகளை வகுக்கும் தொழிலும்
அச்சின் வகைகளை அமைக்கும் தொழிலும்
நீரிலும் நிலத்திலும் நிறைவா னத்திலும்
விரைவினிற் செலுத்தும் வியப்புள ஊர்திகள்
செய்யுந் தொழிலும் தேயச் செல்வமே;
தொழில்வளம் பெருகா தழிவுறு நாடுகள்
பிறநாட் டவராற் பெறலெளி தாகும்;
சட்டையும் பாகையும் இட்டமோ டணிந்து
கைகளைக் கட்டியும் கருத்தினை அடக்கியும்
சேவகஞ் செய்யுஞ் சிறுமையைக் காட்டிலும்,
விரும்பிய தொழிலின் வரும்பயன் அடையக்
கைகளை வருத்திக் காவலர் நாவலர்
மேவலர் போற்ற விளங்குதல் நன்றே.
உயிருடன் வாழும் ஒவ்வொரு மனிதனும்
தனக்கும் பிறர்க்கும் தகவே உதவ
எவ்வகைத் தொழிலும் இயற்றல் நன்றே;
நீரும் நிலமும் நிறைவுற அமைந்தும்
கைத்தொழில் வளராக் காரணத் தாலே
வறுமையின் விழுந்து வாடுநா டுளவே;
நாடு நலம்பெற நம்மால் இயன்றள(வு)
அருந்தொழில் புரிந்தே அன்புற வாழ்வமே.

1. அரும்பத விளக்கம்

உறுதிகள் - காரியங்கள், **வியன்** - பெரிய, **துகில்** - ஆடை, **பொறி** - கருவிகள், **ஈறு** - கடைசியாக, **ஈட்டினர்** - சம்பாதித்து. **பணி** - நகை, **புனையும்** - செய்யும், **வாய்ப்புறு** - பொருத்தமான, **கவினுறு** - அழகிய, **ஊர்தி** - வாகனம், **காவலர்** - அரசர், **நாவலர்** - புலவர், **மேவலர்** - பகைவர், **தகவே** - தக்கபடி, **உள** - இருக்கின்றன.

2. கேள்விகள்

1. மனித முயற்சியால் பெறத்தக்கவை யாவை ?
2. 'உலகம் காக்கும் உத்தமர்' யாவர் ?
3. பலவகைத் தொழில்கள் எவை ?
4. நமது கடமை யாது ?

3. இலக்கணம்

உறுப்பு இலக்கணம் கூறுதல் :—

(1) கூனன் = கூன் + அன்

↓ ↓

பகுதி விகுதி

இஃது ஈருறுப்புக்களால் முடிந்த பகுபதம்.

(2) கொய்தாள் = கொய் + த் + ஆள்

↓ ↓ ↓

பகுதி விகுதி

இடைநிலை

இது மூன்று உறுப்புக்களால் முடிந்த பகுபதம்.

(3) கொய்தனள்—கொய் + த் + அன் + அள்

↓ ↓ ↓ ↓

பகுதி விகுதி

இடைநிலை சாரியை

இது நான்கு உறுப்புக்களால் முடிந்த பகுபதம்.

(4) அடித்தனள் = அடி + த் + த் + அன் + அள்

↓ ↓ ↓ ↓ ↓

பகுதி இடைநிலை விகுதி

சந்தி சாரியை

இஃது ஐந்து உறுப்புக்களால் முடிந்த பகுபதம்.

(5) அறிந்தனள் = அறி + த்(ந்) + த் + அன் + அள்

↓ ↓ ↓ ↓ ↓

பகுதி இடைநிலை விகுதி

சந்தி சாரியை

{ த்-ந் ஆனது விகாரம் }

இஃது ஆறு உறுப்புக்களால் முடிந்த பகுபதம்.

பயிற்சி

1. பின்கண்ட வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களுக்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமை கூறு :

(1) இராமர் சீதையுடனும் இலக்குவனுடனும் காட்டிற்குச் சென்று பர்ணசாலை அமைத்து வாழ்ந்தனர்.

(2) பிராமணன் மனம் இரங்கிப் புலியின் வார்த்தையை நம்பிக் கதவைத் திறந்துவிட்டான்.

(3) புலி அவனைப் பார்த்து, "இதோ உன்னைக் கொல்லுகிறேன் பார்" என்று கூறி, அவன்மேல் பாயத் தொடங்கிற்று.

(4) நீ உண்மை பேசியதற்காக இந்த வெகுமதியைப் பெற்றுக்கொள்.

(5) நீர் உண்ட மேகம் கருமை நிறமாய் இருக்கும்.

2. பின்வரும் வினைச்சொற்களைப் பின்கண்டவாறு அட்டவணையிட்டு வகைப்படுத்திக் காட்டு:

தன் வினை	பிற வினை	செயப்படு பொருள் குன்றிய வினை	செயப்படு பொருள் குன்றா வினை	செய் வினை	செயப்பாட்டு வினை

படித்தேன், நடந்தாய், உண்பித்தான், எழுப்பு, செய்வி, பாழாக்கப்பட்டன, தின்றான், கொன்றது, பிடிபட்டன, கட்டுவித்தேன், நடந்தாய், தூங்குகிறான், உரித்தான், கற்பான், பாடினான்.

3. பின்கண்ட வினைச்சொற்களுக்கு வகைக்கு ஐந்து வீதம் உதாரணங்கள் தருக:

உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை, தெரிநிலை வினை, குறிப்பு வினை, முற்றுவினை, எச்சவினை.

4. பின்கண்ட வினைப்பகுதிகளினின்று ஐம்பால் மூவிடங்களுக்கும் உரிய வினைமுற்றுக்களை அமைத்துக் காட்டு :

நட, போ, வா, உண், உறு, உரி, உரை, இறை, கல், படி, நில், சொல், ஆடு, தேடு, ஓடு, செய், அள, கற, பற.

5. பின்கண்டவற்றிற்கு முறையே ஐந்தைந்து உதாரணங்கள் தருக :

தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, படர்க்கை வினைமுற்று, ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, இறந்தகால வினைமுற்று, நிகழ்கால வினைமுற்று, எதிர்கால வினைமுற்று.

6. பின்கண்ட வினைப்பகுதிகளினின்று முக்காலங்களுக்கும் உரிய பெயரெச்சங்களை அமைத்துக் காட்டு:

கல், படி, செய், இரு, உரை, அறி, உறு, பெறு, நட, மறு, நில் அடை.

7. பின்கண்ட வினைப் பகுதிகளினின்று முக்காலங்களுக்கும் உரிய வினையெச்சங்களை அமைத்துக் காட்டு:

பாடு, தேடு, அறை, உறு, உரை, உரி, பெறு, போ, இரு.

8. பின்கண்டவற்றிற்கு உதாரணங்கள் தருக:

தன்மைஒருமை எதிர்காலவினைமுற்று, ஆண்பால் இறந்தகால வினைமுற்று, முன்னிலைப்பன்மை வினைமுற்று, பலர்பால் நிகழ்கால எதிர்மறை வினைமுற்று, எதிர்மறைத் தன்மைப்பன்மை வினைமுற்று, உடன்பாட்டுப் பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம், உடன்பாட்டு வினையெச்சம், எதிர்

மறை வினையெச்சம்.

9. இப்பாடத்தின் பொருளை 20 வரிகளில் எழுது.

10. 'கைத்தொழிற் சிறப்பு' என்பதுபற்றி 24 வரிகளில் சிறிய கட்டுரை வரை.

11. அது, ஒன்று, கூறு, பாம்பு, புற்று, இது, நாடு, கற்பு, உறவு—இவற்றில் குற்றியல் உகரங்கள் எவை? முற்றியலுகரங்கள் எவை? காரணங் கூறு.

12. சென்றவன், பரப்புவது, சொன்னவர், சொல்லல், துணிச்சல், சேர்ந்தவள், போதல். -இங்குள்ள வினையாலணையும் பெயர்களையும் தொழிற்பெயர்களையும் எடுத்துக்கூறி, அவை இரண்டிற்குமுள்ள வேறுபாடுகளை விளக்கு.

13. பின்வரும் வாக்கியங்களில் உள்ள வினாவை நீக்கி அமைக்க:—

(1) அவர்கள் அதை நம்புவார்களா?

(2) ஒருகால் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகவே இருக்குமோ?

(3) உண்மையிலேயே உயிருடன் இருந்தால் அநீதி நடக்குமா?

14. அடியில் வரும் வாக்கியங்களை வினா வாக்கியமாக மாற்றி வினாக்குறியையும் இடுக:—

(1) ஒற்றர்களைக்கொண்டு இரகசியமாக விசாரித்தான்.

(2) அக்பர் அவளைத் தம் சொந்தப் பெண்ணைப்போலவே நடத்தினார்.

---

6. இரவீந்திரநாத தாகூர்

இரவீந்திரநாத தாகூர் உலகப் புகழ்பெற்ற மஹா கவிகளுள் ஒருவர். இவர் நமது இந்தியாவில் வங்க மாகாணத்தில் கல்கத்தாவில் பிறந்தவர். இவர் தந்தையார் மஹரிஷி தேவேந்திர நாத தாகூர் என்பவர். இரவீந்திரர் அறிவு முதிர்ந்த தம் தந்தை



இரவீந்திரநாத தாகூர்

யாருடனும் பலவகைத் தொழில்களிற் சிறந்த தம் சகோதர சகோதரிகளுடனும் வளர்ந்து வந்தார்; ஆதலின் இயல்பாகவே இருந்த இவரது நுட்ப அறிவு, பக்க பலத்தால் பயன்பெற லாயிற்று; பண்பட்டு வளர்ந்துவந்த அதன் பயனுக, இவர்

ஆடல்பாடல்களில் பெருவிருப்பம் கொண்டார் ; பள்ளிக்கூடப் படிப்பை அறவே வெறுத்தார்.

இவர் இளமையிலிருந்தே இயற்கை அழகில் ஈடுபட்ட உள்ளம் உடையவர் ; வானம், சூரிய சந்திரர் தோற்றம், விண் மீன்களின் விளக்கம், மலர்ச்சோலைகளின் மாண்பு, மயில்களின் ஆட்டம், குயில்களின் குரல், கிள்ளைகள் பேச்சு, ஆற்றுநீர் ஓட்டம் முதலியன இவர் உள்ளத்தைக் கவர்ந்தன. இவர் தமது வீட்டுத் தோட்டத்தில் ஒருநாளில் பெரும் பொழுதைக் கழித்து வந்தார். அத்தோட்டத்துச் செடி கொடி மரங்கள் மலர்கள் இவை அனைத்தும் இவருடைய தோழர்களாக விளங்கின. இவர், அத்தோட்டத்தில் இருந்த பலவகைப்பட்ட நிறங்களை யுடைய நறுமண மலர்களைப் பார்த்து மகிழ்வார் ; மரங்களைக் கொழுகொம்பாகத் தாவிச் சுற்றிச்சுற்றி ஓடும் கொடிகளின் திறனைக்கண்டு வியப்பார் ; ஒரே நிலத்தில் வளரும் செடிகள் பல, வெவ்வேறு வகை நிறமும் மணமும் கொண்டுள்ளதைக் கண்டு பலவாறு யோசிப்பார்; மலர்களின் அழகைக்கண்டு இன்புறுவார். அவை, தம்மைப் புன்முறுவலோடு நோக்குவ தாக எண்ணி, அளவற்ற மகிழ்ச்சி கொள்வார். இவர் கங்கை யில் நீராடவரும் மக்களைக் கூர்ந்து நோக்குவார் ; மக்களிடம் காணப்பட்ட உயர்வு தாழ்வுகளைக்கண்டு மனம் நோவார் ; குடில்களில் வாழ்ந்துவந்த எளிய மக்களது வாழ்க்கையை எண்ணி இரங்குவார்.

இவரது இதயம் இயற்கை அழகில் ஈடுபட்டிருந்ததால், இவர் இயற்கையாகவே, தம் உள்ளக் கிளர்ச்சியால் கவிபாடும் ஆற்றல் பெற்றார். இவர் இளம் பருவத்தில் இங்ஙனம் புனைந்த பாக்கள் நூற்றுக் கணக்கானவை ஆகும். அவை வங்க மொழி யில் பாடப்பெற்றவை. அவை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்ட பின்னரே இவரை உலகம் மதிக்கத் தொடங்கியது.

இவர் உலகப் பெரும் புலவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டார். ‘ ஆசிரியப் பெரும் புலவர் ’ என மேனுட்டாரால் பாராட்டப்பெற்ருர். ‘மாக்மில்லன் அண்ட் கம்பெனி’யார் இப்பெரியாருடைய பாடல்களேயும் பிறவற்றையும் வெளியிட உரிமை பெற்றுள்ளனர். இவர் நூல்கள் இன்று உலகம் முழுவதும் பாராட்டப்படுகின்றன.

தாகூர் மும்முறை இங்கிலாந்து சென்று மீண்டார்; ஐரோப்பாவில் சிறந்த தலைநகரங்களில் பல அரிய சொற்பொழிவுகள் ஆற்றினுர். அவை நடுநிலையாளர் போற்றத் தக்கனவாக உள்ளன. இவர் மேனுட்டார் படிப்பை விரும்பவில்லை. இவர் சொற்பொழிவுகளைக் கேட்ட மேனுட்டார், இவரைப் ‘ பெரிய ஞானி ’ எனப் புகழ்ந்தனர்.

இவர் கல்கத்தாவுக்கு அருகில் தம் கொள்கைப்படி இயற்கை முறையில் கல்வி புகட்டும் கலாசாலை ஒன்றை ஏற்படுத்தினுர். அதன் பெயர் ‘ **சாந்தி நிகேதனம்** ’ என்பது. அதில் பல நாட்டு மாணவரும் வந்து வாசிக்கின்றனர். அங்கு அழகு, சித்திரம், இசை, நாடகம், நடனம், விஞ்ஞானம், மொழி இவைகளைப் பற்றிய பயிற்சி அளிக்கப்படுகின்றது. மாணவர்கள் தங்கள் வேலைகளை எல்லாம் தாங்களே செய்து கொள்கின்றனர். நீர் இறைத்தல், சமையல் செய்தல், ஆடை துவைத்தல் முதலிய வீட்டு வேலைகளைச் செய்கின்றனர்; கைத்தொழில் செய்கின்றனர்; கவிகள் கட்டுகின்றனர்; சித்திரம் தீட்டுகின்றனர்; நாடகம் ஆடுகின்றனர்; பாடுகின்றனர்; நடனம் செய்கின்றனர்; அவர்களது வாழ்வு இன்ப வாழ்வாக இலங்குகின்றது. ஆசிரியர்களும் அவர்களோடு வாழ்கின்றனர். தாகூர் அவர்களோடு எல்லா வேலைகளையும் உவப்போடு செய்து மகிழ்ந்தார்.

இவர் கொள்கைகள் யாவை? "இயற்கை அழகே கடவுள். மனிதர் அனைவரும் அவ்வியற்கையின் படைப்பே. மனிதர்க்குள் வேறுபாடு இல்லை; ஜாதிகள் இல்லை. மனிதன் இயற்கை அழகில் ஈடுபட்டு இறைவன் நினைவில் ஈடுபடல் வேண்டும் யாவரும் கொண்டு கொடுத்து மனிதஅன்புடன் வாழவேண்டும். எவரும் எத்தொழிலையும் செய்யலாம்; கட்டுப்பாடு எதிலும் இருத்தல் கூடாது; படிப்பிலும் கட்டுப்பாடு முறை இருத்தல் ஆகாது. ஒரு நாடு மற்றொரு நாட்டை ஆளுதல் தவறு. ஒவ்வொரு நாடும் சுயேச்சையாக வாழ்தல் வேண்டும். அதுவே ஆண்டவன் விரும்புவது" என்பனவே இப்பெரியார் கொள்கைகள் ஆகும்.

இவர் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதத்தில் நோய்வாய்ப்பட்டு இறைவன் திருவடிகளை அடைந்துவிட்டார். சிறப்பாக இந்தியாவும், பொதுவாகஅறிஞர் உலகமும் இவர் பிரிவாற்றாது வருந்துகின்றன. இப்பெரியாரால் நமது தாய் நாடு பெருமை பெற்றுள்ளது என்பதை மறுத்தல் இயலாது. இவர் இல்லாத இந்தியா நெய் இல்லா உணவை ஒக்கும்; கண்ணில்லா முகத்தை ஒக்கும்; பண் இல்லாப்பாடலை ஒக்கும்; அன்பு இல்லா நட்பை ஒக்கும்; பெயர் இல்லா மனிதனை ஒக்கும் என்று பல படக் கூறல் தவறாகாது. இவர் நூல்களைப் படித்து, இவர் கொள்கைகளை இயன்ற அளவு பின்பற்றி நடத்தலே நாம் இப்பெரியார்க்கும் நாட்டுக்கும் செய்யும் தொண்டாகும்.

1. அரும்பத விளக்கம்

மஹா - பெரிய, கவி-கவி பாடுபவர், மஹரிஷி - பெரிய முனிவர் (ஒழுக்கத்திற் சிறந்த பெரியார்), சகோதரர் = சக + உதரர்- ஒருவயிற்றிற் பிறந்தவர், உடன் பிறந்தவர், அறவே-முழுவதும், கிள்ளை - கிளி, ஆற்றல் - வலிமை, சொற்பொழிவு - பிரசங்கம், சாந்தி நிகேதனம் - அமைதி நிலையம், உவப்பு - விருப்பம்.

2. கேள்விகள்

1. தாகூர் இளமை எங்ஙனம் பண்பட்டது ?
2. அவர் உள்ளம் எதனை நாடிற்று ?
3. அவர் தோட்டத்தில் அனுபவித்தவை எவை ?
4. அவர் கவிஞராக உதவிபுரிந்தவை யாவை ?
5. அவர் செய்த நூல்கள் எவை ?
6. அவரது மேல் நாட்டு விஜயம் பற்றி யாது அறிவாய் ?
7. 'சாந்தி நிகேதனம்'—யாது? அதன் வேலைமுறை யாது?
8. தாகூர் கொள்கைகள் எவை ?
9. நீ தாகூர் வரலாற்றால் உணர்வது யாது ?

3. இலக்கணம்

(1) பால்குடி, பாலைக்குடி - இவ்விரண்டில் முன்னதில் 'ஐ' உருபு தொக்கி (மறைந்து) நிற்கிறது; பின்னதில் வெளிப்படையாக இருக்கிறது. தொக்கி நிற்பது தொகை எனப்படும். பின்னது விரி எனப்படும்.

வேற்றுமை எண்	வேற்றுமைத் தொகை	வேற்றுமை விரி
2	பால் குடி	பாலைக் குடி
3	தலை வணங்கு	தலையால் வணங்கு
4	வீடு செல்	வீட்டுக்குச் செல்
5	மலை வீழ் அருவி	மலையின் வீழ் அருவி
6	முருகன் வீடு	முருகனது வீடு
7	பெட்டிப் பணம்	பெட்டியில் (உள்ள) பணம்

இங்ஙனம் தொகை, விரி என்பன இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை முடிய வரும். இவை உங்கள் பாடங்களில் அடிக்கடி வரும். இப்பாடத்திலிருந்து இவ்விரண்டையும் எடுத்து எழுது.

(2) பண்புத்தொகை :—ஆகிய என்னும் பண்புருபு இடையிலே மறைந்து நிற்கப் பண்புப் பெயரோடு பண்பை உடைய பெயர் தொடர்வது பண்புத்தொகையாம்.

1. செந்தாமரை - செம்மை ஆகிய தாமரை.
2. கருங்குதிரை - கருமை ஆகிய குதிரை.

(3) உவமைத்தொகை:—போல, ஒப்ப முதலிய உவம உருபுகள் மறைந்து நிற்க, உவமானச் சொல்லோடு உவமேயச் சொல் தொடர்வது உவமைத் தொகையாம்.

1. கயற்கண் - கயல் போன்ற கண்.
2. பவளவாய் - பவளம் போன்ற வாய்.

(4) உம்மைத்தொகை :—எண்ணுப் பொருளில் வரும் 'உம்' என்னும் இடைச்சொல் இடையிலும் இறுதியிலும் மறைந்து நிற்கச் சொற்கள் தொடர்வது உம்மைத்தொகை ஆம்.

1. இராப் பகல் - இரவும் பகலும்.
2. பூரி சட்டினி - பூரியும் சட்டினியும்.
3. சேர சோழ பாண்டியர் - சேரனும் சோழனும் பாண்டியனும்.

பயிற்சி

1. கீழ்வரும் பெயர்களுள் தன்மைப் பெயர், முன்னிலைப் பெயர், படர்க்கைப் பெயர் இவைகளைத் தனித்தனியே எடுத்துக் கூறு:—

   அபயன், தலைவன், நாம், சேனை நீ, அவை, யான், விளக்கு, பொருள், நான், நீர், மண்டபம், நீங்கள், கழல்.

2. பின் கண்ட ஒவ்வொரு வகைப் பெயருக்கும் இப் பாடத்திலிருந்து ஐந்தைந்து உதாரணங்கள் கொடுக்க :—

(1) ஆண்பாற்பெயர், (2) பெண்பாற் பெயர்,(3) பலர் பாற்பெயர், (4) ஒன்றன்பாற்பெயர், (5) பலவின்பாற் பெயர்.

3. அடியில் வரும் வினைமுற்றுக்களில் செய்வினை, செயப் பாட்டு வினை இவைகளைப் பிரித்துக் காட்டு :—

வழங்குகிறது, பணித்தான், கொலையுண்டனர், முழங் கின, பிடிக்கப்பட்டான், தப்பினர், நல்கப்பட்டன.

4. பின்வரும் செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக மாற்றி வாக்கியங்களைத் திருத்தி அமைக்க:—

(1) நாம் ஓடியவரது செயலை ஒரு சிறிது கூறுவோம்.

(2) எங்கள் ராயர் ஏது செய்வார் ?

(3) அபயன் தானைத் தலைவனுக்கு விடைகொடுத்தான்.

5. இரவீந்திர நாத தாகூர் வரலாற்றை 30 வரிகளில் ஒரு கட்டுரையாக வரை.

6. புலவர் இளமைப்பருவம் - இயற்கை அழகில் ஈடுபடல் - அவர் செய்த நூல்களும் சொற்பொழிவுகளும் - அவர் பெருமை-அவர் கொள்கைகள் - சாந்தி நிகேதனம் : இக் குறிப்புகளைக்கொண்டு ஒரு கட்டுரை எழுது.

7. இப்பாடத்தின் பிரிவுகட்கு ஏற்ற தலைப்புகள் கொடு.

8. இதை மௌனமாகப் படி ; கடின சொற்களையும் அழகிய தொடர்களையும் எடுத்தெழுது.

9. இதில் உள்ள வருணனைப் பகுதியை மனப்பாடம் செய்து சொல்லு.

10. இந்த வருணனையை அமைத்து உன் பள்ளிக்கூடத் தோட்ட வருணனையைக் கூறு ; எழுது.

7. பெரியோர் உரைநடை

1. வீரத் தாய்மார்

"ஒரு தாய், முன்பு அவள் தகப்பன் யுத்தகளத்தில் யானையை எறிந்து இறந்துபோயிருப்பதாகவும், சமீபத்தில் நடந்தபோரில் தன் கணவன் எதிரிகளைக் கொன்று தானும் மடிந்து ஒழியவும், இவற்றிற்காக மனத்தளர்ச்சி இன்றி எதிரிகளின் யுத்தப் பறை ஒலிப்பதைக் கேட்டு மகிழ்ச்சி மிகுந்து, தன் சிறுவனைத் தழுவி, அவற்கு ஆடை அணிவித்து, அவன் குடுமியை எண் ணெயிட்டுச் சீவி முடித்து, தான் ஒரே புத்திரனை உடையவளாயிருந்தும் சிறிதும் மனங்கலங்காது, 'போர்க்களம் நோக்கிச் செல்க' என்று அவனை அனுப்புகின்றாள். இச்செய்கையைக் கண்ட என் மனம் கெடுவதாக! இவள் துணிவு கடுமையானது. பழைய வீரக்குடியில் பிறந்தவள் என்பது இவட்கே தகும்" (புறநானூறு-279) என்ன வீரம்! இதனினும் ஆச்சரியமான செய்தி கேட்டதுண்டோ? இக்கருத்துகளையே அமைத்து **வெண்பா மாலையுடையாரும்**, "தங்கள் மேல் எதிர்த்து வந்த சேனையைக் கண்டு பொறுதவளாய்ப் பிள்ளை வாயிலுள்ள மார்பை வாங்கி, கொடிய வலி தங்கிய வேலாயுதத்தை முன்பு பகைவரைக் குத்தி வளைந்த வளைவுகளை நீக்கி, தன் முன்னோர்களது நடுகல்லைத் தான் அவனுக்குக் காட்டிப் பழைய மறக்குடிப் பெண்ணானவள், தன் மகனை போர்க்குச் செல்க என்றாள்" என்றும், "கல்லிலே பொருந்தி நின்றான் என் தகப்பன்; என் கணவன் போர்க்களத்திலே பட்டான்; பகைவர் முன்பு நின்று எதிர்த்து யுத்தத்திலே வீழ்ந்தார் என் தமையன்மார்; தன் சேனை அழியவும் தான் அழியாமல் பின்னே நின்றே, தன் கை சென்று அம்பைச் செலுத்தப் பகை அரசன் மேலே பாய்ந்து, பின் முள்ளம் பன்றி போலப்பட்டுக்கிடந்தான் என்னுடைய வீரப்புதல்வன்" என்றும் கூறுதல் காணலாம்.

—இராவ் சாஹிப் மு. இராகவையங்கார்

2. இலங்கை மாநகரம்

எல்லாச் செல்வத்திலும் குறைவற்று விளங்கிய இலங்கை மாநகர் வீழ்ந்தொழிவதற் கேதுவென்னை என்பதே ஈண்டெடுத்துக்கொண்ட பொருள். இலங்கையில் கல்விச்செல்வம் கரை புரண்டு மேற்பட்டிருந்த தென்பதைக் கம்பரை ஊன்றிப்படித்தார் காணுதொழியார். கலைகள் யாவையும் நிலை கண்டுணர்ந்தவன் **இராவணன்**. அந்நகரில் வாழும் குடிகள் அனைவரும் நிறைந்த கல்வியாளர்களா யிருந்தார்கள்; அவர்கள் அறியாத பொருள் எவ்வுலகினும் இல்லையென்றே சொல்லலாம். இலங்கையின் பொருட் செல்வத்தினை விரித்துக்கூற ஈண்டுக் காலம் இடந்தராது. "மரமடங்கலும் கற்பகம்; மனையெலாம் கனகம்; அரக்கருக்கு அரமடந்தையர் சிலதியர்; உளம் அடங்கி உழையராய் உழல்பவர் அமரர்; மேருவும் வெள்குமாறு பொன் கொண்டிழைத்து மணியாற் பதித்தனவும், 'மின்னலைக்கொண்டு இயற்றினவோ! வெயிலைக் கொண்டு சமைத்தனவோ! வேறென்கொண்டியற்றினவோ!' எனத் தெரிகிலாதனவாய்க் கொண்டலைவிட்டுமதிமண்டல மளவும் உயர்ந்த மாடமாளிகைகள்; கருத்த வாளரக்கிமாரும் அரக்கரும் கழித்து வெறுத்து வீசிய பூண் வெறுக்கையாலே வீதிகளெல்லாம் தூரும்; இன்னோரன்ன பொருட் குவையாம் எஞ்சாது தன்னகத்துக் கொண்ட பெருஞ் செல்வப் பெருக்கம் மிக்க இலங்கைமாநகரத்திற்குத் துறக்கம் நகரம் ஒக்குமெனின், அரக்கர்தம் திருவுக்கு உவமை வேறு காண்டல் இயலாது," எனக் கவிஞர் கவின்பெறப் புகழ்ந்துரைத்தார். அந்நகரில் வாழும் மகளிர் குழலும் வீணையும் யாழும் என்று இனையன குழைய மழலை மென்மொழிகளைக் கிளிக்கிருந்தளிக்கின்ற மெல்லியலாராவர்; ஆடவர் வீரத்தால் மேம்பட்டு விளங்குவதே பெரு நோக்கமாகக் கொண்டு இறுமாந்து நிகரற்று விளங்கும்

களையராவர். அங்ககரிற் காணப்படும் ஆடவர் என்போர் வீரஞ் செறிந்த வில்லாளர்; கழலிலாக் காலும் வேலிலாக்கையும் காந்தும் அழலிலாக் கண்ணுமில்லா ஆடவர் அங்ககரிலில்லை.

—R. P. சேதுப்பிள்ளை, B.A., B.L.

3. திருவள்ளுவர்

திருவள்ளுவர் திருவாக்கு, பாவில் முதன்மை பெற்ற குறள் வெண்பாவில் அமைந்துள்ளது. அது மாத்திரமேயன்றிப் படிப்போர் மனத்தில் எளிதில் பதியக் கூடிய எளிமையையும் ஆராய்வோர் அறிவிற்குப் பெரு விருந்தளிக்கக்கூடிய பொருட் செறிவையும் பெற்றிருப்பதை அறிவுடையார் நன்கு அறிவர்.

ஒவ்வொரு மதத்தினரும் இதைத் தம் நூல் என வழக்கிட்டுக் கொண்டிருத்தலே இந்நூலின் பொருள் அருமையை வெளிப்படுத்தவில்லையா? வேதக்கருத்து முழுவதும் இந்நூலில் அமைந்திருத்தலின், கற்றோர் இதைத் **தமிழ்வேதம்** எனக் கழறுகின்றனர். இத்துணைச் சிறப்பு வாய்ந்த இத்தமிழ் வேதம் குடிப்புகாத மொழி எது? தேசம் எது? படித்தவர் மனத்தில் படிந்து பயன் தருவது திருக்குறளன்றி வேறு எந்த நூல்? அன்றியும், இம்மை, மறுமை, வீடு ஆகிய மூன்றிற்கும் இன்றியமையாத சிறந்த பொருள்கள் பலவும் இந்நூலின்கண் அமைந்துள்ளன என்பது அறிவுடையோர் கருத்து.

—பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையார்

4. கும்பகருணன்

'இராமன்பால் வந்து அடைக; இலங்கைச் செல்வம் நின்னதாகும்' என்று கூறித் தன் பாதங்களில் விழுந்து புலம்பும் விபீடணனைக் கும்பகருணன் எடுத்து இன்புறத்தழுவி அன்புறக் கூறுவான்: 'அன்பு மிக்க தம்பி, நீயோ நான்முகன் நல்கிய வரங்களால் நன்னெறியில் ஒழுகுகின்றாய்; ஆதலின்,

நீ போய் இராமபிரானை அடைந்தது நேர்மையே. யானோ புலைத்தொழில் புரிவேன்; ஆதலின், இன்னுயிர் இழத்தலே ஏற்புடையது. நம் அண்ணல், தீத்தொழிலில் மனங்கொண்டால், அதனை மாற்றுதல் நமது கடமை. அஃது இயலாதாயின், நாம் அவருக்கு முன் இறந்து படுதலே சிறந்தது. அதுவே, செஞ்சோற்றுக் கடனும் ஆகும். அவ்வாறன்றி யான் உன்னோடு அங்கு வருவேனாயின், செய்ந்நன்றி கொன்றவன் ஆவேன்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'.

என்னும் மறை மொழியை மறக்கலாமோ? அமரரை வென்று அரும்புகழ் படைத்த அண்ணலார், துணைவரை நீத்துத் தமியராய்ச் சாதல் தகுமோ? என் ஐயனுக்குப் பகைவராயிருக்கும் அவர்பால் சரணம் புகுந்து உயிர்வாழ்தலினும், இழிவு வேறு யாதுளது? யான் அவ்வாறான இழி தொழில் புரியேன்.

நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிது நாள் வளர்த்துப் பிறகு போர்க்கோலம் செய்து விட்டாற்கு உயிர் கொடாது அங்குப் போகேன் யான். இராம இலக்குவரையும், அனுமன், அங்கதன், சுக்கிரீவன் முதலியோரையும் நொடியில் மடித்து, வெற்றி பெறுவேன். என்முன் எதிர்ப்போர் எவரே ஆயினும் அவர், இரவிமுன் பனிபோல விரைவில் கெடுவர். அன்றியும், ஆகுங் காலத்தில் ஆதலும் போகும் காலத்தில் போதலும் இயற்கை. அவை, ஒருவர் தடுப்பினும் அடுக்காமல் அகலா. ஆதலின், நீ என்னைக் குறித்து இரங்குதல் வேண்டா; இராமரிடம் இப்பொழுதே ஏகு; இங்கு நின்று கவலாதே. நீ அகத்துயர் விடுத்து அவர்பால் அடைந்து உய்தி.'

—வித்வான் வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

1. அரும்பத விளக்கம்

(1) வெண்பா மாலை உடையார் - 'புறப்பொருள் வெண்பா மாலை' என்னும் நூல் ஆசிரியர், மறக்குடி - வீரர்குடி, பட்டான் - இறந்தான், அம்புகள் உடம்பு முழுவதும் தைக்கப்பெற்ற மகன் 'முள்ளம்பன்றிபோலக் கிடந்தான்' என்பது கவனிக்கத் தக்கது. (2) கற்பகம் - தேவலோக மரம், கனகம் - பொன், சிலதியர் - தோழிமார், அமரர் - தேவர், உழையர் - பக்கத்தில் இருப்பவர், வெள்குமாறு - வெட்கப்படும்படி, கொண்டல் - மேகம், வாள் - வாள்போன்ற பற்களையுடைய, பூண் - நகை, வெறுக்கை - செல்வம், எஞ்சாது - குறையாமல், குவை - குவியல், துறக்கம் - மோக்ஷம், திரு - செல்வம், கவிஞர் - புலவர் (கம்பர்), கவின் - அழகு, மழலை - கொஞ்சிப் பேசும் குழந்தைச் சொற்கள், மெல்லியலார் - மென்மைத் தன்மை வாய்ந்தவர், இறுமாந்து - கர்வம் கொண்டு, எய்த - அடைய, கழல் - வீரச் சதங்கை, காந்தும் - ஒளி கக்கும், அழல் - நெருப்பு,(3) இம்மை - இப்பிறப்பு, மறுமை-மறு பிறப்பு, (4) செஞ்சோற்றுக் கடன் - உண்டதற்குப் பதில் உதவி செய்தல், மகற்கு - மகனுக்கு, மறை மொழி - (தமிழ்) வேதவார்த்தை (திருக்குறள்), அண்ணலார் - இராவணனுர், சரணம் - அடைக்கலம். நீர்க்கோலம் - நீர்க்குமிழி, நச்சி - விரும்பி, இரவி - சூரியன், அடுக்காமல் - சேராமல், உய்தி - பிழைப்பாய்.

2. கேள்விகள்

1. புறநானூறுப் பாடலில் காணப்படும் வீரத்தாயின் செயல் யாது ?
2. வெண்பா மாலையில் காணப்படும் வீரத் தாயார் செயல்கள் யாவை ?
3. இத்தாய்மார் குறிப்புகளிலிருந்து பண்டைத் தமிழர் வீரம் எவ்வாறு வெளியாகின்றது ?
4. இலங்கைமா நகரச் சிறப்பு யாது ?
5. அரக்கர்,அரக்கியரைப்பற்றி யாது அறிவாய் ?

6. திருக்குறள் எந்தப் பாவினுல் இயன்றது ?

7. அதனைத் 'தமிழ் வேதம்' என்பது ஏன் ?

8. திருக்குறள் எவற்றிற்கு உரிய பொருள்களை விளக்கு கின்றது ?

9. கும்பகருணன் செய்ந்நன்றி அறியும் ஆற்றல் உடைய வன் என்பது எதனுல் தெரிகிறது ?

10. அவன் மானமுள்ள வீரன் என்பது எதனுல் விளக்க மாகிறது ?

11. அவன் ஓர் உண்மைச் சகோதரன் என்பதை விளக்கு.

3. இலக்கணம்

1. சென்ற பகுதியில் கூறியவை **தொகைநிலைத்தொடர்கள்** எனப்படும்.

2. வேற்றுமை உருபு முதலியன தொக்கு நிற்காமல் சொற் கள் தொடர்ந்து வருவது **தொகாநிலைத்தொடர்** எனப்படும்,

தொகாநிலைத் தொடர்கள்: (1) வினைமுற்றுத் தொடர், (2) பெயரெச்சத் தொடர், (3) வினையெச்சத் தொடர், (4)எழுவாய்த் தொடர், (5) விளித் தொடர், (6) வேற்றுமைத் தொடர், (7) இடைச்சொற்றொடர், (8) உரிச்சொற்றொடர், (9) அடுக்குத் தொடர் என ஒன்பது வகைப்படும்.

(1) வந்தான் வரதன்—வினைமுற்றுத் தொடர்,
(2) வந்த வரதன்—பெயரெச்சத் தொடர்.
(3) வந்து போனுன்—வினையெச்சத் தொடர்.
(4) வரதன் வந்தான்—எழுவாய்த் தொடர்.
(5) வரதா வா—விளித் தொடர்.
(6) மகனேடு போ—வேற்றுமைத் தொடர்.
(7) இனி வருவாய்—இடைச்சொற்றொடர்.
(8) சாலப் பேசினுன்—உரிச்சொற்றொடர்.
(9) பாம்பு பாம்பு—அடுக்குத்தொடர்.

தொடர் இலக்கணம் கூறுதல்

தொடர் இலக்கணம் கூறுதலாவது, தொகைநிலைத்தொடர், தொகாநிலைத் தொடர்களுள் இத்தொடர் இன்ன வகையைச் சேர்ந்தது எனக் கூறுதல்.

குறிப்பு:—ஒவ்வொரு தொடரிலும் உள்ள நிலைமொழிபற்றித் தொடர் இலக்கணம் கூறவேண்டும். தொகைநிலைத் தொடரை தொகைநிலை என்றும், தொகா நிலைத்தொடரைத் தொகாநிலை என்றும் சுருங்கச் சொல்ல வேண்டும்.

பெட்டியில் இருந்த பணத்திற்குப் புடவை வாங்கினாள் காந்தாமணி.

பெட்டியில் இருந்த-ஏழாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்; **இருந்த பணத்திற்கு**—பெயரெச்சத் தொடர்; **பணத்திற்குப் புடவை**—நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்; **புடவை வாங்கினாள்**—இரண்டாம் வேற்றுமைத் தொகை நிலைத் தொடர்; **வாங்கினாள் காந்தாமணி**— வினை முற்றுத்தொடர்.

பயிற்சி

1. பின்வரும் தன்வினைகளைப் பிறவினைகள் ஆக்குக :—தன் வினைகளைப் பிறவினையாக்கும் முறை யாது? பெருகுகின்றன, வருகின்றனர், வாங்கினோம், நினைக்கின்றனர், செய்தான், பயின்றனன்.
2. உண்டு, இல்லை, நிற்கின்றனர், நில்லார், வெளிப்படா, வெளிப்பட்டன, தெரியாது, சொல்லுவர், வாழும், செல்லாத, தோன்றுது.—இவைகளில் உடன்பாட்டு வினைகள் யாவை? எதிர்மறை வினைகள் யாவை?
3. அடியில் வரும் சொற்களில் பெயரெச்சங்கள் எவை? வினையெச்சங்கள் எவை?
   அமைந்து, எண்ண, வரும், பெற்று, கட்டிய, உள்ள, வாழ்ந்து, பூண்ட, நீந்தி, வாழும், இருந்த.

4. பின்வரும் வினைப் பகுதிகளிலிருந்து முக்காலத்திற்கும் உரிய பெயரெச்ச வினையெச்சங்களை எழுதி, அவைகளை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக:—

தோன்று, வளர், ஓடு, அழி, சோதி, புதை.

5. பின்வரும் வாக்கியங்களிலுள்ள உடன்பாட்டு வினைகளை எதிர்மறை வினைகளாகவும்,எதிர்மறை வினைகளை உடன் பாட்டு வினைகளாகவும் மாற்றி வாக்கியங்களைத் திருத்தி அமைக்க:—

(1) இந்நாட்டிற் பழமை யழகும் மிகுதியாய் உண்டு.

(2) திருக்கோண மலைக் கடற்கரையிற் பலவகைச் சங்குகளும் பலகறைகளும் அகப்படுகின்றன.

(3) தமிழர் யாழ்ப்பாணம், திருக்கோணமலை முதலிய பகுதிகளில் வாழவில்லை.

(4) தமிழ் நாட்டில் வாழும் நமக்கு, மிகவும் அருகில் உள்ள இந்நாட்டின் சிறப்புப் போதிய அளவு தெரியாது.

6. பிரித்தெழுது :—

போதியவளவு, இங்கிருந்து, இத்தலம், இந்தத் தீவு, பரப் புள்ளது, நிலப்பகுப்பு, இந்நாடு.

7. சேர்த்தெழுது:—

விளங்கி + இருக்கலாம், இந்த + இலங்கை. இ + வழி, இ + நாள், இந்த + கற்கள், முன் + நாள்.

8. நீ வேறு பல நூல்களைப் படித்துப் பெரியோர் உரை நடைக்கு நான்கு உதாரணப் பகுதிகள் எழுதிக் காட்டு.

9. அவர்கள் வசனப் பகுதிகளில் உள்ள அழகிய தொடர் கள், வருணனைப் பகுதிகள் இவற்றிற்கு இரண்டிரண்டு உதாரணங்கள் தருக.

8. கடிதமும் அழைப்பு இதழ்களும் எழுதுதல்

1. பொதுக் கடிதம்

உன் தெருவிலுள்ள அசுத்தத்தைப்பற்றி **நகர சபைச் சுகாதார அதிகாரி**க்கு ஒரு கடிதம் எழுது.

கடிதம்

10, ஸ்ரீரங்கம்மாள் தெரு,
சூளை, சென்னை.
15—9—'41.

நகர சபைச் சுகாதார அதிகாரி அவர்களுக்கு,
ரிப்பன் கட்டிடம், சென்னை.

ஐயன்மீர்,

சூளையில் கூலியாட்களும் தொழிலாளருமே பலராக வாழ்கிறார்கள். ஆதலால் அவர்களுக்குப் போதிய கல்வி அறிவு இல்லை; அதனால், தெருக்களில் குழந்தைகளை மல சலங் கழிக்க விடுகிறார்கள் ; இராப்போதில் பெரியவர் பலரும் அசுத்தம் செய்கின்றனர். எங்கள் ஸ்ரீரங்கம்மாள் தெருவில் எப்பொழுதும் அசுத்தமே நிறைந்திருக்கிறது. சாக்கடைகளில் நீர் சரியாகப் போகாததால், தெருவில் சாக்கடை நீர் ஓடுகிறது. தெருவில் பெண்கள் பலர் காய்கறிக் கடைகளை வைத்துக் கொண்டு நாள் முழுவதும் விற்கிறார்கள். அவர்கள் விற்பவை விலை மலிவான பண்டங்கள், அழுகிய பழங்கள், நாள்பட்ட காய்கறிகள் முதலியன. இவை சுகாதாரத்திற்கு முற்றும் மாறானவை அல்லவா? அப்பெண்கள் ஓயாமல் கூச்சல் இடுதலும்

சண்டையிடுதலும் அத்தெருவில் உள்ள எங்கட்குத் தலைவலியாக இருக்கின்றது. சுகாதாரம் இந்தத் தெருவில் கடுகளவும் இல்லை. உங்கள் கீழ் உள்ள சுகாதார இன்ஸ்பெக்டர்கள் இந்தப் பக்கத்தை மறந்துவிட்டார்கள் போலும்! தாங்கள் தயவு செய்து ஒரு முறை வந்து நேரே பார்த்து வேண்டுவன செய்யும்படி வேண்டுகிறேன்.

உங்கள் நல்வரவை எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம்,
உங்கள் கீழ்ப்படிதலுள்ள,
சு. கோபாலாச்சாரி.

2. கழக அழைப்பு இதழ்

இளைஞர் ஒற்றுமைக் கழகம்,
சென்னை.

[நிறுவியது : **1937**]

தமிழ் வகுப்புத் திறப்பு விழா

அன்புடையீர்,

இக் கழகத் தமிழ் வகுப்புத் திறப்பு விழா 24—8—'41 ஞாயிறு பிற்பகல் 3-30 மணிக்குச் சென்னை, பவழக்காரத் தெருவில் உள்ள இராமாநுஜம் செட்டி நடுத்தரப் பாடசாலையில் நடைபெறும்.

விழாவிற்குத் திருவாளர் பாரிப்பாக்கம் - வித்வான் கண்ணப்ப முதலியார் அவர்கள் தலைமை வகிப்பார். திரு. வித்வான் மா. இராசமாணிக்கம் பிள்ளை, B. O. L. அவர்கள் வகுப்பைத் திறந்து வைப்பார்.

அவ்வமயம், அறிஞர் பலர் சொற்பொழிவாற்றுவர். தாங்கள் தங்கள் நண்பர்களுடன் விழாவிற்குப் போந்து அதனைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

சிவ. முத்துக்குமாரசுவாமி முதலியார்,	நெ. பாலசுந்தரன்,
தலைவர்,	செயலாளன்.

தமிழ் வகுப்பில் வித்வான். பாலூர்- து. கண்ணப்ப முதலியார் அவர்கள் "இனியவை நாற்பது" என்னும் நூலை நடத்துவார். அனைவரும் இலவசமாகச் சேர்த்துக்கொள்ளப் பெறுவர். அனைவரும் வருக.

நிகழ்ச்சி நிரல்

1. கழக வாழ்த்து.
2. தலைவர் தேர்தல்.
3. தலைவர் முன்னுரை.
4. கழக அறிக்கை வாசிப்பு.
5. வகுப்புத் திறப்பு.

திறப்பாளர்:—திரு. வித்வான். மா. இராசமாணிக்கம் பிள்ளை, B.O.L. அவர்கள், தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர் கலாசாலை, சென்னை.

6. சொற்பொழிவுகள் :—

திரு. வித்வான். எம். இராசாக்கண்ணு முதலியார் அவர்கள், தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர் கலாசாலை, சென்னை.

"செந்தமிழ்ச் செல்வம்"

திரு. வித்வான் பா. து. கண்ணப்ப முதலியார் அவர்கள், தலைமைத் தமிழாசிரியர், கெல்லட் உயர் கலாசாலை, சென்னை.

"பதினெண் கீழ்க்கணக்கு"

7. தலைவர் முடிவுரை.
8. நன்றிகூறல்.

3. திருமண அழைப்பு இதழ்

அன்பார்ந்த ஐயா,

நிகழும் விஷு ஆண்டு ஆவணித்திங்கள் 11-ம் நாள்(27-8-'41) புதன்கிழமை காலை $6\frac{1}{2}$மணிக்குமேல் $7\frac{1}{2}$மணிக்குள் சிம்ம ஓரையில்,

என் மூத்த மகன்	திருவாளர் பாபு முதலியார்
திருவளர் செல்வன்	இளைய மகள் திருவளர் செல்வி
ஆ. கந்தசாமிக்கு	**தெய்வயானை அம்மையை**

இல்வாழ்க்கைத் துணைவியாக்கப் பெரியோர்கள் நிச்சயித்தபடி சென்னை, பெத்துநாய்க்கன்பேட்டை வைத்தியநாத முதலி தெரு, 5-ஆம் எண்ணுள்ள 'நாராயண பவனம்' என்னும் இல்லத்தில்நடை பெறும் திருமணத்திற்கும், அன்று மாலை 5 மணிக்கு நடக்கும் இன்னிசைக்கும், மறுநாள் காலை 8 மணிக்கு நடக்கும் காப்புக்களைதலுக்கும், தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வந்திருந்து மண மக்களை வாழ்த்துமாறு வேண்டுகிறேன்.

தியாகராயநகர், 10-8-1941.

இங்ஙனம்: தங்கள் அன்புள்ள,
ஆயலூர் - லோகநாத முதலியார்.

இலக்கணம்

சில ஆகுபெயர்கள்

ஒரு பொருளுக்கு இயல்பாயுள்ள பெயர், அதனோடு சம்பந்த முடைய வேறொரு பொருளுக்கு ஆகி வழங்கிவருவது ஆகுபெயர் எனப்படும்.

(1) எண்ணலளவை ஆகுபெயர்:—கால் வலிக்கிறது—இதில், கால் என்னும் எண்ணலளவைப்பெயர், ஓர் உறுப்புக்குப் பெயர் ஆயினமையின், எண்ணலளவை ஆகுபெயர்.

(2) **எடுத்தலளவை ஆகுபெயர் :—வீசை தந்தான்—இதில்,** வீசை என்னும் எடுத்தலளவைப்பெயர், அந்நிறையுள்ள பொருளைக் குறித்தமையால், எடுத்தலளவை ஆகுபெயர்.

(3) **முகத்தலளவை ஆகுபெயர் :—கலம் விளைந்தது—இதில்,** கலம் என்னும் முகத்தலளவைப்பெயர், அவ்வளவுள்ள பொருளுக்கு ஆயினமையால், முகத்தலளவை ஆகுபெயர்.

(4) **நீட்டலளவை ஆகுபெயர் :—காதம் கடந்தான்—இதில்,** காதம் என்னும் நீட்டலளவைப்பெயர், அவ்வளவு கொண்ட தூரத்தைக் குறிப்பதால், நீட்டலளவை ஆகுபெயர்.

(5) **தானி ஆகுபெயர்:— விளக்கு ஒடிந்தது—இதில்,** விளக்கு என்னும் தானியின் (இடத்திலுள்ள பொருளின்) பெயர், அதற்கு இடமாகிய தண்டிற்கு ஆயினமையால், தானி ஆகுபெயர்.

(6) **மும்மடி ஆகுபெயர் :—**

கார்—(i) இந்நிறப் பெயர் முதலில் இதனை உடைய மேகத்தை உணர்த்தும்போது **பண்பாகுபெயர்** ஆகும்.

(ii) அம்மேகம் தான் பெய்யும் பருவத்தை உணர்த்துகையில் **இருமடி** (இரண்டு முறை மடிந்த) **ஆகுபெயர்** ஆம்.

(iii) கார் மேகம் பெய்யும் பருவத்தை உணர்த்திய இருமடி ஆகுபெயர், அப்பருவத்தில் விளையும் நெற்பயிரைக் குறிக்கையில் **மும்மடி** (மூன்று முறை மடிந்த) **ஆகுபெயர்** ஆம்.

பயிற்சி

1. கீழ்க்கண்ட வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்கள் எந்த வேற்றுமை உருபுகளை ஏற்றிருக்கின்றன ?

(1) இப்பெரியோர் சோழ நாட்டிற் பிறந்தவர்.

(2) அந்த எண்ணத்தை ஒரு நாள் இவரிடம் தெரிவித்தார்.

(3) ஏடுகள் தேடுவதற்காகப் பல கிராமங்களுக்கும் போய் அங்கங்குள்ள பழைய புலவர் மனைகளிற் கிடைத்த ஏடுகளை எல்லாம் குத்துவிளக்கின்முன் நிலத்தில் அமர்ந்து வெகு பொறுமையோடு ஆராய்ந்தார்.

2. பின் வருவனவற்றுள் வேற்றுமைத் தொகையையும், வேற்றுமை விரியையும் கூறு:—

இராசதானிக் கலாசாலை, தமிழ் கற்ற, நூல்களை ஆராய்ந்து, தம்மாசிரியர், சென்னைக்கு வந்தார், தமிழ்ப் பணி.

3. நீர், குளம், நாம், தான், வீடு-இச்சொற்களோடு 3,5, 7 ஆம் வேற்றுமை உருபுகளைச் சேர்த்துப் படி.

4. வீட்டினை, மரத்தில், அவற்றை, முருகனுக்கு-இச்சொற்களில் வந்துள்ள சாரியைகளைக் கூறு.

5. பின்வரும் வாக்கியங்களில் உள்ள வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் இவற்றை எடுத்தெழுதி, அவை இன்ன வகையைச் சேர்ந்தவை என்று முறையே குறிப்பிடு :—

(1) இராமன் இன்றிக் காரியம் நடவாது.
(2) பூனை மெல்லப் பதுங்கிச் சென்று எலியைப் பிடித்தது.
(3) இந்தச் சிறிய குதிரை அந்தப் பெரிய குதிரையை விட விரைவாக ஓடிற்று.
(4) 'யாம் திருடர் அல்லேம்' என அங்கிருந்தோர் கூறினர்.
(5) இராமன் கருமை நிறத்தினன்.

6. பின்வரும் வாக்கியங்களில் உள்ள இடை, உரிச்சொற்களை எடுத்தெழுது :—

(1) என்று தருங்கோல் என வேண்டா.
(2) இராமன் நனி தின்றான்.

(3) இவர்களில் இவனோ திருடினன்?

(4) இதனினும் அது சாலச் சிறந்தது.

(5) இவன், ஓ ஓ கொடியன்!

7. உறு, நனி, தவ—இவ்வுரிச்சொற்களை அமைத்து, மும்மூன்று வாக்கியங்கள் அமைக்க.

குறிப்பு :—இப்பாடத்திற் கண்ட பலவகைக் கடிதங்களையும் எழுதப் பழக்கம் செய்து கொள்க.

---

9. ஈழ மண்டலம்

ஈழம் என்பது **ஸிலோன்** என்று வழங்கும் நாட்டின் தமிழ்ப் பெயராம். இந்நாடு, முன்னாளில் தமிழரால் **ஈழ மண்டலம்** என்று வழங்கப்பட்டது. இந்நாட்டுக்குச் **சிங்களம்** என்ற ஒரு பெயரும் உண்டு. இதற்கு **இலங்கை** என்ற பெயர் எங்கும் வழங்கும் பெயராம். இந்நாட்டில் வாழும் உரிமை பூண்ட மக்கள் சிங்களர் ஆவர். இவ்வகுப்பார் புத்தர் மதத்தைப் பின்பற்றுகின்றனர்; சிங்கள மொழி பேசுகின்றனர். உருவத் தோற்றத்தில் தமிழரைப் போலவே இருப்பினும், மனப்பான்மையிலும், நடையுடை பாவனைகளிலும் இவர் வேற்றுமை உள்ளவராவர்.

ஈழ மண்டலம் கடல் இடையில் உள்ளதொரு சிறு தீவு ஆகும். இந்நாடு இருபத்தையாயிரம் சதுர மைல் பரப்புள்ளது, உருவ அளவில் மைசூர் சமஸ்தானத்துக்குச் சிறியது. கடற் கரைப் பக்கம் சமவெளிகளாகவும் இடை நிலங்கள் குன்றுகளும் மேடுகளும் நிறைந்த நிலப்பகுப்புக்களாகவும் இந்நாடு அமைந்துள்ளது.

சோழ மண்டலத்தில் **திருமறைக்காடு (வேதாரணியம்)** என்ற புண்ணியத்தலம் ஒன்று உண்டு. இத்தலத்தில் கடல் மிகவும்

ஒடுக்கமாய் உள்ளது. இங்கிருந்து சிறிது தூரத்தில் இராம பாதம் என்ற ஒரு சிறு கோயிலையும் வேறு சில பெருங் கோயில்களையும் காணலாம். கடற்கரையோரத்தில் **கோடிக்கரை** என்ற தலம் ஒன்று இருக்கிறது. இந்தக் கோடிக்கரை என்னும் சிற்றூருக்கும் இலங்கையில் உள்ள **காங்கேயன்** துறைக்கும் இடையில் உள்ள தூரம் முப்பத்தேழு மைல் ஆகும். இந்த வழியிலே முன்னாளில் நாட்டுப்படகுகள் பல போய் வந்தன. இந்நாளில் அவை போவது இல்லை. இந்நாளில் இலங்கை செல்வதற்கு மிகவும் நெருக்கமான துறை **தனுஷ்கோடி**யே யாகும். இலங்கை நாட்டில் உள்ள **தலைமன்னார்** என்ற ஊருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையில் உள்ள கடலின் அகலம் இரண்டு காதமே யாகும். ஆகையால், இவ்வழியாலேயே ஈழத்துக்கும் இந்திய நாட்டுக்கும் இடையில் போக்குவரவு இக்காலத்தில் நடைபெறுகிறது.

மணிமேகலை என்ற தமிழ்ப் பழங் காவியத்தில் **பாத பங்கய மலை, சமனொளி** என்று புகழப்பெற்ற மலை இந்நாட்டில் உள்ளது. இம்மலை இந்நாளில் **சிவனொளி பாதம்** என்னும் பெயர் பெற்றுள்ளது. இம்மலைமேல் உள்ள பாதச்சுவடுகள் ஐந்தரையடி நீளம் உள்ளவை. இப்பாதங்கள், புத்தர் பாதங்கள் என்று பௌத்தர்களாற் போற்றப்படும். ஈழ மண்டலத்தில் நான்கு ஆறுகள் பெருகுகின்றன. இயற்கையில் நீர்வளம், நிலவளம் பொருந்தி, மலைவளமும் கடல்வளமும் காடுபடு பொருளும் மிகுந்துள்ள இந்நாடு, உலகில் உள்ள மிகவும் அழகிய நிலப்பகுதிகளில் ஒன்றாகும்.

ஈழ மண்டலம் நம் நாட்டோடும் பிற நாடுகளோடும் வியாபாரம் செய்யும் பொருள்கள் தேங்காய், தேயிலை, இலவங்கப் பட்டை முதலியனவாம். ஈழ மண்டலத்தின் அருகிற் கடலில் அகப்படும் முத்துக்கள் மிக்க விலைமதிப்பு உள்ளவை.

இரத்தின தீவம் என்று முன்னுளிற் சொல்லப்பெற்ற தீவு இது தானே என்று நினைக்கும்படி இந்நாட்டில் இன்றும் இரண்டு மூன்று வகை அரிய மணிகள் மண்ணிற் கிடைக்கின்றன.

ஈழ நாட்டில் வாழுர் மக்களிற் பெரும்பாலோர் சிங்களரே. அவருக்கு அடுத்த தொகையினர் தமிழராவார். போர்த்து கீசியரும் உலாந்தரும் சில நூற்ருண்டுகளுக்கு முன்பு இந் நாட்டோடு கப்பல் வியாபாரம் செய்தனர். அவ்வினத்தாரின் பரம்பரையார் இன்றும் சிலர் ஈழ நாட்டில் உள்ளனர். சிங்களர் எல்லாரும் பௌத்தரே ஆயினும், அவருட் சிலர் இந்நாளில் பிறமதங்களைத் தழுவி வருகின்றனர். தமிழரிற் பெரும்பாலோர் சைவரே; சோனகர் என்ற வகுப்பார் முஸ்லிம்கள் ஆவர். ஐரோப்பியர் யாவரும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர். இந் நாளில் சில தமிழரும் சிங்களரும் கிறிஸ்தவ மதத்தைப் பின் பற்றி வருகின்றனர்.

ஈழ நாட்டில் உள்ள தமிழ்க் கிறிஸ்தவர்க்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. இவர்கள் தம் உறவின் முறையார் ஆகிய சைவரோடு நெருங்கிப் பழகி ஒரே குடும்பம்போல வாழும் வழக்கம் உண்டு. எல்லாரும் ஒன்ருக இருந்து உண்டு உடுத்துப் பழகுவதும் உண்டு. நம் நாட்டில் இந் நற்பழக்கம் இல்லாதது ஒரு குறை என்றே அறிஞர் நினைக்கின்றனர்.

ஈழ நாட்டுப் பழங்குடிகள் வேடர் என்னும் இனத்தாரே ஆவர். தமிழர் எல்லாரும் பல நூற்ருண்டுகளுக்குமுன் நம் நாட்டிலிருந்து போய்க் குடியேறிய நம் முன்னோர் வழி வந்த வரே ஆவர். இன்றும் தோட்டத் தொழிலாளிகளாகவும், வியாபாரிகளாகவும் நம் நாட்டார் பலர் இலங்கையிற் குடி யேறி இருக்கின்றனர்.

ஈழ மண்டலத்தின் தலைநகர் **கொழும்பு** என்பதாம். இந்நக ரில் உள்ள துறைமுகம் செயற்கையால் அமைந்ததாயினும்,

பல நாட்டு மரக்கலங்களும் போக்குவரவு செய்யத்தக்க இடமாய் உள்ளது. ஒரே காலத்தில் பத்துப் பன்னிரண்டு நீராவிக் கப்பல்கள் இத்துறைமுகத்துக்கு அருகில் வருவது எளிதாகும். துறைமுகத்தருகில் முன்னுளில் உலாந்தர் கட்டிய கோட்டை ஒன்று இருந்தது. இன்றும் அப்பகுதி **கோட்டை** என்ற பெயர் பெறுகிறது. **பேட்டை** என்பது உள்நாட்டார் வாழும் பகுதியாம். நம் நாட்டு வியாபாரிகள் பலர் கொழும்பு நகரிற் குடியேறி வியாபார வழிகளாற் பெரும் பொருள் ஈட்டுகின்றனர்.

தமிழர் யாழ்ப்பாணம், திருக்கோணமலை முதலிய பகுதிகளில் வாழ்கின்றனர். சிங்களர் நாடெங்கும் இருக்கின்றனர்.



கண்டியிலுள்ள புத்தர் பற்கோயில்

சமனெளிமலையின் அடிவாரத்தில் உள்ள **இரத்தினபுரம்** என்னும் சிற்றூர் மணிகள் வியாபாரத்தின் பொருட்டுப் பலவகை இனத்தாரும் வரும் இடமாய் உள்ளது. **கண்டி** என்ற நகரத்

தில் தொழில்களும் வியாபாரங்களும் மிகுந்திருப்பதால், பல வகுப்பாரும் இருப்பர். கண்டி நகரத்துள்ள **புத்தர் பற்கோயில்** பௌத்தரால் மிகவும் பக்தியோடு போற்றப்படுகின்றது. பிற மக்களும் அவ்வாலயத்தைக் கண்டு மகிழ்வதுண்டு.

தேயிலைத் தோட்டங்களின் இடையில், **'நீவர இலியா'** என்ற பெயர் பூண்ட ஒரு மேட்டு நிலம் உண்டு. நம் நாட்டிற் கோடைக்கானல், ஒற்றைக்கல்மன்று(உதகமண்டலம்) முதலிய மலைகள் பயன்படுவதுபோல இஃது இலங்கை மக்களுக்கு உதவுகிறது. இங்குள்ள மலை இலங்கையில் உயர்ந்த பெரு மலையாம். இம்மலையில் ஏறும் வழியெல்லாம் உள்ள இயற்கைக் காட்சி மனத்தைக் கவர்வதாகும்.

தமிழர் மிகுதியாய் வாழும் **திருக்கோண மலை** என்ற சிறு நகரில் ஒரு துறைமுகம் உண்டு. இத்துறைமுகம் இயற்கையில் அமைந்ததாய்ப் பலதீவுகள் உள்ளதாய் மிக்க அழகோடு இருப்பதால் உலகப் பிரசித்தி பெற்றதாம். திருக்கோணமலைக் கடற்கரையிற் பலவகைச் சங்குகளும் பலகறைகளும் அகப்படுகின்றன. திருக்கோணமலைக்கு அரைக்காத தூரத்தில் ஒரு வெந்நீர் ஊற்று உண்டு. அவ்வூற்றில் மீன்கள் நீந்தி விளையாடுமாம்.

புதுமை அழகு பலவாறுகப் பொருந்தியுள்ள இந்நாட்டிற் பழமை அழகும் மிகுதியாய் உண்டு. இலங்கைத் தீவின் இடைநிலத்திற் பெருங்காடுகள் உண்டு. இக்காடுகளிற் பல புராதன நகரங்கள் புதைந்து கிடக்கின்றன. இவற்றுள் **அநுராதபுரம்** என்பது மிகவும் பெரியதாகும். மேல் நாட்டுப் பழம் பெரு நகரமாகிய ரோமாபுரி தோன்று முன்பு, இந்நகர் தோன்றி வளர்ந்து சிறந்திருந்தது என்பது சரித்திரம் வல்லார் கருத்தாம். அநுராதபுரத்திற் பழைய சின்னங்கள் பல இன்று கிடைக்கின்றன. மண்ணுட் பல நூற்றுண்டுகள் புதைந்து அம்மண்ணின்மேல் பெரு மரங்கள் வானளாவ வளர்ந்து

வேரோடிய பிறகு இந்நகரின் மதில்களும் மாளிகைகளும் இருந்த இடம் தெரியாமல் அழிந்தது வியப்பாகுமோ? மிகவும் உன்னதமாக அமைந்த சில கோபுரங்கள் சிறு சிறு கறையான் புற்றுகள் போலத் தலைகாட்டிக் கொண்டிருந்தன. அரண்மனைகள், கோயில்கள், மாளிகைகள் இவற்றின் பெரு மண்டபங்களைத் தாங்கி நின்ற தூண்கள் சில தலைதூக்கி நிற்கின்றன. இந்நிலத்தை நன்கு சோதித்து வெட்டிய பிறகு, முன்னையோர் சிற்பச்சிறப்பை விளக்கும் பல கட்டடங்கள் வெளிப்பட்டன. பல அபூர்வ காட்சிப் பொருள்கள் இங்கு அகப்பட்டனவாயினும், அவற்றுள் மிகவும் சிறந்தது பழங்காலத்துப் **போதி** மரமாம். இது புத்ததேவர்க்கு ஞானோதயம் ஆக இடமாயிருந்த கயையில் உள்ள போதி மரத்தின் ஒருகிளையை ஊன்ற வளர்ந்தது என்ற வரலாறு ஒன்று உண்டு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக **மகாவமிசம்** முதலிய சரித்திர நூல்களிற் புகழ்ப் பெற்ற பெருமரம் இன்றும் இங்குள்ளது. இஃது ஒரு பழம்பெருஞ் செல்வமே. இங்ஙனம் பலவகைச் சிறப்புக்களும் உள்ள ஈழமண்டலம் நம்நாட்டுக்கு நெருங்கிய உறவுடையதாம்.

1. அரும்பத விளக்கம்

பழமை + குடி = பழங்குடி, குடி - குடிமக்கள், பலகறை-சோகிகள், சின்னம் - அடையாளம்.

2. கேள்விகள்

1. இலங்கையின் வெவ்வேறு பெயர்கள் யாவை?
2. இலங்கைக்குப் போக இரண்டு வழிகள் கூறு.
3. இலங்கையிற் காணப்படும் இயற்கைக் காட்சிகளை விவரித்து எழுது.
4. சிங்களர் இயல்புகள் யாவை?
5. அங்கு வாழும் தமிழ்க் கிறிஸ்தவரின் தனிச் சிறப்புக்கள் யாவை?

6. அநுராதபுரத்தின் பெருமை என்ன?

7. கொழும்பு, கண்டி, கதிர்காமம், நீவரஇலியா என்னும் இடங்களைப் பற்றிச் சிறு குறிப்புகள் வரைக.

3. இலக்கணம்

தெரிநிலை-குறிப்பு வினைச்சொற்கள்

எல்லா வினைச்சொற்களும் தெரிநிலை வினை, குறிப்பு வினை என இருவகைப்படும்.

1. **தெரிநிலை வினை:**—தொழிலும் காலமும் வெளிப்படையாகத் தெரிய நிற்கும் வினைச்சொல் தெரிநிலை வினை எனப்படும்.

(1) வந்தான் — தெரிநிலை வினைமுற்று.
(2) வந்த — தெரிநிலைப் பெயரெச்சம்.
(3) வந்து — தெரிநிலை வினையெச்சம்.

2. **குறிப்பு வினை:**—செயலையும் காலத்தையும் குறிப்பால் உணர்த்தும் வினைச்சொல் குறிப்புவினையாம்.

(அ) (1) பொன்னன் — பொருள் அடியாகப் பிறந்த குறிப்பு வினை.
(2) அமெரிக்கன் — இடம் ,, ,,
(3) தையான் — காலம் ,, ,,
(4) ஆறுமுகன் — சினை ,, ,,
(5) அழகன் — குணம் ,, ,,
(6) நடையன் — தொழில் ,, ,,

(ஆ) நல்ல பையன் — குறிப்புப் பெயரெச்சம்.
மெல்லப் பேசினான் — குறிப்பு வினையெச்சம்.

பயிற்சி :

1. கீழ் உள்ளவற்றை இக்கட்டங்களில் அடை :—

அகச்சுட்டு	புறச்சுட்டு	அகவினு	புறவினு

எப்பொழுது, இத்தொழில், அது, ஏன், அவை, அவ்வரசன், யார், அவனே, எது, இவள், அந்நாள், எவன், அவர், எப்பொருள், யாது.

2. பின் கண்ட வாக்கியங்களில் ஏற்ற இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக :—இக்காளவாயில் ஓயாமல் நெருப்பு எரிய இரும்பு கொதிக்கும் நிலையில் பலவகை வாயுக்கள் மேலே எழும் அவை மேற்புறம் வந்து வீணே போய்க்கொண்டிருக்கும் இராக்காலங்களில் இவற்றின் அருகில் நின்ருல் வாயுக்கள் எரிவது தெரியும். அப்பொழுது இரும்புருக்கிக் காளவாய்கள் எரிமலை போலத் தோன்றும். இந்தக் காற்றுகள் நல்ல வெப்பமுள்ளவை என்பதை யறிந்த சிலர் மேற்புறம் மூடிச் சில குழாய்களின் வழியே அவற்றைக் கீழே திருப்பி உட்செலுத்திப் பயன்படுத்தும் வழியை யுணர்ந்து கையாளுகின்றனர்.

3. பின்வருவனவற்றுள், ஒவ்வொன்றைப் பற்றியும் பதினைந்து வரிகளில் வியாசம் வரைக.

(1) ஈழ நாட்டு இயற்கைச் சிறப்பு.

(2) ஈழ நாட்டுப் பழைய நகரங்கள்.

(3) ஈழ நாடும் தமிழ் மக்களும்.

4. ஈழ நாடு சென்ற ஒருவன் அங்குப் பல நாள் இருந்து கண்ட காட்சிகளைப் பற்றி நண்பனுக்கு எழுதுவது போல ஒரு கடிதம் எழுது.
5. இந்தியாவுக்கும் ஈழ நாட்டிற்கும் உள்ள தொடர்பைப் பற்றிப் பேசுக.
6, இப்பாடத்தின் ஒவ்வொரு பாராவிற்கும் தக்க தலைப்புக் கொடு.
7. முதல் பிரிவில் உள்ள முதல்இரண்டு வாக்கியங்களுக்குத் தொடர் இலக்கணம் கூறு.
8. முதல் பிரிவில் உள்ள வே. தொகைகளைக் கூறு; வே. தொகா நிலைகளைக் கூறு.
9. வட்டக்கல். இராப்பகல், கரும்பாம்பு, பவளவாய், கற்குகை, மோர்குடி, கைநீட்டு, பள்ளிக்கூடம் போ—இவை என்ன தொகைகள் ?
10. இரண்டாம் பிரிவில் உள்ள எ. ப. செ. கூறு.
11. மூன்றும் பிரிவில் உள்ள வினைமுற்று, வினையெச்ச, பெயரெச்சங்களைச் சொல்லு.
12. நான்காம் பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்ச் சொற்களைத் தெரிவி.

10. கடல்

[பாட்டு]

1. வானின் உயரம் அளக்க எழும்பி
வளரும் அலையுடையாய் !
யானுன் பெருமை அளக்க நினைக்கின்,
எனக்குள் நகைவருமே:

2. வாரிதி என்ன வடமொழி சொல்லிய
மாபெரு நீர்நிலையே !
யாரிடம் நீரினை வேண்டி அடைந்தனை
இன்னே இயம்புதியோ ?

3. மீனினம் எத்தனை நின்னுளே வாழும்
விரியுடல் ஆமைகள்தாம்
தேனினு மிக்க இனிமை யுளதெனத்
தேடிநின் னீர்பருகும்.

4. தீவிது என்ன மனிதர் மயங்குந்
திமிங்கிலம் எத்தனையோ?
போவன வாகிநின்னூற்றல் விளக்கும்
புகல்தி பெருங்கடலே!

5. ஆறுகள் தந்த புதுவெள்ளம் யாவும்
அடங்கும் இடமுடையாய்!
ஆறுகள் முன்போற் பெருகவே மேகம்
அளித்த சலநிதியே!

6. முத்தை யுதவும் சிறப்பைப் படைத்த
முதன்மைசேர் சிப்பியினம்
எத்தை விழுங்கியம் முத்தினையீனும்
இயம்புதி மாகடலே!

7. பவளக் கொடிகள் படர்ந்து வளர்ந்து
பலர்க்கும் பயன்படவே,
துவளக் கிடக்கும் நிலைமை உனக்குள்
துலங்குமே ஆழ்கடலே!

8. சங்குகள் எத்தனை கோடி வகைகளுந்
தாழ்வயிற் றுட்கிடக்கும்!
மங்கள மாக வளரும் வலம்புரி
வாழ்வுறு நீள்கடலே!

9. திரைகள் நிறைந்து விளங்கு நினதகம்
சேர்ந்துபல் வங்கங்களால்
திரவியந் தேடவே பற்பல நாடுகள்
சென்றவர்க் கெல்லையுண்டோ?

10. எத்துணை மக்களைக் கொன்று விழுங்கி
இருப்பை இருங்கடலே?
எத்துணை வங்கம் நினது வயிற்றுள்
இடம்பெற் றிருந்திடுமே!

11. உப்பு மயமாக நீரினைக் கொண்டாய்
உவரிப் பெயருடையாய்!
உப்பு மனிதர்க் குதவும் பொறுப்பும்
உனக்கே உளதலவோ?

12. நீந்துந் திறமை மிகுந்தவர் நின்னை
நெருங்கி அடைதல்கண்டால்
ஏந்து குழந்தையைப் போலே அலைகளில்
ஏற்றியே ஆட்டுவையே.

13. சந்திரன் பூரண பிம்ப வுருவத்திற்
சார்வது கண்டளவில்
இந்திரர் நாட்டையும் எட்டவே பொங்குதி
ஏனோ? கருங்கடலே!

14. பூமி மகளுக் குடையென நின்னைப்
புகல்வர் கவிஞரெலாம்;
பூமியில் வாழ்பவர் வாழ்வு பெறஅருள்
பொங்கு சலாசயமே!

15. முத்தொழில் செய்வதால் நல்லறி வுள்ளவர்
முந்நீர் எனச்சொல்லவே
உத்தம வாழ்வு நடத்த வுதவி
உததி! நீ வாழியரோ.

1. அரும்பத விளக்கம்

நகை - சிரிப்பு; வாரிதி - கடல்; வடமொழி - ஸம்ஸ்கிருதம்; மா - பெரிய; மாபெரு - மிகப் பெரிய; இன்னே - இப்பொழுதே; இயம்புதி - சொல்வாய்; புகல்தி - கூறுவாய்; சலநிதி -சமுத்திரம்;

துவள - வளைய; துலங்கும் - விளங்கும்; ஆழ்கடல் - ஆழமான கடல்; வலம்புரி - வலமாக முறுக்கேறிய சங்கு; வங்கம் - கப்பல்; உவரி - உப்பான நீரினை உடைய கடல்; பூரணம் - நிறைவு; பொங்குதி - பொங்குவாய்; சலாசயம் - நீர் நிலை.

மூன்று + தொழில் = முத்தொழில்,
முந்நீர், உததி - சமுத்திரம்; வாழியர் - வாழ்வாயாக.

2. கேள்விகள்

1. கடலில் வாழும் சில பிராணிகளைக் கூறு.
2. கடலால் விளையும் நன்மைகள் யாவை ?
3. கடலிற் கிடைக்கும் பொருள்கள் எவை ?
4. நீந்தும் ஒருவனுக்குக் கடல் செய்யும் உதவி யாது ?
5. கடலுக்குள்ள சில பெயர்களைக் கூறு.
6. கடல் செய்யும் மூன்று தொழில்கள் யாவை ?

3. இலக்கணம்

மை ஈற்றுப் புணர்ச்சி

1. மூதூர் = முதுமை + ஊர்
= முது + ஊர்—'ஈறு போதல்'
= மு (த் + உ) + ஊர்
= மு + த் + ஊர்—'முற்றும் அற்று ஒரோ வழி'
= மூ + த் + ஊர்—'ஆதி நீளல்'
= மூதூர்.

2. கருங்குவளை = கருமை + குவளை
= கரு + குவளை—'ஈறு போதல்'
= கரு + ங் + குவளை—'இனம் மிகல்'
= கருங்குவளை

3. பெரியன் = பெருமை + அன்
= பெரு + அன்—'ஈறு போதல்'
= பெ + ர் + உ + அன்
= பெ + ர் + இ + அன்—இடை 'உ'கரம் 'இ' ஆதல்

=பெ + ரி +அன்
=பெரி+ ய் +அன்—'இ, ஈ, ஐ வழி யவ்வும்'
=பெரியன்.

இவ்விதிகளை உணர்த்தும் சூத்திரம்:

" ஈறு போதல், இடைஉகரம் இய்யாதல்,
ஆதி நீடல், அடிஅகரம் ஐஆதல்,
தன்ஒற்று இரட்டல், முன்நின்ற மெய்திரிதல்,
இனமிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே."

பயிற்சி

1. அநுவயம் செய்து எழுது:—
"சங்குகள் எத்தனை கோடி வகைகளுன்
தாழ்வயிற் றுட்கிடக்கும்
மங்கள மாக வளரும் வலம்புரி
வாழ்வுறு நீள் கடலே!"
2. இப்பாட்டில் உள்ள வாக்கியத்தை இரண்டாகப் பிரி.
3. பின்கண்ட வினைப்பகுதிகளிலிருந்து ஐம்பால் மூவிடங்களுக்கும் உரிய வினைமுற்றுகளை அமைத்துக் காட்டு:— வா, தேடு, விழுங்கு, பாடு, கிட, ஏறு, உதவு, தாவு, வாழ்.
4. பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்தெழுது:—
   (1) உபாத்தியாயர் மாணவர்க்குப் பாடம் படிக்கும் முறையை நன்கு விளக்கினர்.
   (2) குகையில் ஒளிந்திருந்த மன்னன் மேலே ஒரு சிலந்தியைக் கண்டான்.
   (3) பிச்சைப் பாத்திரம் ஏந்திச் சென்ற மணிமேகலை ஆதிரைபால் பிச்சை யேற்றுள்.
   (4) அவர்கள் காடு நோக்கிச் சென்று அங்கோர் சிங்கத்தைக் கண்டனர்.
   (5) ஆடம்பர வாழ்க்கையை விரும்புபவன் அவஸ்தை அடைவான்.

5. பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய் அடைமொழி, பயனிலை அடைமொழி, செயப்படுபொருள் அடைமொழி இவற்றை எடுத்தெழுது:—

(1) கல்வியில் ஊக்கமுடைய முருகப்பன் பரீக்ஷையில் அதிக மார்க்குகள் வாங்கினன்.

(2) முன் ஒருகால் இராமனிடம் அடிபட்ட மாரீசன், தன்னை இராமன்பால் மாய மானகச் செல்ல ஏவிய இராவணனைப் பணிவாய்த் தன்னை அனுப்பலாகாதென வேண்டிக்கொண்டான்.

(3) பழி பாவங்களை நன்கறியவல்ல மனச் சான்றே, கொடிய நெஞ்சையுடைய ஒருவனுக்கு அறிவைப் புகட்டும்.

(4) வெயிற்காலமெல்லாம் உழைத்து இரை தேடிய எறும்புகள், குளிரோடு கூடிய மாரிக் காலத்தைக் காட்டில் அடங்கி வாழ்ந்து கழிக்கின்றன.

(5) கானகத்திடை ஒளிந்து வசித்த அடிமையைக் கொடிய நெஞ்சையுடைய எஜமானன் தூதர்கள் ஊக்கத்துடன் அலைந்து தேடிக் கண்டுபிடித்தனர்.

6. இப்பாட்டில் வந்த கருத்துகளைச் சுருக்கி ஒரு கட்டுரையாக எழுது.

7. 'கடலால் உலகிற்கு உள்ள உதவி' என்பதுபற்றி ஒரு கட்டுரை வரைக.

8. இப்பாட்டில் உள்ள வினைமுற்றுகளைச் சொல்லு; அவற்றின் காலங்களைக் குறி,

9. அவற்றில் உள்ள பகுதி, விகுதி, இடைநிலைகளைக் கூறு.

10. நடுங்கினன், நடந்தான், இடித்தனர், கடிந்தன, சீறினள், ஓடிற்று—உறுப்பிலக்கணம் கூறு.

11. கண்ணன் குழலை ஊதி மேய்ந்திருந்த பசுக்களை ஒன்ருகச் சேர்த்தான்—தொடர் இலக்கணம் கூறு.

12. வரதன் வந்து வள்ளியை அழைத்தான்—சொல் இலக்கணம் கூறு.

13. கரியன், இன்சொல், பருப்பழகு, பனையோலை, கல்லடி, திருவடி—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறு.

---

11. சிற்பமும் சித்திரமும்

மனத்துக்கு இன்பம் அளிக்கும் கலைகள் ஐந்து வகைப் படும். அவை **சங்கீதம், நாட்டியம், சிற்பம், சித்திரம், கவித்துவம்** என்பனவாம். ஒவ்வொரு கலையும் அதனைப் பயின்ற மக்களுக்கு ஒரு தனிச் சிறப்பைத் தருகிறது. கலைஞன் தனது கலையால் தானே அளவற்ற இன்பம் அடைந்து, அவ் வின்பத்தில் ஒரு பகுதியை மற்றவர்களுக்கும் அளிக்கிறான். தானே இன்பம் பெற இடம் இல்லாத கலை, பிறர்க்கு இன்பம் தர உதவாது.

இவ் வகைக் கலைகளுள், **சங்கீதம்** என்பது செவி வாயிலாக மனத்துக்கு இன்பம் தருவது. இசைக்கலையின் நுட்பம் அறிந்த கலைஞனை, நாம் நம்முன் அமர்த்தி, அவன் மனம் கனிந்து பாடும் பாட்டுகளைக் கேட்கும்போது அளவிறந்த ஆனந்தம் அடைகிறோம். கலைஞன் முன்னிலையில் இன்பம் பெற உதவும் மற்றொரு கலை **நாட்டியக் கலை**யாம். நாட்டியக்கலை வல்ல பெண்மணி, தான் தெரிவிக்க விரும்பும் கருத்துகளை முகக்குறி, கைக்குறி, ஆட்டம், பாட்டு முதலிய உதவிகளால் விளக்கும் போது, அத்துறையில் அநுபவம் பெறாத குழந்தைகளும் ஆனந்தம் அடைவதுண்டு. பரத சாத்திரத்தின் நுட்பம் நம் நாட்டிலே மிகவும் போற்றப்பட்டு வளர்ந்து வருவதை அயல் நாட்டவரும் அறிந்து பாராட்டுகின்றனர்.

கவித்துவம், சித்திரம், சிற்பம் என்ற கலைகளோ, கலைஞன் வாழும் காலத்தில் அவனுக்குப் பெரும்புகழ் விளைப்பதன்றி, அவன் இறந்த பிறகும் அறிவுள்ள மக்கள் அவனை நினைத்துப் புகழ்ந்து பாராட்ட இடம் தருவனவாய் உள்ளன. ஒரு **கவி**

ஞன், தான் உலகத்திலே கண்ட இன்பக் காட்சிகளைக் கவிகளில் அமைக்கிறான். அவன் செய்த செய்யுட்களை அவனே நேரில்



அஜந்தாக் குகைக் கோவிலிலுள்ள சிற்பங்களின் தோற்றம்

வந்து கூறினால், அவன் மனமும் நம் மனமும் ஒன்று சேர்ந்து இன்ப வெள்ளத்தில் அழுந்தும் என்பது உண்மையே. ஆயினும், அவன் இறந்த பல நூற்றாண்டுகளின் பின்னும் அவனது குலம்,

மதம்,பிறப்பு, வளர்ப்பு முதலிய வரலாறுகள் ஒன்றையும் தெளி வாக அறியாத மக்களும் அவன் படைத்த படைப்புகளைப் படித்தும் கேட்டும் அவனையே கண்டு மகிழ்வதுபோல இன் புறுவது உண்டு. சித்திரமும் சிற்பமும் இங்ஙனமே அவற்றை ஆக்கிய கலைஞனுக்கு உலகில் அழியாப் புகழ் விளைப்பனவாம்.

அஜந்தாக் குகையில் காணப்படும் முற்காலச் சித்திரம்

சித்திரக்கலை **ஓவியம்** என்னும் பெயர் பெறும்.ஓவியத்துறை யில் மிக்க புகழ் படைத்த நம் முன்னோர்கள், தமது கலைத்திற மையை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் நாம் அறிந்து மகிழு மாறு நிலைபெற வைத்துப் போயிருக்கிறார்கள். இங்ஙனமே ஒவ்வொரு நாட்டிலும் பல நூற்றாண்டுகள் பழுது படாது நிலைத்து நிற்கும் ஓவியங்களை அமைத்த கலைஞர் உண்டு. ஓவியக்

கலை நெடுங்கால வாழ்வு பெற்றுத் தன்னைப் படைத்த கலைஞனுக்குப் புகழுடம்பு உதவும் பெருமை பூண்டதாம்.

கற்பாறைகளிலும், சுதை கொண்ட சுவர்களிலும், பலகைகளிலும், மண் தரைகளிலும், சிறிது உறுதி படைத்த சீலைகளிலும் தீட்டப்பெற்ற சித்திரங்கள் பல நூற்றுண்டுகள் இருந்து விளங்கும். அஜந்தாக் குகையிலும், காஞ்சிபுரக் கோவிலிலும், மஹாபலிபுரத்துக் கற்பாறைகளிலும், திருச்சிராப்பள்ளி மலைக் கோவிலிலும், புதுக்கோட்டை நாட்டுச் சிற்றன்னவாசல் மலையிலும் உலகம் புகழ, அழியாது நிலைத்த பல அற்புதச் சித்திரங்கள் உண்டு. இவை எல்லாம் இக்கலையின் நீண்ட வாழ்வைக் குறிக்கும்.

நெடுங்காலம் நிலையாக நின்று கலைஞனுக்கும் நாட்டுக்கும் புகழ் விளக்கும் சிற்பம், சித்திரம் என்ற கலைகள் ஒவ்வொரு நாட்டிலும் தனித் தன்மையோடு வளருகின்றன. **சிற்பம்** என்னும் கலையானது கல், செம்பு, பித்தளை, வெண்கலம் முதலிய கருவிகளைக் கொண்டு அழியாத கலைச் செல்வங்களை நாட்டுக்கு உதவுவதாம்.

நம் நாட்டில் வடக்குப் பகுதியில் சிற்பக் கலை ஒரு வகையாகவும் தெற்குப் பகுதியில் வேறொரு வகையாகவும் வளர்ந்துள்ளது. கல்லிற் செய்த அழகிய சிற்பங்கள் பல முதலிலே மலைக் கோவில்களில் தோன்றின. இன்றும் பம்பாய் நகருக்கு அருகில் உள்ள **யானைமலை**(எலிபெண்டா)க் குகையில் இவ்வகைச் சிற்பச் செல்வங்களைக் காணலாம். பல்லவர் காலத்தில் தமிழ் நாடெங்கும் அமைந்த அழகிய கோவில்களில் பல உயர்ந்த சிற்பங்களை இன்றும் காண்கிறோம். சுதை, மரம், செம்பு, வெண்கலம் முதலியவற்றால் இயன்ற சிற்பக்கலைச் செல்வங்கள் நம் நாடெங்கும் உள்ளன. பெரிய காட்சிச் சாலைகளில் இவற்றின் அழகு சிறிது காட்டப்பட்டுள்ளது.

வட நாட்டு அரச மாளிகைகளில் சித்திரச்சாலை என்ற தனி மண்டபம் ஒன்று உண்டு. அங்குப் பல அரிய ஓவியங்கள் இன்றும் காணப்படுகின்றன. தென்னாட்டில் சித்திரங்கள் பெரும்பாலும் கோவில்களிலேயே அமைந்திருந்தன:சில அபூர்வ சித்திரங்கள் இந்நாளிற் போற்றுவார் இல்லாமல் அழிகின்றன. சிற்பங்களும் வெயில், மழை முதலியவற்றால் உருவம் சிதைந்து வாழுகின்றன. கடற் காற்றுப் படுவதால் 'எலிபென்டாக்' குகைச் சிற்பங்கள் உருவம் சிதைந்துள்ளன. மஹாபலிபுரத்துச் சிற்பங்கள் கடல் அலைகளால் அழிகின்றன. இயற்கையே பகைக்கும்போது இக்கலைகள் எப்படி எதிர்த்து நிற்கும்?

சித்திரமும் சிற்பமும் இந்நாளில் ஒரு புது வழிபற்றி வளர்கின்றன. மேல் நாட்டார் முறைகளைப் பின்பற்றி மனித உருவங்களைக் கருங்கல், வெண்கல், சலவைக்கல், வெண்கலம் முதலியவைகளால் உயிருருவம் போலவே அமைக்கவல்ல சிற்பிகள் பலர் தோன்றியுள்ளனர். ஓவியத் துறையில் வடநாட்டு முறை வேறு, தென்னாட்டு முறைவேறு. வடநாட்டுச் சித்திரங்களின் முகத்தமைப்பு, கண்களின் இமை அமைப்பு, கைவிரல் அமைப்பு, கூந்தல் நிலை முதலிய சிறப்பு அழகுகள் தென் நாட்டுப் படங்களில் இல்லை. தென்னாட்டுப் புதுமுறை சித்திரக் கலைத் தலைவர், **இராஜா ரவிவர்மா** என்ற சேர நாட்டார் ஆவர். இவர் சித்திரங்கள் இந்நாளில் மிக்க புகழ் படைத்து நாடெங்கும் வழங்குகின்றன.

சிற்பம், சித்திரம் என்னும் இரு கலைகளும் நம் நாட்டில் வளர்ந்த வழி ஒன்று; பிற நாடுகளில் வளர்ந்த வழி வேறாகும். பிற நாடுகளில் சிற்பத்திலோ, சித்திரத்திலோ மனித உருவங்களை அமைக்கும்போது, அவை இயற்கைக்கு ஒத்திருக்கவேண்டுமென்று கருதியே அமைப்பது வழக்கம். நம் நாட்டுக் கலையில் வளர்ந்த உருவங்கள் பெரும்பாலும் தெய்வ உருவங்களும், புராண இதிகாசங்களில் வரும் பாத்திரங்களின் உரு

வங்களும் ஆகும். சமீப காலத்தில்தான், நம் நாட்டிலே மனித உருவங்கள் சிற்ப சித்திரங்களுக்கு உரிய பொருள்களாக மதிக்கப்பட்டன. இந்த நோக்கம் கொண்டு வளர்ந்த கலையில் உருவ அமைப்பு, பெரும்பாலும் உலக இயல்புக்கு ஒத்திருப்பதில்லை.

நாட்டின் பெருமையை விளக்கும் இவ்விருவகைக் கலைகளும் இந்நாளில் தக்க வழிகளில் முன்னேறுமல் மறைந்து வருகின்றன. கலைஞரைப் போற்றி ஆதரித்துப் புகழ் பூண்ட நம் நாடு, இன்று அவ்வினத்தாரையே திரும்பிப் பாராதிருக்கிறது. எதிர் காலத்தில் இக்கலைகள் நல்ல நிலைமை பெறக் கடவுள் அருளை வேண்டுவோமாக.

1. அரும்பத விளக்கம்

சங்கீதம்-இசை, நாட்டியம்-நடனம், சிற்பம்-கல்லில் செதுக்கு வேலை செய்தல், ஓவியம் - படம் வரைதல், கவித்துவம் - கவி பாடும் ஆற்றல்,கலைஞன்-சாஸ்திர உணர்வு உடையவன், பரதசாத்திரம்-நடனநூல், சுதை - சுண்ணும்பு, உயிர் உருவம்-உயிர் உள்ளதே போல் அமைந்த உருவம், புராணம் - பழைய வரலாறு.

2. கேள்விகள்

1. பழைய சித்திரங்கள் விளங்கும் இடங்கள் எவை?
2. பழைய சிற்பங்கள் நிலைத்த இடங்கள் எவை ?
3. பல்லவர் கோவில்களில் காணும் புதுமை யாது ?
4. சிற்ப சித்திர உருவங்களின் அமைப்பு வடநாட்டில் எப்படி இருக்கும் ?
5. வடநாட்டுச் சித்திரங்களுக்கும் தென்னுட்டுச் சித்திரங்களுக்கும் உள்ள வேறுபாடு யாது ?
6. இந்நாளில் சிற்பக்கலை எவ்வழியில் வளர்கின்றது?

3. இலக்கணம்

வடமொழிப் புணர்ச்சி

வடசொற்கள் ஒன்ருேடு ஒன்று சேர்தல் 'வடமொழிப் புணர்ச்சி' எனப்படும்.

வடமொழிப் பெயர்களில் உயிர் முன் உயிர் புணர்கையில் மூவகைச் சந்திகள் தோன்றும். அவை (1) தீர்க்க சந்தி (2) குணசந்தி, (3) விருத்தி சந்தி என்பன.

1. தீர்க்க சந்தி:—

(1) அ, ஆ முன் அ, ஆ வரின்,
(2) இ, ஈ முன் இ, ஈ வரின்,
(3) உ, ஊ முன் உ, ஊ வரின்,
நிலைமொழியீறும் வருமொழி முதலும் கெட, இடையில் அவற்றின் நெடில் ஒன்று தோன்றும்.

(உ-ம்.) (1) வேத + அசலம் = வே + (த் + அ) + அசலம்
= வே + த் + சலம்
= வே + த் + (ஆ) + சலம்
= வேதாசலம்

சதா + ஆனந்தன் = சதானந்தன்

(2) சுசி + இந்திரம் = சுசீந்திரம்
மகி + ஈசன் = மகீசன்

(3) குரு + உபதேசம் = குரூபதேசம்.

2. குண சந்தி:—

(1) அ, ஆ முன் இ, ஈ வரின்—அவ்விரண்டும் கெட ஏ தோன்றும்.

(2) அ, ஆ முன் உ, ஊ வரின்—அவ்விரண்டும் கெட ஓ தோன்றும்.

(உ-ம்.)(1) நர + இந்திரன் = ந + (ர் + அ) + இந்திரன்
= ந + ர் + ந்திரன்
= ந + ர் + (ஏ) + ந்திரன்
= நரேந்திரன்.

(2) கங்கா + உதகம் = கங் + (க் + ஆ) + உதகம்
= கங் + க் + தகம்
= கங் + க் + (ஓ) + தகம்
= கங்கோதகம்.

பயிற்சி

1. 'ஐவகைக் கலைகள்' என்பது பற்றிக் கட்டுரை எழுது.
2. 'கோயில்களும் சிற்பங்களும்' என்பது பற்றிக் கட்டுரை வரை.
3. இதுபற்றி இரு நண்பர் பேசுவதுபோல ஓர் உரையாடல் எழுது.
4. 'ரவிவர்மாவின் சித்திரச் சிறப்பு' என்பது பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.
5. 'சித்திரக் கலையின் சிறப்பு' என்பதுபற்றி 20 வரிகளில் ஒரு கட்டுரை எழுது.
6. மஹாபலிபுரம் பார்த்த ஒருவன், பாராதவனுக்கு அங்குள்ள சிற்பங்களைப் பற்றி எழுதுவதுபோல ஒரு கடிதம் எழுது.
7. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்களை எடுத்து எழுதி, அவை எவ்வகையைச் சேர்ந்தன என்பதைக் குறிப்பிடு:—

(1) வடநாட்டுச் சித்திரங்களின் முகத்தமைப்பு, கண்களின் இமையமைப்பு, கைவிரல் அமைப்பு, கூந்தல் நிலை முதலிய சிறப்பு அழகுகள் தென்னாட்டுப் படங்களில் இல்லை.

(2) நம் நாட்டுக் கலையில் வளர்ந்த உருவங்கள் பெரும்பாலும் தெய்வ உருவங்களே.

8. சித்திரக்கலை ஓவியம் என்றும் பெயர் பெறும், ('பெயரும்' என்ற சொல் வருமாறு வாக்கியம் அமைக்க.)

9. நம் முன்னோர்கள் தமது கலைத் திறமையை ஆயிர ஆண்டுகளுக்குப் பிறகும் நாம் அறிந்து மகிழுமாறு வைத்துப்போய் இருக்கிறார்கள். (மூன்று வாக்கியங்களாகப் பிரித்து எழுது,)

10. ஓவியத் துறையில் வடநாட்டு முறை வேறு; தென்னாட்டு முறை வேறு. (ஒரு வாக்கியமாக அமைக்க.)

11. எய்துகின்றனர், செல்வோன், கேட்பர், விளங்கினன்— இச்சொற்களில் உள்ள பகுபத உறுப்புகளைப் பிரித்துக் காட்டு.

12. (i) அன்னை தந்தையரைத் தெய்வமெனக் கொண்டு ஒழுகுக.

(ii) இன்னும் சில நாள் வாழக் கிடைத்தால் என்ன செய்வீர்?—இவைகளிலுள்ள தோன்றா எழுவாய்களைத் தோன்றக் கூறு,

13. இப் பாடத்திலிருந்து, ஆண்பால் இறந்த கால வினைமுற்று, பலர்பால் எதிர்கால வினைமுற்று, உடன்பாட்டுத் தெரிநிலைப் பெயரெச்சம், உடன்பாட்டுத் தெரிநிலை வினையெச்சம் இவைகளுக்கு உதாரணங்கள் கொடு.

14. பின்வரும் வாக்கியங்களிலுள்ள இடைச் சொற்களையும் உரிச் சொற்களையும் எடுத்து எழுது:—

(1) பிற நாட்டார் இன்னும் நம் பண்டைய குருகுலங்களின் வரலாறுகளைக் கேட்டு அறிந்து வியப்பு எய்துகின்றனர்.

(2) இக்காலத்தில் நாம் நம் முன்னோர் போல வாழ்வது அரிது.

(3) முருகனுக்குக் கடிமணம் நிறைவேறியது.

---

12. பெரிய புராணம் இயற்றிய வரலாறு

சோழர் பெருமானாகிய குலோத்துங்கன் ஒரு நாள் புலவர்களோடு அளவளாவிக்கொண்டிருக்கையில் அவர்களை நோக்கி, "புலவீர், யான் இப்போது உங்களை மூன்று கேள்விகள் கேட்க விரும்புகிறேன். நீவிர் அதற்குத் தக்க விடையளித்தல் வேண்டும்" என்றான். புலவர்கள்; "அவ்வாறே யாகுக," என்றார்கள். அதன்மேல் அரசன், "புலவீர், நிலத்தினும் பெரியது யாது? கடலினும் பெரியது யாது? மலையினும் பெரியது யாது?" என்ற வினாக்களை விடுத்தான். விடுக்கவே, புலவர்கள் ஒன்றும் தோன்றாது விழித்தனர். அவர்கள், 'என்ன! இவ்வினாக்கள் நூதனமாகக் காணப்படுகின்றன! இவற்றிற்குத் தக்கவாறு

விடையளிப்பது எங்ஙனம்?' என்று நினைத்து, வாட்டம் அடைந்து வாளா விருந்தனர். அரசனும், புலவர்கள் விடை இறுக்கமாட்டாது விழிப்பதைக் கண்டு, மீண்டும் அவர்களைக் கேட்க மனமற்றவனு யிருந்தான்.

அக்காலத்தில், தொண்டைநாட்டுப் புலியூர்க் கோட்டத் துள் விளங்கும் **குன்றத்தூர்** என்னும் திருப் பதியில், **அருண் மொழித் தேவர்** என்ற ஒருவர் இருந்தார். அவர் வேளாண் மரபைச் சேர்ந்தவர்; சிறந்த புலவர். அவர் இளமையில், ஒரு நல்லாசிரியரை அடுத்துப் பைந்தமிழைப் பாங்குறப் படித்த பெரும் புலவர். அவருக்குச் **சேக்கிழார்** என்ற பெயரும் உண்டு. அப்பெரியார் சோழன் விடுத்த கேள்விகளைப் பற்றிக் கேள்வி யுற்ருர். உடனே அப்புலவர் பெருமான்,

1. நிலத்தினும் பெரியது யாது? என்ற வினுவிற்கு,

"காலத்தினுற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது."

எனவும்,

2. கடலினும் பெரியது யாது? என்ற கேள்விக்கு,

"பயன்றூக்கார் செய்த உதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது."

எனவும்,

3. மலையினும் பெரியது யாது? என்ற வினுவிற்கு,

"நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது."

எனவும்,

ஏற்ற விடையாக மூன்று திருக்குறட் பாக்களை முறையே எழுதி, அரசன் சமுகத்திற் கனுப்பினர். இவ்விடைகளை வாசித்த சோழன், பெருமகிழ்ச்சி அடைந்தான். அவன் உடனே சிவிகை ஒன்றினை அனுப்பிச், சேக்கிழார் பெரு மானை அழைத்துவரச் செய்தான். சேக்கிழாரும் அரசன் சமு கத்திற்கு வந்தார். அவரது வருகையை அறிந்த வேந்தன், அவரை முகமன் கூறி வரவேற்றுத் தனி இருக்கை ஒன்றில் அமரச் செய்தான்.

பின்னர், சோழர் பெருமான் சேக்கிழார் பெருமானை நோக்கிப், "பெரியீர், என்னை ஒரு பொருளாக மதித்து, எனது வேண்டுகோளுக்கு இணங்கி இவ்விடம் தாங்கள் வந்தது, என் முன்னோர் செய்த பாக்கியமே ஆகும். தாங்கள் இன்று முதல் எனது அவையில் தலைமைப் புலவராகவும், அறிவு புகட்டும் அமைச்சராகவும் இருக்க விழைகின்றேன். எனது விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும்" என்று அன்பு ததும்பப் பேசினன். சேக்கிழாரும் அவன் விருப்பத்திற்கு இணங்கினர். அரசன் அவருக்கு **உத்தம சோழப் பல்லவர்** என்ற பட்டப் பெயரைச் சூட்டினன். சேக்கிழார் அமைச்சரா யிருந்து அரசியலை நன்கு கண்காணித்தார்; புலவராக இருந்து அவையை மகிழ்வித்தார்.

பல நாட்கள் சென்றன. பின்னர் ஒரு நாள், அவைப் புலவர்கள் **சீவக சிந்தாமணி** என்னும் நூலைப் படித்து உரை விரித்தனர். அந்நூல், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்ற ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றுகும். புலவர்கள் உரை விரிக்க, அரசன் செய்யுட்களில் உள்ள சொற்சுவை பொருட்சுவைகளை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

மற்றொரு நாள், சோழன் சேக்கிழாரை நோக்கிப், "பெருமானே, சீவக சிந்தாமணி என்னும் நூல் மிகுந்த அழகானதென்று எண்ணுகிறேன். அதில் சொற்சுவை பொருட் சுவைகள் ததும்பி யிருக்கின்றன. அந்நூலைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன ?" என்று உசாவினன். சேக்கிழார் காவலனைக் களிப்புற நோக்கிப், "புவியரசே, சிந்தாமணி சிறந்த காப்பியம் என்பதில் ஐயம் இல்லை. அது உம்மைப் போன்ற அரசனுன சீவகனது வரலாற்றை விரித்துக் கூறுவதோர் நூல்; உயிர்க்கு உறுதியைப் பயக்கும் நூலல்லவே! அதனைப் பேரவாவுடன் கேட்டு நீர் பெறும் பயன் என்ன? அரச இலக்கணங்கள்

ஒருங்கே அமையப் பெற்ற நீர், சீவகன் வரலாற்றை அறிந்து என்ன செய்யப்போகின்றீர்? உமக்கு ஒரு பயனும் அது விளைக்காது'' என்றார்.

அரசன் புலவர் கூற்றைக் கேட்டுக் “கவியரசே, உயிர்க்கு உறுதியைப் பயக்கும் நூல்தான் யாது? அதனை உரைத் தருள்க'' என்று ஆவலோடு வேண்டினன். சேக்கிழார், “அரச, சைவ சமயக் குரவர்களில் ஒருவரான **சுந்தர மூர்த்தி சுவாமிகள்** நாயன்மார்களின் பெயர்களைத் தொகுத்துத் **திருத்தொண்டத் தொகை** என்னும் பதிகம் ஒன்றைப் பாடியுள்ளார். அதனை முதல் நூலாகக் கொண்டு **நம்பி யாண்டார் நம்பி** என்னும் பெரி யார் **அந்தாதி** ஒன்றைப் பாடியுள்ளார். அடியார்கள் பெருமை யைக் கூறும் அத்தகைய அரிய நூல்களைப் படிக்கக் கேளும். ஆணவம், மாயை, கன்மம் என்னும் முக்குற்றங்களும் உம்மை விட்டு அகலும்; நீர் நற்பேற்றைப் பெறுவீர்'' என்று உரைத் தார்.

அரசன், “பெரியீர், தாங்கள் கூறிய நாயன்மார்களின் பெருமை பொருந்திய வரலாற்றைத் தாங்களே கூறியருளுக'' என்று வேண்டினான். சேக்கிழாரும் அதற்கு உடன்பட்டனர். அன்று முதல் சேக்கிழார் நாயன்மார்களின் பெருமையை அரச னுக்குக் கூறி, அவனை மகிழ்வித்து வந்தார். அறுபத்து மூன்று பெரியார்களின் சரிதைகள் கூறி முடிந்ததும், சோழன் புல வரை நோக்கிப், “பெரியீர், இந்நாயன்மார்களின் அருமை பெருமைகள் நன்றாகப் புலப்படுமாறு, பெரியதோர் புராணத் தைத் தாங்கள் பாடியருளல் வேண்டும்'' என வேண்டினன். சேக்கிழாரும் அதற்கு உடன்பட்டார்.

பின்னர்ச் சேக்கிழார் அரசனிடம் விடைபெற்றுத் தில்லைச் செடிகள் மலிந்து, முல்லைகள் மலரும் தில்லைச் சிதம் பரத்தை அடைந்தார்; அடைந்தவர், ஆலயத்துட் சென்று சபேசனைத் தரிசித்து, “நடன சிகாமணியே! நாயினும் கடைப்

பட்ட அடியேனை, அடியார் பெருமைகளை எடுத்துக் கூறும் பெரியதோர் புராணம் பாடும்படி அரசன் பணித்துள்ளான். நீர் இவ்வமயம் எனக்கு உதவி புரியவேண்டும்" என்று வேண்டி நின்றனர்.

அப்போது '**உலகெலாம்**' என்னும் மங்கலச் சொல் சேக்கிழார் செவியிற் பட்டது. சேக்கிழார் மனமகிழ்ந்து, அச் சொல்லையே தொடக்கமாகக் கொண்டு, சின்னாட்களில் அறுபத்து மூன்று நாயன்மார்கள் வரலாற்றையும் பாடி முடித்து, அந்நூலுக்குப் **பெரிய புராணம்** என்னும் பெயரையும் சூட்டினார்.

புராணம் பாடி முடிவு பெற்றதும், குலோத்துங்கன் தில்லையை அடைந்தான்; பெரிய புராணத்தைத் தன் இரு கண்களாலும் கண்டு மகிழ்ந்தான். பல கவியரசர்களும் புவியரசர்களும் தில்லையில் கூடினர். அவர்கள் முன்னிலையில் சேக்கிழார் பெருமான் தாம் இயற்றிய நூலை அரங்கேற்றினார். அரசன் சேக்கிழாரையும், பெரிய புராணத்தையும் யானைமீதேற்றி நகர் வலம் செய்வித்தான். மேலும், அரசன் சேக்கிழாருக்குத் **தொண்டர் சீர் பரவுவார்** என்னும் சிறப்புப் பெயரையும் அளித்தான்.

பின்னர், அனைவரும் தில்லையை விட்டு நீங்கித் தம்தம் ஊருக்கேகினர். சோழன் சேக்கிழாரை அழைத்துக்கொண்டு தன் தலைநகரை அடைந்தான்.

1. அரும்பொருள் விளக்கம்

குலோத்துங்கன் - இவன் விளங்கிய காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு. வாளா - சும்மா, ஞாலம் - உலகம், மாண - மிகவும், தூக்கார் - ஆராயாமல், நயன் - நன்மை, சமுகம் - திருமுன்பு, மலம்-குற்றம் நாயன்மார் - சைவ சமயப் பெரியாகள்.

2. கேள்விகள்

1. குலோத்துங்கன் விடுத்த வினாக்கள் எவை ?
2. சேக்கிழார் விடுத்த விடைகள் யாவை?
3. அக்குறட் பாக்களின் பொருள் என்ன ?
4. சேக்கிழார் பெற்ற பட்டப்பெயர்கள் எவை ?
5. சீவக சிந்தாமணி—யாது ?
6. அதன் பாடலைவிட் எது சிறந்ததென்று சேக்கிழார் செப்பினார் ? ஏன் ?
7. மறுமைக்குரிய வரலாறுகள் எவை எனச் சேக்கிழார் ? குறிப்பிட்டார் ?
8. 'பெரிய புராணம்'—பாடக் காரணம் யாது ?
9. சேக்கிழார் அப்புராணத்தை எப்படிப் பாடி முடித்தார் ?
10. சேக்கிழார் பெற்ற பெருஞ் சிறப்பு யாது ?

3. இலக்கணம்

3. விருத்தி சந்தி :—(1) அ, ஆ முன் ஏ, ஐ வரின், அவ்விரண்டும் கெட ஐ தோன்றும்.

(2) அ, ஆ முன் ஓ, ஔ வரின், அவ்விரண்டும் கெட ஔ தோன்றும்.

(உ-ம்.) (1) பரம + ஏகாங்கி = பரமைகாங்கி.
(2) வந + ஓஷதி = வநௌஷதி.

தன் கூற்று—பிற கூற்று

முருகன், "அப்பா, நானும் கடைக்கு வருவேன்" என்றான்.

—இதில், " " இக்குறிகட்கு இடையில் இருப்பவை முருகன் சொன்னவை. அவற்றை அப்படியே எழுதுவதால், " " இக்குறிகள் (தன் கூற்றுக் குறிகள்) இடப்பட்டுள. அவன் சொன்னதை அப்படியே கூறாமல், முருகன் தானும் கடைக்கு வருவதாகத் தந்தையினிடம் கூறினான் என்று பிற கூற்றாக மாற்றினால், தன் கூற்றுக் குறிகள் இடவேண்டுவதில்லை.

பயிற்சி

1. தாங்கிச் செய்யும் தாசன், காட்ட அஞ்சுகிருய், எண்ணி வந்த காரியம், செய்து முடிக்க வேண்டும், ஒரு பெரிய கண்ணீர்த்துளி.—தடித்த எழுத்திலுள்ள சொற்கள்பெய ரெச்சமா, வினையெச்சமா என்பதைக் காரணத்துடன் கூறு.
2. இப்பாடத்திலிருந்து தெரிநிலை வினைமுற்றுக்கும் குறிப்பு வினைமுற்றுக்கும் உதாரணங்கள் கொடு.
3. பின் வரும் வாக்கியங்களில் எழுவாய் அடைமொழிகள், பயனிலை அடைமொழிகள், செயப்படுபொருள் அடைமொழிகள், இடைப்பிறவரல் ஆகியவற்றைப் பிரித்துக் கூறு. (1) இறைவனுல் எல்லாப் பிராணிகளுடைய இன்பத்திற்காக உண்டாக்கப்பட்டிருக்கும் காற்றும் வெளிச்சமும் கூட, அரசனுக்கு இந்த ஆறுமாத கால மாக வேண்டியவளவு இல்லையாயின. (2) இந்த நிலை யில் இருந்த அரசனைக் கண்டவுடனே அவனுடைய மனமும் இளகிற்று.
4. இவ்வாறு உள்ளேசென்ற அரசன், தன் மனைவி மக்கட்கு இனி நடக்கப் போவனவற்றைக் குறித்துச் சொல்லிக் கொண்டிருக்கையில், அரண்மனைத்துணிகளை வெளுக் கும் வண்ணுன், அழுக்குத் துணிகளைச் சேர்த்துக் கட்டிக் கொண்டிருந்தான்—இவ்வாக்கியத்தைச் சிறு சிறு தனி வாக்கியங்களாக எழுது.
5. பிற கூற்று மொழிகளாக மாற்று :—
   (1) முருகன், "அப்பா, எனக்கு எழுதுகோல் வேண்டும்" என்ருன்.
   (2) தங்கை, "அண்ணு, இப்பாடம் சொல்லிக்கொடு" என்ருன்.
   (3) கந்தன், "அம்மா, நானும் அத்தை வீட்டிற்கு வருகி றேன்" என்ருன்.
6. இப்பாடச் செய்தியைச் சேக்கிழார்கூறுவதுபோலக்கூறு.

7. இதனை அரசனே கூறுவதுபோலக் கூறு.

8. இதனை நடராஜப் பெருமான் கூறுவது போலக் கூறு.

9. இதனைக் கண்டார் கூறுதல் போலக் கூறு.

10. ஒவ்வொரு பிரிவிற்கும் தக்க தலைப்புக் கொடு.

11. சேக்கிழார் அரசனைச் சார்தல்-பெரிய புராணம் பாடக் காரணம்-பாடி முடித்தமை - இக்குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

12. இப்பாடத்திலிருந்து (1) அறுவகைப் பெயர்ச்சொற்கள், (2) அளவைப் பெயர்கள் பொது, சிறப்பு, காரண, இடுகுறிப் பெயர்கள், (3) வேற்றுமைத் தொகை நிலை, தொகாநிலை, (4) பண்பு, உவமை, உம்மைத் தொகைகள், (5) இறந்தகால இடைநிலைகளை உணர்த்தும் வினை முற்றுகள், (6) செய்வினை, செயப்பாட்டுவினை, தன் வினை, பிறவினை, செயப்படு பொருள் குன்றுவினை, குன்றியவினை-இவற்றுக்கு உதாரணங்கள் காட்டு.

---

13. இரும்புத் தொழில்

உலகில் மனிதர் வாழ்விற்கு இன்றியமையாத உலோகங்களில் இரும்பு தலைசிறந்தது. பொன், வெள்ளி முதலியன இன்றிச் சில காலம் தள்ளினும் தள்ளலாம்; இரும்பு இல்லாமல் ஒருநாளும் நடவாது. கிரேக்கரும், ரோமரும், இந்தியரும் பல நூற்றுண்டுகளாக இரும்புத் தொழிலை நன்கு அறிந்தவர். ஆயினும், இந்நாளில் இரும்புத் தொழில் மேல் நாட்டில் உள்ள இங்கிலாந்து, ஜெர்மனி, ஸ்விட்ஸர்லாந்து முதலிய நாடுகளிலும் அமெரிக்க நாடுகளிலும் தலைசிறந்து விளங்குகிறது. இந்தியராகிய நாம், டில்லி மாநகரில் உலகம் மருளும் இரும்புத் தூண் நாட்டிவைத்த தொழிலாளிகளின் மரபில் வந்தும், இந்நாளில் இரும்புத் தொழிலை நன்கு வளர்க்காமல் இருக்கிறோம்.

செல்வம் மிக்க நாடுகள் என்று புகழ் பெறும் இக்கால நாகரிக நாடுகள் எல்லாம் இரும்புத் தொழிலால் வளம் படைத்த வையே என்பதை நாம் நன்கு அறிதல் வேண்டும். அறுபது ஆண்டுகளுக்கு முன்புஇத்தொழிலை நன்கு அறியாதிருந்த ஜப்பானியரும், இன்று தம் நாட்டுக்கு வேண்டிய இரும்புக் கருவிகளை எல்லாம் தாமே தொழில் செய்து படைத்துக் கொள்கின்றனர். இரும்புத் தொழிலால் முன்னேறிவரும் பிறநாடுகளைப் பார்த்தாவது நாம் விரைவில் முன்னணிபெற முயலவேண்டும்.

இரும்புத் தொழில் பெருமுயற்சியால் நடைபெறும் சிறந்த கைத்தொழிலேயாம். பல்லாயிரம் தொழிலாளிகள் உழைக்கும் பெரிய தொழிற்சாலைகளிலும் ஒருவர், இருவரே ஒத்துழைக்கும் சிறு தொழிற்களங்களிலும் இத்தொழில் நடைபெறவல்லது. ஊசி முதல் கலப்பை வரையில், தூண் முதல் உத்தரம் வரையில், தையல் இயந்திரம் முதல் பஞ்சாலை இயந்திரம் வரையில் இத்தொழிலால் நமக்கு வருகின்றன. ஆகவே, நிலத்தினுட் புதைந்திருக்கும் இரும்பை எடுப்பது முதல் பெரும் பொறிகள் அமைக்கும் தொழில் வரையில் நன்கு அறிந்து பயின்றுவரும் நாட்டவரே, இந்நாளில் உலகில் தலை நிமிர்ந்து நிற்கக்கூடும்.

ஒரு பழைய தமிழ்ப்பாட்டில், "பெற்று வளர்த்தல் என் கடமை ; நல்ல குணம் உள்ள மகன் ஆக்குதல் தந்தை கடமை; வேற்படை செய்து கூர்மையாகத் தீட்டிக்கொடுப்பது கொல்லன் கடமை ; நல்லொழுக்கம் தருவது அரசன் கடமை ; வேல் வாள் தாங்கிக் கடும்போர்புரிந்து யானைகளைக்கொன்று வெற்றி பெற்று வருவது என் காளையின் கடமையாகும்" என்று ஒரு தாய் சொன்னதாகச் சில வாக்கியங்கள் வருகின்றன. ஒரு மகனை நாட்டுக்குப் பயன்படும் வீரன் ஆக்குவதில் அரசனும் தாயும் தந்தையும் பெற்ற உரிமைக்குச் சிறிதும் குறைவுபடாத உரிமையைக் கொல்லனும் பெற்றிருக்கிறான் என்ற உண்மை

இதனால் விளங்குகிறது. **கொல்லன்** தொழில் நாட்டின் நலத்துக்கு அடிப்படையான தொழில் என்பதை இதனால் அறியலாம். பழைய இரும்பைத் தட்டி நீட்டிப் பொழுது போக்கும் கொல்லர்களைக் காட்டிலும் மண்ணிலிருந்து புது இரும்பை எடுத்து, உருக்கிப் பலவகைப் பொருள்களாகத் தொழில் செய்து நாட்டுக்குதவும் கொல்லர்கள் கோடி மடங்கு சிறந்தவர் என்ற உண்மை ஒவ்வொரு சிறுவனும் அறியத்தக்கதாம். நாட்டின் நலத்துக்கு உதவும் இச்சிறந்த தொழிலைப் பற்றிச் சிறிதளவு அறிய முயல்வோம்.

மண்ணுட் புதைந்து கிடக்கும் கல் வகைகளில் **இரும்புக்கல்** என ஒருவகை உண்டு. இக்கல் பழுப்பான செந்நிறமாகவும் கருமை கலந்த வெண்ணிறமாகவும் இருக்கும். இவ்வகைக் கற்கள் தமக்குள் வேறு பல பொருள்களோடு இரும்பையும் அடக்கி வைத்திருக்கின்றன. கற்களுள் இருக்கும் இரும்பின் அளவு அதிகமாய் இருந்தால், அவை இரும்புத் தொழிலுக்கு எடுத்துக் கொள்ளப்படும். பேருழைப்பின் மேற் சிறு பயன் வருமாயின், எவரும் தொழில் செய்ய முன் வரமாட்டார். ஆகவே, முதலில் கற்களை ஒருவன் நன்கு பரிசோதித்து எவ்வளவு இரும்பு கிடைக்கும் என்பதை அறிந்துகொள்ள முயல்வான். அதன் பிறகே அக்கற்களைப் பெயர்த்தெடுத்து உடைத்துப் போட்டு இரும்பு பிரிக்கும் தொழில் தொடங்கும். பெரும்பான்மையான இரும்புக் கற்கள் நிலத்தின்கீழ் உள்ள பாறைகளிற் கிடைப்பதால், இரும்பு எடுப்பதற்காகவே சுரங்கம் வெட்டும் தொழிலிலும் பழகவேண்டும். நெடுங்காலமாக மண்ணுள் மறைந்திருக்கும் பாறைகளோடு உட்புகுந்து ஒளிந்திருக்கும் இரும்பு, சில காலங்களில் பூகம்பங்களால் இடம் மாறிக் கிடப்பதும் உண்டு. நேர்வழிகளில் இரும்பு எளிதிலே கிடைக்கும் இடங்கள், பூகம்பங்களால் தாக்கப் பெறுத உறுதி பெற்றவையாய் இருக்கும்.

இரும்புக் கற்களில் நான்குவகை உண்டு. அவற்ருற் பெற்ற இரும்பும் வெவ்வேறு தன்மையுள்ளதாய் இருக்கும். இரும்புக் கல்லினின்று இரும்பைப் பிரித்தற்கு மிகுந்தசூடுதரும் உலேகளும் சூளேகளும் வேண்டும். நிலக்கரி மிகுதியாய் அகப் படும் இடங்களில் இரும்பும்கிடைப்பதாலேயே, இந்நாளில் இங் கிலாந்து இரும்புத் தொழிலிற் சிறந்து விளங்குகிறது. கல்லோடு கலந்த இரும்பைச் சுத்தம் செய்வதற்கு முன்ஞளிற் கரியை உபயோகித்து வந்தனர். நிலக்கரி மிகுதியாகக் கிடைக்கும் இந் நாளில் நிலக்கரியே இத்தொழிலுக்கு உதவுகிறது.

நிலத்தின் கீழ்க்கிடந்த இரும்போடு களிமண், கந்தகம் முதலிய பல பொருள்கள் கலந்திருக்கும். பெருங் கற்களாகப் பெயர்த்தெடுக்கப்பட்ட இவை நிலக்கரியோடு கலந்து சூளே யில் வைத்து எரிக்கப்படும். சூளேயின் அடிப்புறத்தில் நிலக் கரி எரிந்துகொண்டிருக்கும். அதன் மேல் ஓர் அடுக்கு இரும்புக் கல்லும், அதன்மேல் நிலக்கரியும் இரும்புக்கல்லும் கலந்த கல வையும் அடுக்கி இப்படியே மேற்பகுதிவரையில் வைப்பார்கள். கீழ்ப்பகுதியில் உள்ள இரும்புக் கற்கள் குளிர்ந்ததும் அடியில் உள்ள சிறிய வாயில் வழியாக வெளியே தள்ளப்படும். இப் படியே மேலே உள்ளவை மெல்ல மெல்லக் கீழ் இறங்கி வந்து தள்ளப்படும். இருபது பங்கு இரும்புக் கல் அடுக்கிஞல் ஒரு பங்கு நிலக்கரியைக் கொண்டு இரும்பு பிரிக்கலாம் என்று இந் நாளில் கணக்கிட்டிருக்கிருர்கள். இரும்பு பிரிக்கும் சூளேகள் அடியில் இரும்புத் தகடு வைத்து உறுதியான செங்கல்லாலும் வெப்பம் தாங்கும் பிற கற்களாலும் கட்டப்படும். அடிப்புறத் தில் வாயில் வைத்து வெந்த இரும்பை வெளியேற்ற வேண்டும். இந்நிலேயில் முன்னிருந்த நீர், கரியமிலவாயு முதலியவை பிரிந் திருக்கும்.

இனி இந்த நிலேயில் உள்ள இரும்பை நல்லிரும்பு ஆக்கு வது எப்படி என்று பார்ப்போம். பெரிய பஞ்சாலேகளில் உள்ள

புகை போக்கிகளை அடிக்கடி பார்க்கிறோம். அவ்வளவு உயரமும் அவற்றில் உள்ள உட்புற அகலத்தைக் காட்டிலும் அதிக அகலமும் உள்ள கட்டிடங்கள் கட்ட வேண்டும். வெளிப்புறம் செங்கல், சுண்ணும்பு, கருங்கல், செமெண்டு முதலிய பொருள்களால் கட்டப்படலாம். வெளிச்சுவர் வேருகவும் உட்சுவர் வேருகவும் இருக்கும்படி கட்டி, இடை வெளியில் மணல் நிரப்பவேண்டும். உட்சுவர் உறுதியாய் அமைந்திருக்க வேண்டும். இந்த இரும்புருக்கிக் காளவாயில் அடிப்புறம் வழி வைத்துக் காற்று வீசவேண்டும். பொறிகளால் இயங்கும் விசிறிகள் எழுப்பிய காற்று, வெப்பமும் விரைவும் கொண்டு பெருங் குழாய்களால் அடிப்புறம் நுழைய வேண்டும். சூளையிலிருந்து எடுத்த இரும்பைச் சுண்ணும்புக் கல்லோடு கலந்து இந்த இரும்பு உருக்கும் காளவாயில் போடவேண்டும். நிலக்கரியின் நெருப்பு இக்காளவாய்க்கு வேண்டுமளவு வெப்பம் தருவதாம். காளவாய்த் தலைப்பக்கம் ஒருபெரிய மேடை கட்டி, அங்கிருந்து சுண்ணும்புக்கல், இரும்பு, நிலக்கரி என்ற மூன்றையும் இரவு பகல் ஒழியாமல் அரைமணிக்கு ஒரு முறை கொட்ட வேண்டும். ஒரே எரிமயமாக உள்ள இந்தக் காளவாயில் உட்புகுந்த இரும்பு, தன்னுள் இருந்த பொருள்களை எல்லாம் சுண்ணும்புக்கல்லோடு சேர விடும். அவைகள் உருகி மேலே மிதக்கும். இரும்பு உருகித் தனது கனத்தால் கீழே இறங்கும். உருகிய குழம்பாக வெளுப்பாய் வெளிவரும் இந்த இரும்பு, காளவாயின் அடிப்புறம் உள்ள சிறு வாயில் வழியே மணல் பரப்பிய வாய்க்கால்களில் ஓடி, வார்ப்பிடங்களிலும் அச்சுக் குழிகளிலும் விழும். மேலே போட்ட அழுக்கிரும்பு, ஒன்றரை நாட்களுக்குப் பிறகு, உருகிய குழம்பாய்க் கீழே வரும். அழுக்குப் பொருள்கள் பிரிந்து மற்ருெரு வழியாய் வெளிப்படும்.

இக்காளவாயில் ஓயாமல் நெருப்பு எரிய இரும்பு கொதிக்கும் நிலையில் பலவகை வாயுக்கள் மேலே எழும். அவை மேற்

புறம் வந்து வீணே போய்க்கொண்டிருந்தன. இராக் காலங்களில் இவற்றின் அருகில் நின்றால் வாயுக்கள் எரிவது தெரியும். அப்பொழுது இரும்புருக்கிக் காளவாய்கள் எரிவது போலத் தோன்றும். இந்தக் காற்றுக்கள் நல்ல வெப்பம் உள்ளவை. என்பதை அறிந்த சிலர் மேற்புறம் மூடிச் சில குழாய்களின் வழியே அவற்றைக் கீழே திருப்பி உட்செலுத்திப் பயன் படுத்தும் வழியை உணர்ந்து கையாளுகின்றனர். இங்கு உருக்கி வார்ப்பிடங்களில் போகவிட்ட இரும்பில் கந்தகம், கரி முதலிய அழுக்குகள் உண்டு. இன்னும் ஒரு முறை இவ்விரும்பை உருக்கித் தூயதாக்க வேண்டும். இதற்கு ஒரு வழி உண்டு. மினரெட் என்ற சிறிய கோபுரங்கள் போல, உட்புறம் அகன்ற இடம் உள்ள கட்டிடங்களைக் கட்டி அவற்றில் முன்போலவே மறுமுறை உருக்க வேண்டும். உருகி ஓடிவரும் இரும்புக்குழம்பை வேண்டிய வார்ப்பிடங்களில் விட்டு எவ்வகை உருவம் வேண்டுமாயினும் அமைத்துக் கொள்ளலாம். வார்ப்பிரும்பு பார்க்கப் பெரிதாய் இருந்தாலும் உறுதி இல்லாதது. ஓங்கி அடித்தாலும் தவறிக் கீழே விழுந்தாலும் பிளந்து நொறுங்கிப் போகும். இதைக் காட்டிலும் உறுதியான பொருள்கள் செய்வதற்குரிய வலிமையுள்ளது அடிப்பிரும்பாகும். கொல்லன் அடித்துத் தட்டி நீட்டிப் பலவகைப் பொருள்கள் செய்ய உதவுவது அடிப்பிரும்பே ஆகும்.

வார்ப்பிரும்பை அடிப்பிரும்பாக்க எளிய வழிகள் உண்டு. வார்ப்பிரும்பில் ஒட்டியிருக்கும் கந்தகம், கரி முதலிய அழுக்குப் பொருள்களை அகற்ற வேண்டும். கரியிற் சிறிதளவு மிஞ்சியிருப்பது இரும்புக்கு வலிமையே. உறுதியுள்ள இரும்புத் தகடுகளால் அகன்ற பெரிய அடுப்புக்களும் அவற்றின்மேல் இரும்புருக்கும் இடமும் அமைக்கவேண்டும். அடுப்புக்களில் நிலக்கரியை அடிக்கடி திணித்து நெருப்பு அணையாது பார்த்துக்கொள்ளவேண்டும். உலையிலிருந்து சிறிய

புகைபோக்கியால் புகை வெளிப்படும். அப்புறம் காற்று நுழையத்தக்க வழிகள் இருக்கவேண்டும். மேலே கொதிக்கும் இரும்பை ஒரு தொழிலாளி தக்க இடத்தில் நின்று அடிக்கடி துழவவேண்டும். துழவிய பிறகு உட்புறம் பார்க்கக் கூடுமாயின் கரி எரிந்து வெளிப்படும் அழகிய காட்சியைக் காணலாம். அடிக்கடி உள்ளே காற்று நுழையும்படி செய்து, இரும்பை உருண்டைகளாகச் சுழலும்படி செய்யவேண்டும். இப்படி அமைந்த இரும்பு உருண்டைகளைப் பெரிய இடுக்கிகளால் வெளியே எடுத்து நீராவியால் ஓடும் சம்மட்டியின் கீழ்வைத்து அடிக்க வேண்டும். இப்படி அடித்த பிறகு விரைவாக இரு வழிகளாலும் உருளும் உருளைகளின் கீழ் இந்த இரும்பு உருண்டைகளை வைத்துத் தட்டி நீட்டவேண்டும். இந்நிலையில் அழுக்கு எல்லாம் நீங்கி இருப்புப் பாளங்கள் வெளிவரும். இவை மிக்க நீளத்தோடிருப்பதால் வெப்பம் இருக்கும்போதே வெட்டும் பொறியால் வெட்டிச் சிறு துண்டுகளாகச் செய்யப்படும். பின்னும் இவற்றை ஓர் உலையில் காயவைத்து உருளைகளில் உருட்டிச் சேர்க்கவேண்டும். இவ்வளவு பாட்டின் பிறகு வந்ததே அடிப்பிரும்பு ஆகும். இதனை மயிர் இழையினும் நுண்ணிய கம்பிகளாக அடித்து நீட்டலாம்; மெல்லிய இழைத் தகடுகளாகவும் அடிக்கலாம்.

இனி, உருக்கு என்ற எஃகு எப்படி இயலுகிறது என்று அறிய முயல்வோம்: உருக்கு வாள், வேல் முதலிய கருவிகளுக்கெல்லாம் வேண்டியதாகையால், அது மிகவும் தொழில் திறமை படைத்த கொல்லர்களாற் செய்யப்படுகிறது. உருக்குத் தொழிற்சாலையிலும் இரும்பை உருக்கும் காளவாய் உண்டு. இங்கும் நிலக்கரி நெருப்பே வேண்டும். இரும்பு இங்கு உள்ள வெப்ப மிகுதியால் விரைவில் உருகும். உருகிய குழம்பைப் பெரிய குழாய்களின்வழியே ஓடவிட்டுக்கழுத்து வளைந்த ரு பெருங் கலத்தில் விடுவார்கள். இக்கலம் இரும்பை உருக்

காக மாற்றுவதாகையால் இதற்கு 'மாற்று கலம்' என்றே பெயர் வழங்கும். இக்கலம் தன்னுள் கொள்ளும் அளவு இருப்புக் குழம்பை ஏற்றுக்கொண்டதும் நிமிரும். இது நிறைந்ததும் உலேவாய் மூடிக்கொள்ளும். இக்கலத்தில் ஏழெட்டு டன் நிறையுள்ள இரும்புக் குழம்பு அடங்கும். இக்கலத்தின் அடியில் உள்ள சிறு உருளேகளின் மேல் உருண்டு ஓடும்போது தீப் பொறிகள் எழும். மாற்று கலத்தின் வாய் வழியே பொன் னிறமான ஒளிப்பிழம்பு தோன்றும். அங்கு வீசும் காற்று எரிவதால் அக்காட்சி கிடைக்கிறது.

இக்காற்று மாற்று கலத்தினுள் நுழையும்போது பெரு முழக்கம் எழும். உள்ளிருக்கும் குழம்பு கொதிக்கும். அப் பொழுது இரும்பிற் கலந்திருந்த கரி சிறிதேனும் நில்லாமல் ஓடிவிடும். கரி வெளியேறியதும் எரிதல் அடங்கிவிடும். பதி னேந்து நிமிஷங்களில் இத்தொழில் நிறைவேறலாம். காற்றுப் போக்கியால் மாற்றுகலத்தினுள் இந்தக் கால்மணி நேரமும் காற்று நுழைந்து வரும். இக்காற்றினுல் உட்புகுந்த பிராண வாயுவை அகற்ற வேண்டும். முற்றிலும் கரிச்சத்து வெளி யேறி விட்டதால் உருக்கின் நலத்துக்காகச் சிறிது கரி சேர்க்க வேண்டும். இதற்காக **'பெற்ரோ மங்கனீஸ்'** என்ற பொருளே உருகிய இரும்போடு கலக்கிறர்கள். கலந்த சிறிது நேரத்தில் உருகிய இரும்பு மாற்றுகலத்திற்கு அருகில் உள்ள இரும்புத் தொட்டிகளுக்கு ஓடுகிறது. அத்தொட்டிகளிலிருந்து குழியாக அமைத்த பல அறைகளில் இழுந்து பல உருவங் களேப் பெற்று உருக்காக வெளிவருகிறது. வெளிவந்த உருக் குப் பாளங்களின் மேல் குளிர்ந்த தண்ணீரை இறைத்துக் குளிரவைத்து அடுக்குவார்கள். பின்பு அதனே வேண்டிய உரு வங்களாகச் செய்து பயன்படுத்தலாம்.

இங்ஙனம் கிடைத்த எஃகிலிருந்தே பேருருவம் உள்ள பல பாளங்களும், துப்பாக்கி, பீரங்கி, வாள், வேல், ஈட்டி, ஊசி

முதலிய பொருள்களும் தனித்தனியே செய்யப்படுவதால், அவற்றைச் செய்யும் தொழிற்சாலைகளில் வெவ்வேறு வகையாய் நடைபெறும் தொழில்களைப் பார்த்தே அறியவேண்டும். இரும்பினுல் இயலும் பலவகைப் பொருள்களையும் செய்யும் தொழிலாளி ஒரு நாட்டின் வாழ்வுக்கே சிறந்த துணையாவான். மண்வெட்டி, கோடரி, அரிவாள், கொழு முதலியவை இரும்பு இல்லாமற் கிடைக்குமா ? இவை இல்லாது நிலத்தைப் பண்படுத்தி உழுது பயிர் வளர்க்க இயலுமா? படிக்கல், தராசு, படி, உழக்கு, ஆழாக்கு முதலியவை இல்லாமல் வியாபாரி வியாபாரம் செய்ய இயலுமா? இவை எல்லாம் இரும்பால் இயன்றவையன்றோ? ஆணி, கீல் முதலியவை இல்லாமல் வீடு கட்ட இயலுமா ? பணத்தைப் போற்றி வைக்கும் பெரிய நிதிச் சாலைகளுக்கு வேண்டிய பெட்டிகள் இரும்பு இல்லாமல் இயலுமா ? புகைவண்டி, கப்பல், ஆகாய விமானம், பலவகைப் பொறிகள் எல்லாம் இரும்பின் முழுத்துணையால் நடப்பனவே. ஆகையால் இரும்புத்தொழில் ஒவ்வொரு நாட்டுக்கும் உயிர்த் தொழில் ஆகும்.

1. அரும்பத விளக்கம்

பொறி - இயந்திரம்; பெரும்பாடு - பேருழைப்பு; புகைபோக்கி - புகையை வெளியேற விடுவது; வாயு - காற்று; தூயது - பரிசுத்தமானது; கலம் - பாத்திரம்; ஒளிப்பிழம்பு - ஒளியின் திரட்சி; நிதிச்சாலை - பொக்கிஷசாலை.

2. கேள்விகள்

1. இரும்பு எத்தனை வகைப்படும் ?
2. பண்டைக் காலத்திலிருந்தே இந்தியர்கள் இரும்புத் தொழிலை அறிந்திருந்தனர் என்பதற்கு ஆதாரம் கூறு.
3. பிற பொருள்களோடு கலந்து கிடக்கும் இரும்பை எவ்வாறு பிரித்து எடுக்கின்றனர் ?
4. இரும்பை நல்லிரும்பு ஆக்குவது எப்படி ?

5. வார்ப்பிரும்பு, அடிப்பிரும்பு இவைகளுக்குள்ள ஏற்றத் தாழ்வு யாது ?
6. வார்ப்பிரும்பை அடிப்பிரும்பாகச் செய்யும் வழி யாது?
7. உருக்கு என்ற எஃகு எப்படி இயலுகிறது ?

3. இலக்கணம்

பாட்டை எப்படி மனப்பாடம் செய்து சீர் பிரித்து ஒழுங்காக எழுதிப் பழகவேண்டும் என்பதை நீங்கள் சென்ற பாடபுத்தகத்தில் படித்தீர்கள். இங்கு முக்கியமான பாடல்கள் இன்னவை என்பதை அறிக.

1. ''கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.''

இதில், முதல் அடி நான்கு சீர்களை உடையது; இரண்டாம் அடி மூன்று சீர்களை உடையது. இம்முறையில் முடியும் செய்யுள் **குறள் வெண்பா** எனப்படும். **திருக்குறள்** என்னும் நூலில் உள்ள எல்லாப் பாக்களும் குறள் வெண்பாவினுல் ஆனவையே ஆகும்.

2. நல்வழி, நன்னெறி, நீதிவெண்பா, நீதிநெறிவிளக்கம் முதலியவற்றில் உள்ள பாடல்கள் எல்லாம் நான்கு அடிகளை உடையவை. அவற்றில் முதல் மூன்று அடிகள் நந்நான்கு சீர்களை உடையவை; நான்காம் அடி மூன்று சீர்களை உடையது. இப்படி வருவது **நாலடி வெண்பா** எனப்படும்.

எத்தகைய பாடல்கள் வரினும் வரிகளைக் கவனித்துச் சீர்களை எண்ணி மனப்பாடம் செய்யின், பிழையின்றி எழுதிப் பயன்பெறலாம்.

பயிற்சி

1. பின்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்களுக்குத் திணை, பால், எண், இடம் இவற்றைக் கூறு:—
(1) உத்தமன் என்னை வளர்ப்பவன்—எனக்கு
உற்றது கண்டு செய்வானவன்.
(2) தம்பியே ஈதொரு பட்டமாம்—இது
தந்தவன் என்னை வளர்க்கிருன்.

2. சேர்த்து எழுது:—
அங்கு + அங்கே, ஈது + ஒரு, வேட்டைக்கு + போகிறேன், உண்ண + உணவு, என்னை + அடிப்பவர், யான் + இது.

3. இரும்புத்தொழில் ஒவ்வொரு நாட்டுக்கும் உயிர்த்தொழில் என்பதைப்பற்றி விவரமாகப் பேசு.

4. உன் வகுப்பறையிலாவது பள்ளிக்கூடத்திலாவது என்னென்ன இரும்புச் சாமான்கள் எங்தெந்த வகையில் பயன் படுகின்றன என்பதைப்பற்றி ஒரு வியாசம் வரைக.

5. இயல்பாதல், மிகுதல், திரிதல், கெடுதல், இரட்டுதல்-இவற்றிற்கு முறையே இரண்டிரண்டு உதாரணங்கள் கொடு.

6. வேற்றுமைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை—இவற்றிற்கு இரண்டிரண்டு உதாரணங்கள் கொடு.

7. பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், எழுவாய்த் தொடர், விளித்தொடர்—இவற்றிற்கு இரண்டிரண்டு உதாரணங்கள் தருக.

8. என்ன தொகை? அல்லது, என்ன தொடர்?—நிலங்கடந்தான், கல்யானை, கல்பெரிது, பிறைநுதல், அண்ணா வா, நாய் ஓடிற்று, நனி உண்டான், வந்தான் வரதன், பைந்தொடி சென்றாள், ஊரின்கண் இருந்தான்.

9. சேர்த்துப் புணர்ச்சி விதி கூறு:—
கிளி + அழகு, சே + அடி, வீடு + இடிந்தது, நாடு + யாது, கல் + எறி, பணம் + இறை, பெருமை + அன், செம்மை + ஆம்பல்.

10. இப்பாடத்தின் மூன்றாம் பிரிவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் கூறு.

---

14. பாரி வள்ளல்

பண்டைக் காலத்தில், செந்தமிழ் நாட்டில் சிறப்புற்று விளங்கிய கடையெழு வள்ளல்களுள் **பாரி** என்பவனும் ஒருவனுவான். அவன் முந்நூறு ஊர்களைத் தனதாகக் கொண்டு ஆட்சி புரிந்தவன்; அறிவிலும், திருவிலும், உருவிலும், பிறவற்றிலும் தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லாது விளங்கியவன்; முந்நூறு ஊர்களுக்கிடையில் தலை சிறந்தோங்கிய **பறம்பு மலை**யைத் தனக்குறைவிடமாகக் கொண்டவன். முடியுடை வேந்தர் மூவரும் தன்னைக் கண்டு அழுக்காறு கொள்ளும் வண்ணம், இன்சொல்லோடு வேண்டியார் வேண்டியவற்றை விரும்பிக் கொடுக்கும் உதாரகுண முள்ளவன்; பருந்தும் கிளியும் பகையின்றி ஒரு கூட்டில் வாழுமாறு, தண்ணளியோடு குடிகளை ஆதரித்த கண்ணியன்; தன்னோடு பகைத்தவர் யாவரே யாயினும் அவரைப் புறங்காட்டி ஓடச்செய்யும் படைவலியும், துணைவலியும், தோள்வலியும் பெற்றவன்; இல்லை என்றிரப்பவர் முகத்தைக் கண்டிரங்கி, வேறொருவரிடம் அவர் சென்று இல்லை என்றிரவா வண்ணம், அன்னோர் இடுக்கண்களையும் இயல்பினன். மதி நலனுற்ற புலவர்களது நட்பைப் பேணி ஒழுகும் பெற்றியன்; புலவர்களது கூரிய மதிக்கு உவந்து, தனது சிறியவும் பெரியவுமாகிய முந்நூறு பதிகளையும் அவர்களுக்குப் பரிசிலாக உதவியவன்.

ஒருகால், இவன் தனது பொற்றேர்மிசை இவர்ந்து மலைவளங் காணச் சென்றான்; சென்று, ஆங்காங்கு விளங்கும் இயற்கை நலங்கண்டு மகிழ்வுற்று வருங்கால், வழியில் ஒரு முல்லைக் கொடியைக் கண்டான். அது நன்கு செழித்து அடர்ந்து அழகாக விளங்கியது. ஆயினும், மேல் நோக்கிப் படரக் கொழுகொம்பு இல்லாமையால் தத்தளித்துக்கொண்டிருந்தது. அதைக் கண்ட பாரி பரிதபித்து, "ஐயோ! இந்த முல்லைக் கொடி

ஆதரவில்லாது வருந்துகின்றதே" என மனம் நொந்து, அதன ருகில் சென்று அதற்காதாரமாகத் தனது தேரை அங்கு நிறுத் தினன்; அது அதனைப் பற்றிக்கொள்ள உளம் மகிழ்ந்தான். பிறகு, அவன் கால்கள் கடுக்க நடந்து சென்று, தனது அரண் மனையை அடைந்தான். பல சொல்லி என்? "கொடுக்கிலாதா னைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை" என்று சுந்தர மூர்த்தி சுவாமிகளே புகழ்ந்து கூறுவாரானல், அவனது கொடைத் தன்மையோடு கூடிய பெருந்தகைமையை யாரால் அளவிடக்கூடும்?

இத்தகைய புகழ் தாங்கிய பாரியின் நாடு, இயற்கையில் நீர் அரணும், நிலவரணும், மலையரணும் உடையதாயிருந்தது; மேலும் கடுங்கோடையிலும் வற்ருத பல நீரூற்றுக்களும், மலை யருவிகளும் பெற்றிருந்தது. அதனல், எக்காலத்திலும் அங்கே பஞ்சம் என்பது பஞ்சமாயிற்று. குடிகளும் தமக்கு வேண் டியவற்றைச் சிறு முயற்சியால் தேடிக்கொண்டு இன்புற்று வாழ்ந்து வரலாயினர். பாரியும், வறிஞன் ஓம்பும் ஓர் செய் யெனக் குடிகளைக் காத்து வந்தனன். இவனது பகைவர்க்குப் பின்னிடாத வீர வாழ்க்கையினையும், பெருந்தன்மையான குணங்கள் பலவற்றையும் பலவாறு புகழ்ந்து, புலவர் பெரு மக்கள் பாடியிருக்கின்றனர். அவருள் கபிலரும், ஔவையா ரும் முதன்மையானவர்கள். அவர்களது பாடல்களை எல்லாம் புறநானூறு என்னும் நூலிற் பரக்கக் காணலாம். பாரி, மற் றைய புலவர்கள் யாவரினும் கபிலரையே பெரு நட்பாளராகக் கொண்டிருந்தான்.

ஒரு சமயம், ஔவையார் பாரியின் பெருமையைக் கேள்வி யுற்றுப் பரிசில் பெறுவதற்காகப் பறம்பு மலையை அணுகினர். அவரது வருகையை ஏவலாளர் மூலம் அறிந்த பாரி, எதிர் சென்று அழைத்து, ஆசனத்திருத்தி உபசரித்தான். ஔவை யாரும் சில தினங்கள் தங்கி, அரிய பொருள்களை அவன் மனம்

களிக்குமாறு கூறிக் கொண்டிருந்தனர். பாரியும் அவற்றைக் கேட்டுக் களிப்பெய்தினுன். இவ்வாறிருக்கும் நாளில் ஒளவையார், தாம் வேற்றிடம் செல்லவேண்டும் என்பதையும் குறிப்பாக ஒரு செய்யுளில் தெரிவித்தார். பார்த்தான் பாரி. அவரை விட்டுப் பிரிவதற்கு மனம் வருந்தினுன். தனக்குள், "இப்பொழுது பரிசிலைக் கொடுத்தால் இவர் நம்மை விட்டு நீங்கிவிடுவார்;பரிசில் தர நீட்டித்தால் மனம் புழுங்குவார்; அல்லாக்கால் கொடிய சாபமிடினும் இடுவர். இதற்கென்ன செய்யலாம்?" என்று யோசித்துக் கடைசியில், ஒளவையாருக்குச் செம்பொன்னும், பட்டும், பிறவும் பரிசிலாக வேண்டிய மட்டும் கொடுத்து வழியனுப்பினுன். ஒளவையாரும் அவற்றைப் பெற்றுக் களிப்புடன் வேற்றுநாட்டை நோக்கி ஏகினர்.

பின்பு பாரி, ஒளவையார் பிரிவிற்கு மிகவும் மனம் கவன்ருன். அதன்பின், அவரைத் தன்னிடம் அழைத்துக்கொள்ளக் கருதி, சில ஏவலாளரை அழைத்து, "நீங்கள் ஒளவையாருக்கு முன்னே வழிப்பறியாளர்போற் சென்று, அவரிடமுள்ள பொருள்களை அபகரித்துக்கொண்டு வாருங்கள்" எனக் கட்டளையிட்டான். கட்டளையைத் தலைமேற்ருங்கிய பணியாளர் அங்ஙனமே சென்று, அபகரித்துக்கொண்டு வந்து பாரி வள்ளலிடம் கொடுத்தனர். கொடுத்த சிறிது போழ்திற்கெல்லாம் ஒளவையாரும் திரும்பிவந்து நடந்த வரலாற்றை நவின்றனர். பாரியும் ஒன்றும் அறியாதவன்போல் "அவ்வாரு நடந்தது?" என்று வியந்து, பின் தன்னெண்ணம் பலித்தமைக்கு மகிழ்ந்தான்; அதன்பின், குதூகலமாக அவரோடு பல விஷயங்களை உசாவுதலிலேயே காலம் கழித்தான்; பிறகு அவர்க்கு நேர்ந்த குறை, தன்னுல் ஏற்பட்டதென்பதையும் கூறி, மன்னிக்கும்படி வேண்டினுன். ஒளவையாரும் பாரி தன்னிடத்து வைத்துள்ள உழுவலன்பிற்கு மெச்சிச் சில தினங்கள் அவனுடன் உறைந்

தார். அதன்பின், பாரியின் கவற்சியை நீக்கி அவன் அனுமதி பெற்றுச் சென்றனர். இவ்வாறு பாரி, தன் காலம் முழுவதை யும் புலவர்களோடு உரையாடிக் கழிப்பதிலும் பொருள் முழு வதையும் அவர்களுக்குப் பரிசில் அளிப்பதிலும் செலவிட் டான். அதனுல், அவன் கொடைப்புகழ் உலகெங்கும் பரவ லாயிற்று. தமிழ்நாட்டு முடியுடை மூவேந்தரினும் அவனுக்குப் புகழ் மிக்கது.

இவ்வாறு புகழுடன் விளங்கிய பாரியின் பெருமையைக் கண்டும் கேட்டும் அழுக்காறு கொண்ட தமிழ்நாட்டு முடி யுடை வேந்தர் மூவரும், பாரியை எவ்விதத்திலாவது அடக்க வேண்டுமெனத் தீர்மானித்தனர். அதற்காக அவர்கள் தம்தம் சேனைகளையெல்லாம் ஒன்ருகத் திரட்டினர்; பாரி இருக் கும் பறம்பு மலைக்குச்சென்று அதனை வளைத்துக்கொண்டனர். உள்ளிருப்பவர்களுக்கு யாதொரு உணவுப்பொருளும் செல்லா தவாறு படையால் காவல்செய்து தடுத்தனர். அதனுல், உள்ளி ருந்தவர்கள் யாதோர் கவலையுமடையவில்லை; மாற்ருர் மூவரின் வல்லமையைக்கண்டு மனம் உடையவுமில்லை. ஏனெனில் அவர் கள், இயற்கையாக அங்குக் கிடைக்கக்கூடிய பழம், கிழங்கு, தேன் முதலியவற்றை உண்டு வாழ்ந்திருந்தனர். இவ்வாறு அடுபடைக்கு அஞ்சாது ஆற்றலுடையவர்களாய் எதிர்த்து நின்றதனுல், மூவேந்தர்களும் தங்கள் எண்ணம் பலியாதது கண்டு வருந்தினர். "நம்மினும் மிகமிகச் சிறிய இடத்தை யுடைய பாரியை வெற்றி கொள்ளுதற்கில்லையே! நம் எண்ண மெல்லாம் விழலுக்கிறைத்த நீர்போல் ஆயிற்றே. இனி, இயற் கையரணும், வளனுமுடைய இவனை நாம் திறமையால் வெல்ல முடியாது. மான் பிடிக்கும் வேடுவர் போலத் தந்திரத்தால் வெல்லவேண்டும்" எனத் தீர்மானித்தனர். பின்பு, அவ்வாறே

வஞ்சனையால் சென்று வளைத்து, அந்தோ! கற்பகத் தருவை, கருணையின் வைப்பை, வள்ளல்களுள் மிக்கானைப் பிடித்துக் கொன்றனர்.

தலைவன் மாய்ந்ததை யறிந்த பறம்பு நாட்டுக் குடிகள், ஆற்றெணுத் துயர்க்கடலில் ஆழ்ந்தனர். பாரியின் மனைவியோ தனித்து உயிர்வாழ விரும்பாது, அக்கால வழக்கப்படி உடன் கட்டை ஏறினள். இவற்றை யறிந்த பாரியின் ஆருயிர் நட்பாள ராகிய **கபிலர்** மிகவும் வருந்தினர்; தம் உயிரையும் மாய்த்துக் கொள்ளக் கருதினர். ஆனல், நட்பாளனது செல்வமகளிர் இரு வர்க்குத் தம்மையன்றி வேறுகதியில்லையே என்று உணர்ந்தார். அவர்களுக்குத் தந்தை நிலையிலிருந்து கடிமணத்தை முடித்து வைத்து விட்டுத் தம் கருத்தை நிறைவேற்றிக் கொள்ளலா மென முடிவு செய்தார். அதன்பின், திருவனைய எழிலுடைய **அங்கவை, சங்கவை** என்னும் பெயர் கொண்ட அம்மகளிர் இரு வரையும் அழைத்துக்கொண்டு முடியுடை மூவேந்தர்பாற் சென்று, அவர்களை மணந்து கொள்ளுமாறு வேண்டினர். அவர்கள் பழம்பகையைக் கருதி மறுத்ததனல் வேறு வழி காணுது, அவர்களிருவரையும் ஔவையாரிடம் ஒப்படைத் தார். பிறகு தாம் கருதியவாறே உலகில் வாழவிரும்பாது, பாரியை நினைந்து நினைந்திரங்கி, **வடக்கிருந்து** உயிர் துறந்தார். கபிலரது நட்பின் பெருமையைப் பாருங்கள்! இதுவன்றே உத்தம நட்பாகும்! பாரியின் மரணத்தையும், தன் சகோதர ரின் விளைவையும் கேட்ட ஔவையார் வருந்தினர்; பின்பு, பாரி மகளிர் இருவரையும் திருக்கோவலூர் அரசனிடம் அழைத்துச்சென்று, அப்பெண்மணிகளை விவாகம் செய்து கொள்ளுமாறு அவனை வேண்டினர். அவ்வரசன் "மூவேந்தரும் வந்திருந்து விவாகத்தை நடப்பித்தால் அவர்களை மணந்து கொள்ளத் தடையில்லை என்ருன்."

ஔவையாரும், அவ்வண்ணமே மூவேந்தரையும் வரவழைத்துக் கடிமணம் நடப்பித்தனர். பாரி மகளிர் அவ்வரசனை மணந்து இனிது வாழ்ந்திருந்தனர்.

1. அரும்பத விளக்கம்

கடையெழு வள்ளல்கள் - பாரி, ஓரி, அதிகமான், ஆய், பேகன், காரி, நள்ளி என்போர். அழுக்காறு-பொறாமை, இரவாவண்ணம் - யாசியாதபடி, பதி - ஊர், அரண் - காவல், கவன்றான் - வருந்தினான், உழுவல் அன்பு - அளவிடற்கரிய அன்பு, கடி - உரிச்சொல்.

2. கேள்விகள்

1. பாரியின் உயர் குணம் யாது ?
2. இவன் முல்லைக்குத் தேர் தந்த செய்தி யாது ?
3. பாரியின் நாட்டுச் சிறப்பு எத்தகையது ?
4. பாரியும் ஔவையாரும்—என்பது பற்றிக் குறிப்பெழுது.
5. மூவேந்தர் பறம்பு மலையை முற்றுகையிடக் காரணம் என்ன ?
6. அவரது முற்றுகையைப்பற்றி யாது அறிவாய் ?
7. கபிலர் பாரிக்குச் செய்த உதவி என்ன ?
8. கபிலர் சிறந்த நண்பர் என்பது எதனால் தெரிகிறது?
9. ஔவையார் செய்த சேவை யாது ?

3. இலக்கணம்

1. **மோனை** :—செய்யுளில் ஓர் அடியின் முதலெழுத்தோடு மற்றைய அடிகளின் முதலெழுத்து ஒன்றுபட்டு வருவதும், ஓர் அடியில் முதற்சீரின் முதலெழுத்தோடு மற்றைய சீரின் முதலெழுத்து ஒன்றுபட்டு வருவதும் மோனையாம்.

உ-ம் :—"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

2. **எதுகை**:-செய்யுளில் ஓர் அடியோடு மற்றைய அடியிலாவது ஓர் அடியின் முதற்சீரோடு மற்றைய சீரிலாவது (முதல் எழுத்து

அளவில் ஒத்து நிற்க) இரண்டாம் எழுத்து ஒன்றுபட்டு வருவது எதுகையாம்.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

பயிற்சி

1. இப்பாடத்தில் வந்துள்ள ஆறு வட சொற்களை எடுத்துக் கூறு.
2. தலைமுறை தலைமுறை, ஆள் பின் ஆள், அறிவிலும் அழகிலும், கோப தாபங்கள், இவ்வண்ணம், மனச்சாட்சி - இத்தொடர்களை உபயோகித்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.
3. நூற்றிரண்டு, சூரியதேவன், புல் பூண்டுகள், மதப் பிரசாரம்—இத்தொடர்களின் இடையில் மறைந்துள்ள சொற்கள் தோன்றும்படி கூறு.
4. பரமானந்தம், தேவாமிர்தம்,தேவேந்திரன்,சூரியோதயம், தேவாவேசம், சிம்மாசனம், ஞானோதயம், கணேசன், உதயாஸ்தமனம் —பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறு.
5. இப்பாடத்தை மௌனமாகப் படி; பிரிவுகளுக்குத் தலைப்புக் கொடு.
6. இதனைச் சுருக்கி ஒரு கட்டுரை எழுது.
7. பாரியின் நாடும் அரணும், அவன் ஈகைச் சிறப்பு, மூவேந்தர் முற்றுகை, கபிலரும் ஔவையாரும் செய்த சேவை—இக்குறிப்புகளைக்கொண்டு 4 பிரிவுகளில் ஒரு கட்டுரை எழுது.
8. பின்கண்ட தனி வாக்கியங்களை ஒன்று சேர்த்துச் சேர்க்கை வாக்கியமாகவோ அல்லது கலப்பு வாக்கியமாகவோ மாற்றி யமைக்க :—

(1) இராமன் வில்லை முறித்தான்; அதனால் அவன் சீதையை மணந்து கொண்டான்.

(2) காவலாளிகள் மறைந்து மறைந்து சென்றார்கள்; அவர்கள் திருடர்களைப் பிடித்துவிட்டார்கள்.

(3) பாண்டவர்கள் தரும மார்க்கத்தில் சென்றார்கள்; அவர்கள் யுத்தத்தில் வெற்றி பெற்றார்கள்.

(4) அநுமான் கடலைத் தாண்டினான்; அநுமான் இலங்கையை அடைந்தான்; அநுமான் அசோக வனத்தில் சீதையைக் கண்டான்.

(5) நாய் வேகமாக ஓடிற்று; நாய் முயலைப் பிடித்தது.

9. பின்கண்ட கலப்பு வாக்கியங்கள் அல்லது சேர்க்கை வாக்கியங்களைத் தனி வாக்கியங்களாகப் பிரித்து எழுது:—

(1) யுத்தத்தில் நிராயுதபாணியாய் நின்ற இராவணனை இராமன் நோக்கி, "இன்று போய் நாளை வா" என்றான்.

(2) பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷம் வன வாசமும் ஒரு வருஷம் அஞ்ஞாத வாசமும் முடித்து வந்தும், துரியோதனன் அவர்களுக்கு நாடு தரவில்லை.

(3) நீ என்னை முன்பு தூற்றினாயாதலால் அதற்குத் தக்க பலனை இப்போது அடைகிறாய்.

(4) போரில் புறங்கொடுத் தோடிய வீரர்களைச் சேனாதிபதி கூவி யழைத்தான்.

(5) நீ ஒழுங்காய் வேலை செய்யவில்லை யாதலால், உனக்குச் சம்பளம் குறைக்கப்பட்டது.

10. பின்வரும் வாக்கியங்களில் நேர்க்கூற்று மொழிகளுக்கும், பயனிலைக்கும் உள்ள சம்பந்தத்தைக் கூறு:—

(1) சித்திரக்கிரீவன் என்னும் புறாவானது மற்றப் புறாக்களைப் பார்த்து, "நாம் எல்லாரும் வலையுடனே பறந்து போவோம்" என்றது.

(2) வேடன் வருவதைக் கண்ட காகம் மானைப் பார்த்து, "நீ செத்ததுபோல் படுத்துக் கொள்" என்றது.

(3) "நீ செய்தது நியாயமல்ல" என்பதே அவன் கூற்று.

(4) "நீ நல்ல லாபம் அடைய வேண்டும்" என்பதே என் நோக்கம்.

(5) "நீ இந் நேரம் எங்குச் சென்றிருந்தாய்" என்பதை யான் அறிய விரும்புகிறேன்.

---

15. தெய்வச் செயல் (பாட்டு)

1. தெய்வம் இருப்பதையே—மனமே!
தேறித் தெளிந்துகொள்வாய்;
தெய்வ அருளமைப்பால்—உலகில்
தீமைகள் நன்மைகளே.
தெய்வத் திருவருளால்—முயற்சி
செயம்பெ றுவதுண்டே;
தெய்வம் மறந்தவர்க்கே—எதுவும்
சேருதல் ஆகாதன்றே!

2. காட்டினில் முன்னொருநாள்—ஒருவன்
காலால் நடந்துவந்தான்;
நாட்டினில் தீங்குசெய்த—பகையை
நாடி மறைந்துவந்தான்.

வீட்டினில் எண்ணமுடன்—அவனிருள்
வேளையிற் செல்கையிலே,
ஆட்டினில் வல்லதுவாம்—படங்கொள்
அரவம் வந்ததுவே.

3. பாம்பினைக் கண்டதுமே—மிகப்பெரும்
படையும் நடுங்குமென்பார் ;
பாம்பினைக் கண்டஅவன்—நடுங்கிப்
பதறி ஓடினனே ;
வேம்பெரு வெயிலிலே—நடந்ததோர்
வேதனை மிக்கதுவே ;
சாம்பொழு தாகியதோ !—எனஅவன்
சந்தேகம் கொண்டனனே.

4. பின்னே தொடர்ந்துவரும்—பாம்பினைப்
பின்புறம் பார்த்துக்கொண்டே,
முன்னே விரைந்தோடினன் ;—அவனெதிர்
மூண்டொரு வேங்கைவர,
'என்னே கடவுள்செயல் !—வனத்தினில்
எங்கும் எனைக்கொல்லவே
இன்னே புலியும்பாம்பும்—முறையுற
ஏறிட்டுக் கொண்டனவே !'

5. என்று மனந்தளர்ந்தே,—'கடவுள்
இருப்பதும் உண்மைஎன்றால்,
இன்று புரந்தருள்வான் ;—எனக்கினி
ஏதும் வழியில்லையே !
சென்று மறைவதற்கே—பிறிதொரு
செல்லும் இடமுமில்லை ;
நன்று பெருகிவரும்—நதியினில்
நான்குதிப் பேன'னவே.

6. எண்ணிக் குதித்துவிட்டான் ;—நதியிடை
ஏற்ற வுணவுகண்டே
உண்ண விழைந்ததொரு--முதலையும்
ஓடி நெருங்கியதே.
'அண்ணலே ! எம்பெருமான் !—எனையேநீ
ஆண்டருள்' என்றுரைத்தே
கண்ணவன் மூடினனே—இறைவன்
கருணை செய்கெனவே.

7. எங்கும் இருப்பவனாய்—செயும்வினை
யாவையும் வல்லவனாய்த்
தங்கும் ஒருகடவுள்—அருளினால்
சார்ந்த புலியதுதான்,
அங்கு விரைந்துவந்தே—அரவினை
ஐயோ ! நசுக்கிவிட்டே,
பொங்கும் புதுவெள்ளத்தில்—விரைவுறப்
பொட்டெனப் பாய்ந்ததுவே.

8. பாய்ந்த புலியினையே—நதியினிற்
பார்த்த பெருமுதலை,
வாய்ந்த வுணவெனவே—அகன்றதன்
வாயினிற் கவ்வியதே ;
தேய்ந்த மனமுடையான்—விழிகளைத்
திறந்து பார்த்தலுமே,
ஆய்ந்த அறிவதனால்—இறைவன்
அருளினை ஓர்ந்துணர்ந்தான்.

9. 'யாவும் அவன்செயலே !—உலகினில்
என்செயல் ஏதுமில்லை ;
யாவும் அறிந்தருள்வான்—எனக்கவன்
இன்னுயிர் தந்தளித்தான் ;

யாவும் அவனருளில்—முறையுற
இன்புற வாழுமன்றோ!
யாவும் நலமென'வே—மனத்தினில்
எண்ணினன் சென்றனனே.

10. செல்வ மடைகருத்தால்—அவனுக்குத்
தீமை நினைத்தவர்தாம்,
நல்ல மனத்தினராய்ப்—பிறகவன்
நண்பினை நாடிவந்தார்.
வெல்வது வேண்டுமென—நினைக்கினும்
வெற்றி விளைவதுண்டோ?
சொல்வது செய்யவல்லான்—அவனருள்
தோன்றிடின் நன்மையுண்டே.

1. அரும்பத விளக்கம்

அருள் அமைப்பு - கருணையினால் அமைந்த வண்ணம்; செயம்-வெற்றி; முன் + ஒரு = முன்னொரு; பகை - பகைவர்; இருள் வேளை-இரவு; ஆட்டு-தலை தூக்கி ஆடுதல்; அரவம்-பாம்பு, சத்தம்; படை-சைனியம், ஆயுதம்; வேம்பெரு வெயில் - வேகின்ற மிக்க வெயில்; சாம் - சாகும்; இன்னே - இப்பொழுதே; ஏறிடுதல் - மேற்கொள்ளுதல்; புரந்து - காத்து; நன்று - மிக நல்லது; விழைந்தது - விரும்பியது; அண்ணல் - தலைவன், கடவுள்; கண் + அவன் = கண்ணவன்; பொங்கும் - பெருக்கெடுத்துவரும்; பொட்டென - பொருக்கென, விரைவாக (குறிப்புப் பொருளை உணர்த்தும் இடைச்சொல்); ஓர்ந்து - எண்ணி; அளித்தான்-அருள்கூர்ந்தான்; நாடி - தேடி.

2. கேள்விகள்

1. தெய்வச் செயல் என்பது யாது?
2. ஒருவனுக்கு வந்த ஆபத்துக்கள் எவை?

3. ஆபத்தில் அகப்பட்ட மனிதன் மனம் என்ன எண்ணியது?

4. அவன், தன்னை ஆபத்திலிருந்து விடுவித்துக் கொள்ள என்ன செய்தான்?

5. 'தெய்வ அருளமைப்பால், உலகினில் தீமைகள் நன்மைகளே' என்பதை இக்கதையில் பொருத்திக் காட்டு.

3. இலக்கணம்

1. சிங்கம் போன்ற அரசன். இதில், சிங்கம்—உபமானம்; அரசன்—உபமேயம். போன்ற - உவமை உருபு. இப்படி உபமானம் முன்னும் உபமேயம் பின்னும், இரண்டிற்கும் இடையில் உவமை உருபும் வருதல் **உவமை அணி** எனப்படும். (அணி - அலங்காரம்.)

2. அரசன் ஆகிய சிங்கம்—இதில், உபமேயம் முன்னும், உபமானம் பின்னும், இரண்டிற்கும் இடையில் 'ஆகிய' என் உருபும் வந்துள்ளன. இங்ஙனம் வருதல் **உருவக அணி** எனப்படும்.

குறிப்பு :—மலர்பாதம் = மலர் (போன்ற) பாதம் - உவமை அணி.

பாதமலர் = பாதம் (ஆகிய) மலர் — உருவக அணி.

இப்படி, 'போன்ற' 'ஆகிய' என்பவை மறைந்தும் வருதல் உண்டு. இப்படி வரின், சொற்றொடரை விரித்துப் பார்த்தால் பொருள் விளங்கிவிடும்; இலக்கணம் எளிதில் சொல்லலாம்.

4. பயிற்சி

1. ஒழுங்கான உரைநடையில் மாற்றி அமைக்க:—

(1) "தெய்வம் இருப்பதை யேமனமே! தேறித் தெரிந்து கொள்வாய்."

(2) " அண்ணலே, எம்பெருமான் எனையே நீ
ஆண்டருள் என்றுரைத்தே
கண்ணவன் மூடினனே இறைவன்
கருணை செய்கெனவே."

2, வாழும், மூடப்படும், தொடங்கும், வளரும்—இவற்றைப் பெயரெச்சமாகவும், வினைமுற்றாகவும் வைத்து உதாரணங்கள் கொடு.

3. கருக்கொண்ட, தற்காப்பு, குடி பிரிந்து, நாட்டுத் தேனீ, உணர்ச்சிக் கருவிகள்—இவை ஒவ்வொன்றையும் வேற்றுமை விரியாக்கிக் விளக்கிக் காட்டு.

4. வெறுங்கண்கள், கொசுத் தேனீ, இளங்குஞ்சு, இரட்டைக் கால்கள், புதுக்கூடு, இடிசுவர்—இவற்றுள் ஒவ்வொன்றும் இன்ன தொகைநிலைத் தொடர் என்று விளக்கிக் கூறு.

5. இப்பாடத்தில் வந்துள்ள ஒவ்வொரு பிரிவுக்கும் தலைப்புக் குறிப்புகள் எழுது.

6. பின்வரும் தனிவாக்கியங்களைச் சேர்த்து ஒரு வாக்கியமாக எழுது.

இவற்றுள், மலைத் தேனீ கடுஞ்சினம் உள்ளது. கொடுக்கால் கொட்டிக் சொல்லும் சக்தி உள்ளது. நெருங்கிய மனிதரை நெடுந்தூரம் துரத்திக் கொட்டித் துன்புறுத்தும் இயல்புள்ளது.

7. பின்வருஞ் சொற்களைச் சேர்த்து எழுது :—
ஆராய்ந்த + அறிஞர்கள், சோம்பலை + அறிந்து, பூக்களில் + உள்ள, கொடுக்கு + உண்டு.
இ + இனம்.

8. இப்பாட்டில் உள்ள எழுவாய், பயனிலைகளைக் கூறு.

9. பயனிலைகளுக்கு உறுப்பு இலக்கணம் கூறு.

10. இப்பாட்டில் உள்ள பெயரெச்ச, வினையெச்சங்களைச் சொல்லு.

11. இப்பாட்டின் கதையைச் சுருக்கி எழுது.

12. ஒருவன் பிரயாணம். வழியில் **நேர்ந்த ஆபத்துக்கள்**, அவன் தப்பியது, அவன் **பேச்சு**, நீதி—இக்குறிப்புகளைக் கொண்டு, இக்கதையை 24 வரிகளில் ஒரு **கட்டுரை யாக** எழுது.

---

16. சென்னை நகரம்

சென்னை நகரம் மிகப் பெரிய நகரமாதலால் இது ஒரு ஜில்லாவாகவே கருதப்படுகிறது. இதற்கு **மதராஸ்** என்னும் வேறு பெயரும் உண்டு. இதற்குச் சென்னை என்று பெயர் வந்ததற்கு ஒரு வரலாறு வழங்குகிறது. அதாவது, சுமார் 350 வருஷங்களுக்கு முன் ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வியாபாரம் செய்ய வந்தபோது, அவ்வியாபாரக் கூட்டத்தின் தலைவரா யிருந்த **ஸர். பிரான்ஸிஸ் டே** என்பவர் இப்போது சென்னையில் கோட்டை இருக்குமிடத்தை ஓர் இந்து சிற்றரசரிடமிருந்து விலைக்கு வாங்கினர். அச்சிற்றரசரின் பெயர் **சென்னப்பன்** என்பது. அவர் அதனை விற்கும்போது தன் பெயரால் அவ் விடத்தைவழங்கவேண்டுமென்றுகேட்டுக்கொண்டார். அதனல் அதற்குச் **சென்னப்பன் பட்டணம்** எனப் பெயர் இடப்பட்டது. அப்பெயரே பிற்காலத்தில் மருவிச் **சென்னப்பட்டணம்**, அல்லது **சென்னை** என வழங்கிவருகிறது.

இந்நகரம் சுமார் 9 மைல் நீளமும் 3 மைல் அகலமும் உள்ளது. **கூவம், அடையாறு** என்னும் இரண்டு சிறிய நதிகள் மேற்கிலிருந்து கிழக்காக இதன் குறுக்கே பாய்ந்து கடலில்

கலக்கின்றன. **பக்கிங்ஹாம் கால்வாய்** என்னும் ஒரு கால்வாய். இப்பட்டணத்தில் வடக்கிலிருந்து தெற்காக இந்த இரண்டு ஆறுகளையும் குறுக்கிட்டுச் செல்லுகிறது.



பக்கிங்ஹாம் கால்வாய்

முற்காலத்தில் சிறு ஊர்களாயிருந்த பல இடங்கள் ஒன்று சேர்ந்து இப்போது சென்னை நகரமாக ஆகியிருக்கின்றன. அவ்வூர்களில் முக்கியமானவை **சேத்துப்பட்டு, எழும்பூர், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர்** என்பனவாம்.

நகரத்தின் மத்தியில் அதன் முக்கிய பாகமாய் **ஜார்ஜ் டவுன்** என்பது விளங்குகிறது. ஆதியில் இதற்குப் **பிளாக் டவுன்** என்று பெயர் ஏற்பட்டிருந்தது. ஏனெனில் ஆங்கிலேயர் முதன் முதல் சென்னையில் கோட்டை கட்டி வியாபாரம் செய்யப் புகுந்தபோது, நம் இந்தியர் இப்பாகத்தில் குடியேறலாயினர். பிறகு ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் நம் நாட்டைப் பார்வையிட வந்தபோது, அப்பழைய பெயரை மாற்றித் தம் பெயரால் அதை வழங்கச் செய்தார்.

நகரத்தில் நாம் காணுதற்குரிய பல விசேஷ இடங்கள் உள்ளன. அவற்றுள் ஹார்பர் அல்லது துறைமுகம், செயிண்ட் ஜார்ஜ்கோட்டை, ஹைகோர்ட், கலங்கரை விளக்கம், பீப்பிள்ஸ் பார்க் என்னும் சிங்காரத் தோட்டம், உயிர்ப்பிராணிகள் காட்சிச்சாலை, பொருட்காட்சிச்சாலை, மீன்காட்சிச்சாலை, கன்னிமேரா நூல் நிலையம், ரேடியோ ஸ்டேஷன், திருவல்லிக்கேணியிலுள்ள பார்த்தசாரதி கோயில், மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில், மூர் மார்க்கெட் ஆகியவை முக்கியமானவை.



சென்னைத் துறைமுகம்

துறைமுகம் :— சென்னைத் துறைமுகம் இயற்கையில் ஏற்பட்ட துறைமுகம் அல்ல. துரைத்தனத்தார் மிகுந்த பொருள் செலவழித்துக் கடலில் மூன்று பக்கங்களில் சுவர்கள் எழுப்பி, மத்தியில் கடலை ஆழமாகத் தோண்டிக் கப்பல்கள் கரையோரத்தில் வந்து நிற்கும் படியான ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். இங்குக் கிரேன்கள் என்னும் இயந்திரக் கூம்புகளின்

மூலமாகக் கப்பல்களில் சாமான்களை ஏற்றுவதும், அவற்றிலிருந்து சாமான்களை இறக்குவதும் பார்ப்பதற்கு மிகுந்த வியப்பாயிருக்கிறது.

கலங்கரை விளக்கம் :—இது ஹைகோர்ட் கட்டிடத்தில் ஓர் உயர்ந்த கோபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இரவில் இதினின்று மிக்க பிரகாசமான ஒளி சுற்றிச்சுற்றி வீசுவது பார்ப்பதற்கு வியப்பூட்டுவதாயிருக்கிறது.



செயிண்ட் ஜார்ஜ் கோட்டை

செயிண்ட் ஜார்ஜ் கோட்டை :—இதனுள் பல பெரிய கட்டிடங்கள் இருக்கின்றன. அவை இராஜாங்க சம்பந்தமான உத்தியோக சாலைகளாக உள்ளன.

பீப்பிள்ஸ் பார்க் என்னும் சிங்காரத் தோட்டம் :—இது ஜார்ஜ் டவுனை அடுத்து மேற்கில் பார்க் டவுனில் இருக்கிறது. இதனரு

கில் மூர் மார்க்கெட்டும், நகர பரிபாலன சபை உள்ள ரிப்பன் கட்டிடமும், உயிர்ப்பிராணிகள் காட்சிச்சாலையும் உள்ளன. இங்குப் பலவகையான செடிகளை வரிசை வரிசையாய் அழ காய்ப் பயிர் செய்திருப்பதைப் பார்க்க மகிழ்ச்சி பொங்கு கிறது. இங்கு மாலை வேளைகளில் நகர மக்கள் வந்து உட் கார்ந்து களிப்புடன் பொழுது போக்குகிறார்கள். அதற்காக இங்கு ரேடியோவும் அமைக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதி யில் பந்தய மைதானம் ஒன்று உள்ளது. அங்குக் கிறிஸ்துமஸ் காலத்தில் ரேக்ளா வண்டிப் பந்தயம், குதிரை வண்டிப் பந்த யம் முதலிய பல பந்தயங்கள் நடைபெறுகின்றன.



சென்னை மாகாணத்தின் நியாயஸ்தலம்

ஹைகோர்ட் :—இதில் நியாய ஸ்தலமும், சட்ட கலாசாலை யும், கலங்கரை விளக்கமும் அடங்கியிருக்கின்றன. இவை அழ கான கட்டிடங்களாய் உள்ளன.

உயிர்ப் பிராணிகள் காட்சிச் சாலை :—இங்குச் சிங்கம், புலி, சிறுத்தை, கரடி, வெள்ளைக் கரடி, ஒட்டைச் சிவிங்கி, பல வகைக் குரங்குகள், பலவகை மான்கள் முதலிய மிருகங்களும், தீப்பறவைகள், சாதாரண மயில்கள், புறாக்கள், வாத்துக்கள்,

அன்னங்கள், பலவகை நிறக் குருவிகள், பெரிய நாரைகள் முதலிய பறவைகளும், பலவகைப் பாம்புகளும் வளர்க்கப்படு கின்றன. இங்குள்ள ஒரு குளத்தில் ஓரணாச் செலவில் சிறு பட கில் ஏறிச் சுற்றி வரலாம்.

பொருட்காட்சிச் சாலை :—இது எழும்பூரிலுள்ளது. இதனரு கில் ரேடியோ ஸ்டேஷன் இருக்கிறது. இங்கு யானை, திமிங்கிலம் இவற்றின் எலும்புக் கூடுகள் உள்ளன. இறந்துபோன பெரிய சுறு மீன் முதலிய பலவகை மீன்களும், கிளி, நாரை, பருந்து, கொக்கு, காக்கை, குருவி முதலிய பல பறவைகளும் பஞ்ச டைத்து வைக்கப்பட்டுள்ளன. பலவகைப் பல்லிகள், தேள் கள், சிறு பாம்புகள் ஆகியவை திராவகங்களில் சேமிக்கப் பெற்றுள்ளன. கற்சிலைகள் ஒருபுறமும், மரச்சாமான்கள் வேறொருபுறமும், பித்தளை, வெண்கலம், செம்பு முதலியவற் றாலானபல பண்டைக்காலத்துப்பொருள்கள்மற்றொரு புறமும், வாத்தியக் கருவிகள், கத்தி, துப்பாக்கி, பீரங்கி முதலிய யுத்த சாமான்கள் இன்னொரு புறமும், பூமியிலிருந்து கிடைக்கும் உலோகங்கள், கற்கள் முதலியன மற்றொரு புறமும், கடலி லிருந்து கிடைக்கும் பவளப் பூச்சிக் கூடுகள் முதலியன மற்று மொரு புறமுமாகச் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

மீன்காட்சிச் சாலை :—இங்குப் பல மீன்களை உயிருடன் கண்ணாடிப் பெட்டிகளில் நீர் நிரப்பி அவற்றில் விட்டு வைத்திருக்கிறார்கள். மாலை நேரத்தில் மின்சார விளக்கு வெளிச்சத்தில் இவை பல நிறங்களுடன் கூடிப் பார்ப்பதற்கு மிக்க அழகாயுள்ளன. இது திருவல்லிக்கேணிக் கடற்கரையில் உள்ளது. இதனருகில் பிரஸிடென்ஸி காலேஜ் என்னும் சர்க்கார் கல்லூரி இருக்கிறது. இங்குள்ள கடற்கரை பரந்தது. இங்கு ரேடியோ அமைக்கப்பட்டிருக்கிறது. மாலை நேரத்தில் நகர மாந்தர் இங்குவந்து கூடி, ரேடியோ பாட்டுக் கேட்பவர்

களாய் மணலில் உட்கார்ந்து, களிப்புடன் பொழுது போக்குவர்.

கானிமோரா நூல்நிலையம் :—இது பொருட்காட்சிச் சாலையின் ஒரு புறத்தில் அமைந்திருக்கிறது. தென்னிந்தியாவிலுள்ள நூல்நிலையங்களுள் பெரியது இதுவே என்னலாம். இங்கு யாவரும் சென்று வேண்டிய நூல்களைப் பெற்று, அங்கேயே இருந்து வாசித்துக் கொடுத்துவிட்டு வரலாம். துரைத்தனத்தார் குறிப்பிட்டுள்ள கட்டணமாகிய இருபது ரூபாயை முன்பணமாகச் செலுத்தினல் ஒரேகாலத்தில் மூன்று நூல்களை வீட்டுக்குக் கொண்டுவந்து படித்துவிட்டுக் குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பிக் கொடுத்துவிடலாம். நமக்கு வேண்டியுள்ள நூல்களை வீட்டுக்குக் கொண்டுவந்து படித்துவிட்டுப் பழுது படாமல் திருப்பிக் கொடுத்துவிட்டபின், மேலும் நூல்கள் வீட்டுக்கு வாங்கிவர விரும்பாவிடில், முன்பணமாகக் கட்டியுள்ள இருபது ரூபாயைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம், மொழி முதலியவைகளைக் குறித்த நூல்கள் இங்கு ஆயிரக்கணக்கில் உள்ளன.

ரேடியோ ஸ்டேஷன் :—இங்குத் தினந்தோறும் பல பாடகர்கள் பாடுவதற்கு வருகிறார்கள். இன்னும் இங்குச் சிறு நாடகங்கள், சொற்பொழிவுகள் முதலியனவும் நடைபெறுகின்றன.

திருவல்லிக்கேணியிலுள்ள பார்த்தசாரதி கோவில், மயிலாப்பூர் கபாலீசுவரர் கோவில் :—இவை தென்னிந்தியாவில் ஸ்ரீரங்கம், மதுரை முதலிய இடங்களிலுள்ள கோவில்களைப்போல் அவ்வளவு பெரியவையல்ல; ஆயினும் பண்டைக்காலந் தொட்டுப் புகழ்பெற்றவை. இக்கோவில்களை அடுத்து முறையே ஒவ்வொரு தெப்பக்குளம் இருக்கிறது.

மூர் மார்க்கெட் :- இங்கு ஒரு பெரிய கட்டிடத்திற்குள், ஜவுளிக் கடைகள், விளையாட்டுச் சாமான்களை விற்கும் கடைகள், பூட்ஸ் கடைகள், பழக்கடைகள், கறிகாய்க்கடைகள் முதலிய பலவகைக் கடைகள் நிறைய இருக்கின்றன.

மேற்கூறியவற்றைத் தவிர நகரத்தில் பல சினிமாக் கொட்டகைகள், பல பெரிய வியாபார நிலையங்கள் முதலியன உள்ளன. ரயில்வே கம்பெனிக்காரர்களின் கட்டிடங்களாகிய சென்ட்ரல் ஸ்டேஷன், பீச் ஸ்டேஷன் முதலியவையும் பார்க்கத் தகுந்த மிகப் பெரிய கட்டிடங்களாம். இன்னும் இந்நகரில் பல தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றுள் பெரம்பூரில் உள்ள இரண்டு பஞ்சாலைகளும், தண்டையார்ப் பேட்டையிலுள்ள கண்ணாடித் தொழிற்சாலையும், வண்ணாரப் பேட்டையிலுள்ள பால்சாலையும் முக்கியமானவை. இந்நகரத்தில் கடற்கரையோரத்தில் உள்ள செம்படவர்கள் தினமும் கடலில் கட்டுமரங்களில் சென்று, மீன் பிடித்து வருவது பார்க்க வெகு வியப்பூட்டுவதாயிருக்கிறது. தற்காலத்தில் சினிமாப்படம் பிடிக்கும் தொழிற்சாலைகள், கீழ்ப்பாக்கம், அடையாறு, மயிலாப்பூர் முதலிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1. அரும்பொருள் விளக்கம்

வழங்க - கொடுக்க, விநோதம் - அழகு, ரேடியோ - ஒலி பரப்பி, பிரசித்தி - புகழ், புத்தக சாலை-நூல் நிலையம்.

2. கேள்விகள்

1. சென்னபட்டணம் என்ற பெயர் வரக் காரணம் யாது?
2. இந்நகரம் எப்படி அமைந்துள்ளது ?
3. துறைமுகம்—எத்தகையது?
4. கோட்டையைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?
5. சிங்காரத் தோட்டத்தைப்பற்றி விளக்கு.

6. உயிர்ப் பிராணிகள் காட்சிச் சாலையைப்பற்றி யாது அறிவாய்?

7. பொருட்காட்சிச் சாலையைப்பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல்லு.

8. மீன் காட்சிச் சாலையைப்பற்றி யாது அறிவாய்?

9. கானிமோரா புத்தக சாலை, ரேடியோ ஸ்டேஷன் இவற்றைப்பற்றிக் கூறு.

10. மூர் மார்க்கெட்டைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

3. இலக்கணம்

1. இராமன் தன் ஆசிரியரைக் கண்டதும் வணங்கி நின்றான்.—இப்படி மாணவர் நடத்தல் இயல்பே அல்லவா? இங்ஙனம் இயல்பாக நடத்தலைக் கூறுதல் **தன்மை அணி** அல்லது **தன்மை நவிற்சி அணி** எனப்படும்.

மகன் தந்தையைக் கண்டு எழுந்தான்.—**தன்மை அணி.**

2. "இராமனை அழைக்கச் சென்ற பரதன் சேனையைச் சேர்ந்த யானைகள், கங்கை நீரைக் குடித்தமையால், கங்கைநீர் கடலுக்குப் போகவில்லை"—இப்படி விஷயத்தை மிகைபடுத்திக் கூறுதல் **உயர்வு நவிற்சி அணி** எனப்படும்.

மாளிகை மேக மண்டலத்தை முட்டி நின்றன.—**உயர்வு நவிற்சி அணி.**

பயிற்சி

1. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களுக்குத் திணை, பால், எண், இடம் இவற்றைக் கூறு:

(1) முன்னாளில் இராவணன் என்ற அரக்கனை வாலிற் சுற்றி மலைகளைத் தாவி நான்கு கடல்களுக்கும் சென்ற வீரன் வாலி.

(2) தந்தையைக் கொன்ற பாவிக்கு நீ அடிமை பூண்டு வாழலாமா?

2. இப்பாடத்தில் வந்துள்ள முறைப்பெயர்களை எடுத்தெழுது.

3. பின்வரும் வாக்கியங்களை மாதிரியிற் காட்டியபடி மாற்று:

(மாதிரி) இராமனிடத்தில் நல்ல குணங்கள் உண்டு. இராமன் நல்லவன்.

(1) கந்தன் முன்கோபமடையும் இயல்புள்ளவன்.
(2) மாம்பழம் இனிய சுவை யுடையது.
(3) வானரர்களுக்குத் தலைமை பூண்டவன் அங்கதன்.
(4) மெய் பேசுகிறவனை யாவரும் விரும்புவர்.

4. இப்பாடத்தில் முதல் பிரிவில் உள்ள எழுவாய் பயனிலை செயப்படுபொருள் கூறு.

5. இரண்டாம் பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்ச்சொற்களைச் சொல்லு.

6. மூன்றும் பிரிவில் இருக்கும் பொது, சிறப்பு, காரண, இடுகுறிப் பெயர்களைக் கூறு.

7. நான்காம் பிரிவில் உள்ள ஐம்பால் பெயர்களைச் சொல்லு:

8. ஐந்தாம் பிரிவில் இருக்கும் செயப்படுபொருள் குன்றிய வினை குன்றுவினை, தன்வினை, பிறவினைகளைக் கூறு.

9. ஆறும் பிரிவிலுள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைச் சொல்லு.

10. ஏழாம் பிரிவிலுள்ள எழுவாய், பயனிலைகளின் பொருத்தத்தைத் தெரிவி.

11. சென்னை நகரத்தைப்பற்றிப் பிரிவுத் தலைப்புகளுடன் 24 வரிகளில் ஒரு கட்டுரை எழுது.

12. 'சென்னையில் காணத் தக்கவை' என்னும் தலைப்புடன் ஒரு கட்டுரை வரைக.

17. இயற்கையும் செயற்கையும்

உலகில் இயற்கை, செயற்கை என்னும் இருவகை அமைப்பும் உண்டு. இயற்கை யமைப்பு கடவுள் படைப்பால் இயலுவதாம். செயற்கை அமைப்பு, மனிதர் முயற்சியால் அமைவதாம். இயற்கைக் காட்சிகளில் ஒருவகை அழகு உண்டு. செயற்கை யமைப்புகளில் மற்றொருவகை அழகு உண்டு; செயற்கை அமைப்பிலே மனிதன் அறிவின் நுட்பம், ஆழம் அகலம் முதலிய சிறப்புக்களைக் காணலாம். இயற்கை அமைப்பிலே, எங்கும் பரந்து ஒரே தன்மையாய் இருக்கும் எல்லாம் வல்ல கடவுளின் அளவிலா ஆற்றலின் ஒவ்வொரு பகுதியையும் அறியலாம்.

கடவுள் கருணையே மனிதன் அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையாம். ஆதலின், மனிதன் தனது அறிவை வளர்த்து, அரிய பெரிய பல புதுமைகளை அமைத்து, உலகின் எழிலை வளர்க்கத் தொடங்கும்போது, கடவுளின் கருணையைத் துணைக்கொண்டே தன் முயற்சியில் இறங்குகிறான். மிகச் சிறும் செயலிலிருந்து அறிவை மருட்டும் பெருஞ் செயல் அளவும், கடவுள் செயலால் தன்னைக் கருவியாகக் கொண்டு இயல்வதே என்று அறிவுள்ள மனிதன் உணர்கிறான். மனிதப் பிறப்பைப் பெற்றதன் பயன் அறிவுச் செல்வத்தைப் பயன்படுத்துவதேயாம். கடவுள் அருட் செல்வத்தோடு கலந்த அறிவுச் செல்வமே, உலகின் இயற்கை அழகையும் செயற்கை அழகையும் உள்ளவாறு உணரவல்லது.

இயற்கையில் உள்ள அழகுகள் எத்தனை? அவை நம் அறிவின் அளவில் அடங்குவனவல்ல; நம்மைச் சுற்றி எங்கும் பரந்து விரிந்துள்ளன. பல உருவங்கள் பூண்டு, அவை நம் முன் தோன்றினும், அவற்றின் நோக்கம் கடவுள் செயலை

நமக்கு விளக்கும் ஒன்றேயாம். நகரங்கள் அமைப்பது நம் செயல் என்று நினைத்து, நாம் காடுகளை அழித்து நாடுகள் வகுக்கிறோம். காடுகள் அடர்ந்து செறிந்துள்ள பகுதிகள் குளிர்ச்சி மிகுந்து, நிறைந்த மழை பெய்யத்தக்க இடங்களாக இருப்பதை நாம் அறிவதில்லை.

பல்லாயிரக் கணக்கான தேக்கு மரங்கள் ஓங்கி வளர்ந்திருக்கும் ஒரு காட்டுள் நாம் நுழையும்போது, நம் மனம் அடையும் ஆனந்தத்துக்கு எல்லை உண்டோ? வானம் அளாவ வளர்ந்த அம்மரங்களின் நெடுமையும், இலைகளின் அடர்த்தியும் அகலமும் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. நிலத்திலே குனிந்து பார்த்தால் எங்கும் பசுமை விளக்கும் புல்வளம் கண்ணைக் கவர்கின்றது. நமக்குப் பெயர் தெரியாத பலவகைச் செடிகளையும் கொடிகளையும் காண்கிறோம். பலவகை மரங்கள் வளரும் காட்டுள் நுழைந்தால், எத்தனை வகை இலைகள்! எத்தனை வகை மலர்கள்! எத்தனை வகைக் காய்கள்! எத்தனை வகைப் பழங்கள்! மலர்களில் எத்தனை நிறம்! இலைகளில் எத்தனைவகை உருவம்! ஒற்றையாகவும் அடுக்காகவும்நிற்கும் மலர்களின் அழகிய காட்சியை என்னென்பது! யார் செயல் இது!

குன்றுகளில் ஏறும்போது, சில பாறைகள் மேலிருந்து உருண்டுவந்து ஓர் இடத்தில் சிறிது ஒட்டி நிற்பது போலக் காணும் காட்சிகள் உண்டு. சில பெருங்கற்கள் ஒருபுறம் சாய்ந்து, "இதோ விழுந்து விடுகிறேன்!" என்று சொல்வது போல இருக்கும். சில கற்கள் வழவழப்பாய்ப் பளிங்குபோல் இருக்கும். சில கற்கள் பல நிறம் காட்டி ஒளிவிடும். மண்ணிலும் பலவகை நிறங்களைக் காண்போம். தகுந்த வழியைக்கண்டு பிடித்துஏறும்போதே பெருமூச்சு வாங்கும். வழி அறியாது சுற்றிச் சுற்றி வந்தால் நம் கண்முன் எத்தனை வகைக் காட்சிகள் தோன்றும்! ஊரும் எறும்புகளில் எத்தனை வகை காண்போம்!

பறக்கும் பூச்சிகளில் எத்தனை வகை நம் கண்முன் வந்து காட்சி கொடுக்கும்! அவற்றின் இறகுகளின் நிற அழகும், உருவ அமைப்பும் யார் செயலை வெளிப்படுத்துகின்றன? குன்றுகளின் உயர் நிலைகளை அடைந்து சரிவுகளைப் பார்க்கும்போது சூரிய உதயமோ, சூரிய அஸ்தமனமோ ஏற்பட்டால், எத்தனை அழகான காட்சி தோன்றுகிறது! அருவிகள், சுனைகள் இருக்கும் இடங்களுக்குப் போனால், நாம் அடையும் ஆனந்தத்தை அளவிட்டுரைக்க இயலுமோ? கை வைத்தால் நடுக்கம் கொடுக்கும் அவ்வருவி நீரில் நாம் நம்மையே மறந்து துள்ளிக் குதிக்கின்றோம்.

கடலருகில் கரைகளில் நடக்கும்போது, அலைகள் மலை போல் எழுந்துவந்து மோதும் காட்சிகளைக் காண்கிறோம். கரை சேரவரும் சிறு படகுகள் படும் பாட்டையும் ஆட்டத்தையும் பார்க்கிறோம். கப்பல்களில் ஏறிக் கடலுட் சென்றால், எங்கும் நீர் மயமாய் நீல நிறமே குடிகொண்ட வானமும் கடலுமே காண்கின்றோம். இரவில் கப்பல் மேல்தட்டுக்களில் நின்று நக்ஷத்திர மண்டலங்களைப் பார்க்க நேர்ந்தால், கடலும் வானமும் ஒன்றுபோலத் தோன்றும் அரிய காட்சியைக் காண்கிறோம். முழுமதி எழுந்து வரும்போது, கடல்நீர் எல்லாம் பொங்கும் புதுமையும் கண்டு மகிழ்கிறோம்.

சூரிய உதயத்தின் முன்பு, புல்லின்மேல் நின்ற பனித்துளிகள் முத்துப்போல் இருக்கும் காட்சி எத்தனை அழகாய் இருக்கிறது! சூரியன் தலை தூக்கும்போது, அப்பனித்துளிகள் சிறிய கோளம்போல நின்று ஏழு நிறங்களைக் காட்டும் காட்சியை என்னென்போம்! இவ்வளவு அழகுடன் விளங்கிய பனித்துளிகள் சூரிய வெப்பத்தால் மறையும்போது புல்லிலே தோன்றும் பசுமையும் தண்மையும் குழந்தைகள் மனத்தையும் உருக்கவல்லன வன்றோ? வெள்ளம் பெருகி ஓடும் ஆற்றின் அழகு ஒருவகை

யாம். நிறைந்த நீரைப் பெற்ற குளங்களின் அழகு வேறு வகையாம். அளவு கடந்த நீருக்கு இடமாகிய கடலின் அழகு மற்றொரு வகையாம். இங்ஙனம் நாம் எங்கெங்கே திரும்பி னாலும், நம் மனத்தைக் கவரத்தக்க வனப்பை அமைத்து வைத்த ஒருவன் ஆற்றலை அளக்க இயலுமோ?

பச்சைப் பசேல் என்று காட்சி கொடுக்கும் நிலங்களைக் காண்கிறோம். பொன்னிறமான கதிர் முற்றித் தலைசாய்ந்த பயி ரோடு விளங்கும் நிலங்களையும் பார்க்கிறோம். இவை மனிதன் முயற்சியால் வளர்வனவாயினும், கடவுள் அருளால் விளங்கு வனவே என்பது, நம் உள்ளத்திலே தோன்றுகிறது. உரிய காலத்தில் மழை பெய்யாமையால் வாடிய கதிர்களும் நம் கண்முன் தோன்றுகின்றன. அறுக்கும் பருவத்தில் நின்ற கதிர்கள் நிறைந்திருந்த நிலத்தை முதல்நாள் பார்த்து மகிழ்ந்து வந்த நாம், மறுநாள் பெரு மழையின் கேட்டால் அந்நிலம் பாழாகி மணல் மயமாய் இருக்கும் கொடு மைக் காட்சியையும் காண்கிறோம். 'கடல் நடுவிலே நாம் பெரு மாளிகையில் இருக்கிறோம்' என்ற நினைப்போடு உறங்கச் சென்ற மக்கள், திடீரென்று கடலில் மூழ்கி இறப்பது எவன் செயல்? முற்றிய கதிர்கள் நிறைந்த நிலம் மணல் மயம் ஆவதும் அவன் செயலே! இயற்கையிற் கொடுமை காட்டும் காட்சிகள் இவை.

எரிமலைகள் எழுந்து பாதாள வுலகில் நிறைந்திருக்கும் தீக்குழம்பைக் கக்குகின்றன. மாட மாளிகைகளோடு விளங்கிய நகரங்கள் பல இமைப்பொழுதில் இருந்த இடம் தெரியாது அழிந்தொழிகின்றன. பசும் புல்லும் மரஞ்செடி கொடி களும் வளர்ந்த நிலங்கள் பயனற்ற வறுநிலங்கள் ஆகின்றன. இது நம் இயற்கைக் கொடுமைகளுள் ஒன்றே. பூகம்பம் என்பது இதன் உடன்பிறப்பென்று எண்ணத்தக்கது. எரி

மலையால் விளையும் கேடுகளைக் காட்டிலும் பூகம்பத்தில் ஒரு இமைப்பொழுதில் விளையும் கேடுகள் மிகுதியே. இரவில் ஆனந்தமாக உறங்கியிருந்த பல்லாயிரம் குடும்பங்கள் தங்கள் மாளிகைகளோடும் பாதாளம் போய்ச் சேருவதென்றால் அது எத்தனை கொடுமை! நம் நாட்டிலும் குவெட்டா, பீகார் என்ற நாடுகளில் சில ஆண்டுகளின்முன் தோன்றிய பூகம்பத்தால் விளைந்த நஷ்டம், உலகத்தில் மிகவும் கொடியதென நினைக்கப்படும் எரிமலையால் இன்றளவும் விளைந்ததில்லை. இதுவும் ஒருவகை இயற்கைக் காட்சியே. மனிதன் சக்திக்கும் அறிவுக்கும் மீறிய பல செயல்கள் இயற்கையில் நிகழ்கின்றன. அவற்றை அறியவும் அளக்கவும் அவற்றினின்று தன்னைக் காத்துக்கொள்ளவும் மனிதன் எவ்வளவோ முயற்சிகள் செய்கிறான்.

செயற்கை அமைப்பில் மனிதரினம் பெற்றிருக்கும் வெற்றிகள் பலவாம். காட்டில் குகைகளிலும் புதர்களிலும் மரங்களின் மேலும் வாழ்ந்திருந்த மனிதன் வீடுகள் கட்டப் பழகினான். தனக்கு வீடு கட்டும் தொழிலில் சிறிது சிறிதாகத் தேர்ச்சிபெற்ற பிறகு, தன்னைப்படைத்த கடவுளுக்கும் வீடு கட்டினான். இங்ஙனம் மனிதன் அமைத்த மாளிகைகளும் ஆலயங்களும் இன்று மிகுந்த அற்புதக் காட்சிகளாக விளங்குகின்றன. சில நாட்களில் அழிந்துபோகும் வீடுகளைக் கட்டுவதற்கு முயன்ற முதல் முயற்சி பின் கைதேர்ந்த பிறகே, பல நூற்றாண்டுகள் நிலைக்கத்தக்க ஆலயங்களை அமைத்தான். இயற்கையில் அமைந்த குன்றுகளையும் பாறைகளையும் கண்டு, அவற்றைக் குடைந்து கோயில்கள் அமைத்தான்.

குடைந்து அமைத்த பாறைக் கோயில்களில் பல நூற்றாண்டுகள் அழியாதிருக்கும் கலைச் செல்வத்தை நிரப்பி வைத்தான். அவை சிற்பங்களாகவும், சித்திரங்களாகவும் நின்று,

பார்க்க வருவோர் மனத்தைக் கவர்ந்து, மனிதன் அமைத்த செயற்கைச் செல்வத்தின் சிறப்பை விளக்குவனவாய் உள்ளன. கற்களில் சிற்றுளியால் வெகு பொறுமையோடு செய்த தொழில்கள் கடவுள் படைப்பின் அழகையே பல படியாக விளக்கிக் காட்டினும், கடவுளைப் போலவே மனிதனும் அழகிய பொருள்களைப் படைக்க வல்லவன் என்ற உண்மையை விளக்குவனபோல உள்ளன. இவ்வருங் கலைத்தொழில்கள் மனிதனிடம் கடவுள் வைத்த கருணையை வெளியிடும் பணி பூண்டவை.

நடக்க இயன்ற வரையில் நடந்துகொண்டிருந்த மனிதன் நெடுந்தொலை செல்ல உதவுமாறு, வண்டிகள் அமைத்தான். கடவுள் கொடுத்த மாடுகளைப் பூட்டி உழுது பயிரிட்டு உணவு தேடியதுபோலவே, கடவுள் தந்த பொருள்களைச் சேர்த்து வண்டியிற் பலவகை செய்தான். நிலத்தில் இங்குமங்கும் இயங்கிவந்த அளவில் திருப்தி உண்டாகாததால், கடலிலும் இறங்கி நெடுந்தொலை போய் வரத்தக்க மரக்கலங்களைப் படைத்தான். இரண்டு மூன்று மரங்களை இணைத்த கட்டு மரங்களிலே தொடங்கிய கப்பல் தொழில், இந்நாளில் எவ்வளவு வளர்ந்து விட்டது! மனிதன் அறிவு வளரவளரப் பல புதுமைகள் காணத் தொடங்கினன்.

"பறவைகள்போல ஆகாயத்திலும் நாம் ஏன் திரியக் கூடாது" என்று நினைத்தவுடனே, புகைக்கூண்டுகளும் ஆகாய விமானங்களும் செய்து, விண்ணிலே ஏறித் திரியவும் புறப்பட்டான். எல்லாம் முதலில் நல்ல நோக்கத்தோடு தோன்றிய புதுமைகளேயாயினும், இவைகளே மனிதன் வாழ்வுக்குக் கேடு விளைக்கத்தக்க கருவிகளாகவும் ஆயின. நிலத்திற் செல்லும் வண்டிகளில் எத்தனை வகை! அவற்றால் நேரும் அழிவுகள் எத்தனை! நீரிற்செல்லும் கலங்கள் எத்தனை வகை! அவற்

ருல் நேரும் அழிவுகள் எத்தனை! விசும்பிற் செல்லும் விமானங்கள் எத்தனை வகை! அவற்ருல் நேரும் அழிவுகள் எத்தனை! இத்தனை கேடுகளையும் கடந்து மனிதன் வாழவேண்டும். இயற்கைச் செல்வம் குடிகொண்ட காடுகளை நாடு நகராக்கிய மனிதன் எத்தனை நோய்களை வருவித்துக் கொண்டான்!

காடுகளில் வாழ்ந்தபோது இலை குழைகளாலும் மரப் பட்டைகளாலும் உடம்பை மறைத்த மனிதன், நெசவுத் தொழில் தோன்றிய பிறகு எத்தனை வகை உடைகளை வளர்த்து நாகரிகத்தைக் காட்டுகிருன்! உணவுக்குப் படும் பாட்டைக் காட்டிலும் உடைக்குப் படும்பாடு மிகுதியாகும் போலத் தோன்றுகிறது. அலங்காரங்களுக்காக எத்தனை வகைப்பட்ட பொருள்களை மனிதன் படைக்கவேண்டி யிருக்கிறது! இவை எல்லாம் மனிதன் அறிவின் அளவுகளை அளக்கத்தக்க செயற்கைச் செல்வங்களாம்.

கட்டிட அமைப்பிலே சாயும் கோபுரம், எகிப்திய கோபுரம், தாஜ்மஹால் முதலியவை மனிதனது செயற்கைச் செல்வத்தின் சிறப்பை விளக்கும் உன்னத நிலையில் உள்ளன. நகர அமைப்பிலே, எத்தனையோ நகரங்கள் நாடெங்கும் காட்சி கொடுக்கின்றன. வாகன வகைகளிலே பல புதுமைகள் தோன்றி மனத்தை மருட்டுகின்றன. இன்பக் காட்சிக்கு உதவும் பொருள்களோ எண்ணிறந்தனவாய்த் தோன்றியுள்ளன. இங்ஙனம் கணக்கற்ற செயற்கைச் செல்வங்களைப் படைத்த மனிதன், தன்னையும் உலகையும் படைத்த தலைவனை மறந்து விடுவனோ என்ற அச்சம் உதிக்கிறது. அங்ஙனம் இவன் மறவாதிருக்கும் பொருட்டே மழைக்கேடு, வெள்ளப்போக்கு, கடற் புரட்சி, பூகம்பம் முதலிய குறிகள் அடிக்கடி தோன்றி இயற்கைச் சக்தி செயற்கைக்கு மீறியது என்பதை விளக்குகின்றன. எந்த வழியிலும் மனிதன் கடவுள் கருணையைப் பெறவே முயல

வேண்டியவனுய் இருக்கிருன் என்பதை இயற்கையும் செயற்கையும் விளக்குவனவாகும்.

1. அரும்பொருள் விளக்கம்

இயல்வது - அமைவது; அளவு + இலா = அளவிலா; எழில் - அழகு; மருட்டுதல் - பயமுறுத்தல்; கருவி - துணைக்காரணம், சாதனம்; அளாவ - துழாவ, தடவ; நெடுமை × குறுமை; பாடு - வருத்தம்; முழுமதி - பூர்ண சந்திரன்; மதி - சந்திரன், புத்தி; தண்மை - குளிர்ச்சி; தண்மை × வெம்மை; கோளம் - உருண்டை; கதிர் - பயிரினது கதிர், கிரணம்; கொடுமை × செம்மை; வறுநிலம் - பாழ்நிலம்; விசும்பு - ஆகாயம்; குழை - தளிர், காதணி.

2. கேள்விகள்

1. இயற்கை யமைப்பிலும் செயற்கை யமைப்பிலும் மனிதன் உணர்வது யாது?
2. இயற்கையாய் அமைந்த காடுகளில் மனிதன் காணும் காட்சியை விவரிக்க.
3. குன்றுகள் நமக்கு எத்தகைய காட்சியை அளிக்கின்றன?
4. எரிமலைகளால் உண்டாகும் தீமைகள் யாவை?
5. மனிதன் தன்னை மறவாதிருக்கக் கடவுள் என்ன செய்கிருர்?

3. இலக்கணம்

1. "தன் மகனை கன்னன் இறப்பதைக் காணச் சகியாமல் சூரியன் மாலையில் மேல் கடலில் ஆழ்ந்தான்"—சூரியன் மாலையில் மறைதல் இயல்பு. இங்ஙனம் இயல்பாக நடைபெறும் விஷயத்தில் கவிஞன் தன் குறிப்பை (தான் செல்லக் கருதியதை) ஏற்றிக் கூறுதல் தற்குறிப்பேற்ற அணி (தன் + குறிப்பு + ஏற்றம்) எனப்படும்.

"நீங்கள் மாலையில் விளையாடலாகாதென்று மழை விடாமற் பெய்கிறது"—தற்குறிப்பேற்ற அணி.

2. இல்பொருள் உவமை அணி :—"விந்தியமலை வருவது போலக் குண்டுராயர் வந்தார்".—இதில் உள்ள 'விந்தியமலை வருவது போல' என்பது இல்(லாத) பொருள் உவமை. இப்படி இல்லாத பொருள் உவமையாக வருதல் 'இல்பொருள் உவமை அணி' எனப்படும்.

பயிற்சி

1. செயப்படுபொருள் வரத்தக்க வாக்கியங்களில் அதுமறைந்திருப்பதைக் காட்ட இரண்டு உதாரணங்கள் தருக.
2. "யாங்கள் படைத்தன வல்ல விவ்வேற்றுமை
   எத்துணை யாண்டுகளாய்.
   ஈங்குள என்பது நீயும் அறிவையே
   எம்மனை பாரதமே!"—அநுவயப்படுத்து.
3. அன்புறு, உங்களுக்கேற்றம், விட்டொழி, பெண்ணுக, ஆணுக, நலங்கெட, வெந்நீர்---பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறு.
4. பகை+இல்லை, ஏற்றம்+அமையும், காலம்+கழித்து, நன்மையே+என்பது, அறிவில்+புகுந்து, நா+உடையாய், எ+துணை, உன்+உயிர்.—சேர்த்து எழுதிப் புணர்ச்சி இலக்கணம் கூறு.
5. இப்பாடத்தின் முதல் பாராவில் உள்ள வேற்றுமைத் தொகைநிலை தொகாநிலைகளை விளக்கு.
6. இரண்டாம் பிரிவில் இருக்கும் முதல் வாக்கியத்திற்குத் தொடர் இலக்கணம் கூறு.
7. மூன்றும் பாராவில் உள்ள எழுவாய் பயனிலை செயப்படு பொருள் கூறு.
8. நான்காம் பிரிவிலுள்ள அறுவகைப் பெயர்களைச்சொல்லு.
9. ஐந்தாம் பிரிவினுள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைச் சொல்லு.
10. ஒவ்வொரு பாராவிற்கும் பொருத்தமான தலைப்புக் கொடு.

11. இப்பாடப் பொருளை 30 வரிகளில் சுருக்கிக் கட்டுரையாக எழுது.

12. இதனைப் பல தலைப்புகள் தந்து 'இயற்கை' என்றும் 'செயற்கை' என்றும் இரண்டு கட்டுரைகளாக எழுது.

---

18. கண்ணகி - வீரபத்தினி

செங்குட்டுவன், வஞ்சிமா நகரத்தைத் தலைநகராகக் கொண்டு சேர நாட்டை அரசாளுகையில் **சோழன் கரிகாலன்** என்பவன், காவிரிப்பூம் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டை யாண்டு வந்தான். அதே காலத்தே, மதுரையைத் தலை நகராகக்கொண்டு, பாண்டி நாட்டை **நெடுஞ்செழியன்** என்போன் அரசாண்டு வந்தான்.

சோழவள நாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம் பட்டினத்தில், வணிகர் குலத்தில் **மாசாத்துவான், மாநாய்கன்** என்ற செல்வர் இருவர் இருந்தனர். மாசாத்துவான் மகனான **கோவலனுக்கு,** மாநாய்கன் மகளான **கண்ணகி**யை மணஞ்செய்தார்கள். கோவலனும் கண்ணகியும் தனித்து இல்லறம் நடத்தினர்கள். கண்ணகியின் நற்குண நற்செய்கைகளைக் கண்டு மகிழ்ந்த கோவலன், அவளைப் பலவாறு புகழ்ந்து போற்றலானான்.

இவ்வாறு இருக்கும் நாட்களில், கோவலன் மிக்க அழகுடையவளும், ஆடல் பாடல்களில் தேர்ச்சி பெற்றவளுமான **மாதவி** என்னும் நாடகக் கணிகையை விரும்பித் தன்னிடத்திலுள்ள பொருள்களை யெல்லாம் இழந்தான். சில காலம் அம் மாதவியோடு இன்புற்றிருந்தான். அது சமயம் கணவன் பிரிவாற்றாது கண்ணகி துன்புற்றிருந்தாள். நிற்க,

அவ்வூரில் வருடாவருடம் இந்திரவிழா நடப்பது வழக்கமாயிருந்தது. அவ்விழாவின் முடிவில், அந்நகரத்தார் கடலாடுதற்குச் சென்றூர்கள். கோவலனும் மாதவியும் போனூர்கள். இருவரும் ஓரிடத்தில் அமர்ந்தனர். கோவலன் மாதவியின் யாழை வாங்கிப், பலவகைப்பட்ட வரிப்பாட்டுக்களை இசைத்துப் பாடினன். அப்பாடல்கள் மாதவி மனத்தைப் புண்படுத்தின. ஏனெனில், அவை கோவலன் வேறு மகளிர்பால் விருப்புடையவன் என்னுமாறு பொருள்பட்டன. ஆனூல் உண்மையில், கோவலன் பிறர்பால் விருப்பங்கொண்டவன் அல்லன். மாதவி அவ்யாழை வாங்கித் தானும் சில வரிப்பாட்டுக்களை இசைத்துப் பாடினூள். அவை, அவள் வேறு ஆடவர்பால் நாட்டம் உடையவள் என்னுமாறு அர்த்தங் கொண்டிருந்தன. ஆனூல், மாதவி உண்மையில் அவ்வாறு நாட்டம்உடையவள் அல்லள். “கோவலன் பாடினூனே; நாமும் பாடுவோம்” என்று எண்ணியவளாய் அவளும் பாடினூள்.

அதனூல் கோவலன் அவள்மீது வெறுப்புற்று, அக்கணமே அவளை விட்டு நீங்கித், தன் இல்லத்திற்குத் திரும்பி வந்தான்; வந்து, தன் எளிமை தோன்ற நின்றூன். அவன் படும் துன்பத்தைக் கண்ட கண்ணகி, மாதவிக்குக் கொடுக்கப் பொருளில்லாது வருந்துகின்றூன் போலும் என்றெண்ணி, “என்னிடத்து இரண்டு சிலம்புகள் உள்ளன; அவற்றைக் கைக்கொண்டருள்க” என்றூள். கோவலன், “நான் மதுரைக்குச் சென்று இச் சிலம்பை விற்று, அப்பொருளை வணிக முதலாகக் கொண்டு வியாபாரம் செய்ய விரும்பியுள்ளேன்; நீயும் என்னுடன் வருக” என்றூன். அவளும் அதற்கு உடன்பட்டாள்.

அன்றிரவின் கடை யாமத்தில் இருவரும் புறப்பட்டுக் காவிரியின் வடகரை வழியாக மேற்கே சென்று ஒரு பூஞ்சோலையை அடைந்தனர். அங்கே **கவுந்தி யடிகள்** என்ற சமண

சமய அம்மையாரைக் கண்டு, மதுரை செல்ல இசைந்த அவரையும் உடன் அழைத்துக்கொண்டு, மூவரும் மதுரையை நோக்கிச் செல்வாராயினர். வழியில் ஸ்ரீரங்கம் தென்பட்டது. மூவரும் அங்கு வந்த பௌத்த சாரணர்களைத் தரிசித்து ஓடமேறிக் காவிரியின் தென்கரை சேர்ந்து ஒரு பொழிலில் தங்கினர். அவ்வமயம் கோவலனையும் கண்ணகியையும் அவமதித்துப் பேசிய பரத்தை யொருத்தியையும், தூர்த்தன் ஒருவனையும் கவுந்தியடிகள் நரிகளாகச் சபித்தனர். பின்னர், மூவரும் உறையூரை யடைந்தனர்.

மூவரும் உறையூரில் அன்றிரவு தங்கி மறுநாட் காலையிற் புறப்பட்டனர். செல்லுகையில், ஒரு நாள் கோவலன் குடிக்கத் தண்ணீர் கொண்டுவரத் தனியே சென்றான். அப்போது, கௌசிகன் என்னும் அந்தணன் ஒருவன், மாதவியால் அனுப்பப்பட்டு அங்கு வந்தான். கோவலனது பிரிவாற்றாது அவனது பெற்றோர் வருந்துவதையும், மாதவி படும் துயரையும் மறையோன் எடுத்துக் கூறினன். கோவலன் மனம் வருந்தித் தன் வணக்கத்தைத் தன் பெற்றோர்க்குக் கூறுமாறு சொல்லி யனுப்பினான். பின்னர்க் கோவலன் கண்ணகியையும் கவுந்தியடிகளையும் அழைத்துக்கொண்டு சென்று, வையை யாற்றைக் கடந்து, மதுரையின் மதிற்புறத்ததாகிய முனிவர் ஒருவரது ஆச்சிரமத்தில் தங்கினான்.

மறுநாள் கோவலன் தனியே புறப்பட்டு மதுரைக்குள் சென்றான்; அம் மாநகரின் வளப்பத்தைப் பார்த்து மீண்டான். அப்போது **மாதரி** என்ற இடைச்சியர் தலைவி அம்முனிவரது ஆச்சிரமத்திற்கு வந்தாள். கவுந்தி யடிகள் கோவலனையும் கண்ணகியையும் மாதரியிடம் அடைக்கலமாக ஒப்புவித்தார். மாதரி இருவரையும் அழைத்துச் சென்று குறைவின்றி அன்னம் படைத்தாள். கோவலன் கண்ணகியின் ஒரு சிலம்பை எடுத்துச் சென்று மதுரைக்குள் நுழைந்தான்.

நுழைந்து கடைவீதி வழியாகச் செல்லுகையில், பலர் பின்னேவரப் பொற்கொல்லன் ஒருவன் வந்தான். கோவலன் அவனை யணுகி, "ஐய! இச்சிலம்பு, செல்வர் அணியத் தக்கது. இதன் விலை மதிக்க உம்மால் ஆகுமோ?" என்றான். பொற் கொல்லன் "ஐய! இச்சிலம்பு எமது அரசியே அணியத் தக்கது. இதனை யான் அரசனுக்குக் காட்டி வருமளவும் நீர் இங்கு இரும்" என்றுகூறி, அரண்மனையை நோக்கி நடந்தான். நடந்து செல்லுகையில் பொற்கொல்லன், "யான் முன்பு வஞ்சித்துக் கவர்ந்துகொண்ட சிலம்பு, என்னிடம் உள்ள தென்று அரசன் அறியுமுன்னம், அதனோடு ஒத்த இச் சிலம்பைக் கொணர்ந்த இப் புதியவன்மீது அப் பழியைச் சுமத்தி நாம் தப்பித்துக் கொள்ளலாம்," என்று எண்ணிக்கொண்டான்.

பொற்கொல்லன் அரண்மனையை நெருங்கினான். அவ் வமயம், பாண்டியன் நெடுஞ்செழியன் விரைவாக அந்தப்புரம் நோக்கிச்சென்றுகொண்டிருந்தான். பொற்கொல்லன் அவனைப் பணிந்து, "அரசே!, கன்னக்கோல் முதலியன இல்லாமல் அரண் மனையில் இருந்த சிலம்பைத் திருடியவன் அடியேனுடைய சிறு குடிலில் அச்சிலம்போடு வந்துள்ளான்" என்றான். பாண்டியன் உடனே காவலாளர்களை யழைத்து, "என் மனைவியின் சிலம்பு இவன் கூறிய கள்வனிடத்து உள்ளதாயின், அவனைக் கொல்லு வதற்கு அச்சிலம்போடு கொண்டு வருக" என்று சொல்ல வாயெடுத்தவன், வினை பலிக்கும் காலமாதலால் நாக்குழறி, "அவனைக் கொன்று அச்சிலம்பைக் கொணர்க" என்று கூறிப் போந்தான்.

காவலாளர்கள் பொற்கொல்லனோடு சென்று, கோவலனை அடைந்தார்கள். மாசற்ற முகத்தோடு விளங்கிய கோவலனைக் கள்வன் என்று நினைக்கக் காவலாளர் மனம் இடந் தரவில்லை அவர்கள் அவனைக் கொல்ல விரும்பவில்லை. அதுகண்ட பொற் கொல்லன், காவலாளர் மனமாறுதல் அடையும்படி, களவு

நூலில் உள்ள பல விஷயங்களை எடுத்துக்கூறிக், கோவலன் கள்வனே என்று எண்ணுமாறு செய்தான். அதன்மேல் கொலை யஞ்சான் ஒருவன் விரைந்து சென்று, கோவலனைத் தன் வாளால் வெட்டி வீழ்த்தினன்.

கோவலன் கொலையுண்ட செய்தி கண்ணகிக்கு எட்டியது. அவள் அறிவு கலங்கி அழுது அரற்றி, சூரியனை நோக்கிச் "செங்கதிர்ச் செல்வனே, நீயறிய என் கணவன் கள்வனோ"? என்றாள். அவன், "நின் கணவன் கள்வன் அல்லன்; அவனைக் கள்வன் என்ற இவ்வூரை விரைவில் தீயுண்ணும்" என்று கூறினன். அப்பால் கண்ணகி மதுரையுள் நுழைந்து, வெட்டுண்டு கிடந்த கோவலனைச் சிலர் காட்டக் கண்டு, அவனுடம்பைத் தழுவினள். அவ்வளவில், கோவலன் உயிர்பெற்றெழுந்து 'மதிபோன்ற நின் முகம் வாடியதே'. என்று சொல்லிக் கையாலே அவள் கண்ணீரை மாற்றினன். கண்ணகி அழுது கொண்டே அவன் பாதங்களிற் பணிந்தாள். உடனே அவன், "நீ இங்கிருக்க" என்று சொல்லிச் சுவர்க்கம் அடைந்தான்.

பின்னர்க் கண்ணகி, தலைவிரி கோலமாகப் பாண்டியன் முன்னர் நின்றாள்; தன் வழக்கை யுரைத்தாள். அரசனிடமிருந்த தனது சிலம்பையுடைத்தாள். அதினின்றும் மாணிக்கப் பரல் தெரித்தது. அரசனது பத்தினியின் சிலம்போ முத்துப் பரல்கள் கொண்டது. அப்பொழுதுதான் பாண்டியன் உண்மையுணர்ந்தான். "இழிந்த பொற்கொல்லன் வார்த்தையைக் கேட்டு அநீதி செய்த யானோ அரசன்! மிகவும் புகழ் படைத்த தென்னவர் மரபு என்னால் பாழாயிற்றே!" என்று கூறி, ஆதனத்தினின்றும் கீழே வீழ்ந்தான்; உயிர் துறந்தான். அவனது தருமபத்தினி கோப்பெருந்தேவியும் உயிர் நீத்தாள்.

அதன்பிறகு கண்ணகி, "நான் பத்தினியாயின் இவ்வூரை யழித்துவிடுகிறேன் பார்" என்று சபதஞ் செய்து தனது வலக் கையால் மார்பைக் கீறி, இரத்தத்தை எடுத்து நகரத்தின்மீது

எறிந்தாள். உடனே அக்கினி தேவன் பார்ப்பனக் கோலத்தோடு வந்து, "மாபத்தினி, யான் என்ன செய்ய வேண்டும்?" என்றான். கண்ணகி "பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழவி என்னும் இவரைக் கைவிட்டுத் தீயோர் பக்கமே சேர்க" என்றாள்.

அப்பொழுதே அந்நகரில் தீப்பற்றிக்கொண்டது. நகரைக் காக்கும் தெய்வங்கள் ஓடிவிட்டன. மதுரையின் அதிதேவதை கண்ணகியிடம் வந்து, "அம்மா உனக்கு ஒன்று சொல்ல வந்தேன். இப்பாண்டியன் குற்றம் உடையவன் அல்லன். நீ முற்பிறப்பில் சிங்கபுரத்தில் பரதன் என்பவனது மனைவியாய் இருந்தாய். பரதன் இப்பிறப்பில் கோவலனாக வந்தான். அவன் சங்கமன் என்பவன்மீது பொறாமைகொண்டு அவன் பகையரசனது ஒற்றன் என அரசனிடம் கூறி, அவனைக் கொல்லச் செய்தான். அச் சங்கமனே பொற்கொல்லனாகப் பிறந்தான். சங்கமன் மனைவி, கணவன் பிரிவால் பதினான்கு நாள் வருந்திப் பின்பு ஒரு மலையின் மீதேறிக் கணவனைச் சேர்தற்பொருட்டுத் தன் உயிரைவிடத் துணிந்தவள், 'எமக்குத் துன்பஞ்செய்தோர் மறுபிறப்பில் இத்துன்பத்தையே அடைக,' என்று சாபமிட்டிறந்தாள். அச்சாபம் உங்களைத் தொடர்ந்தது. நீ இன்றைய பதினான்காம் தினத்தன்று பகல் சென்ற பின்பு, உன்னுடைய கணவனைக் கண்டு சேர்வாய்" என்று கூறி மறைந்தது.

கண்ணகி மதுரையினின்றும் நீங்கி, வையைக் கரை வழியே மேற்கே சென்று மலைநாட்டை அடைந்தாள். அடைந்தவள், **திருச்செங்குன்றம்** (திருச்செங்கோடு) என்னும் மலைமீதேறி ஒரு வேங்கைமர நிழலில் நின்றாள். அப்போது, வானுலகினின்றும் ஒரு விமானம் வந்து இறங்கியது. அதில் கோவலன் இருந்தான். கண்ணகி விமானத்தில் ஏறி அமர்ந்தாள். தேவர்கள் பூமாரி பெய்ய, வீரபத்தினி சுவர்க்கம் புகுந்தாள்.

1. அரும்பொருள் விளக்கம்

நாடகக் கணிகை - பொது மகள், இந்திர விழா - மழைவளம் வேண்டி இந்திரனுக்கு விழாச்செய்தல் பண்டை மரபு, வரிப் பாடல்கள்-வேடிக்கைப் பாட்டுகள், யாழ்-வீணை போன்ற இசைக் கருவி, இசைத்து - நரம்புகளின் ஓசையோடு பொருத்தி, யாமம் - ஜாமம், அடிகள் - துறவி, குடில் - குடிசை, மாசு - குற்றம், அசரீரி - உருவம் அற்றது × சரீரி - உருவம் உடையது, மதி - சந்திரன்.

2. கேள்விகள்

1. கோவலன் காலத்தில் சோணாட்டு அரசன் யாவன்? பாண்டிய நாட்டரசன் யாவன் ?
2. மாசாத்துவான், மாநாய்கன்—யாவர் ?
3. கோவலன் ஏன் கண்ணகியைத் துறந்தான் ?
4. கோவலன் ஏன் மாதவியைத் துறந்தான் ?
5. அவன் யாருடன் மதுரைக்குச் சென்றான் ? ஏன் ?
6. மாதரி, கவுந்தி அடிகள்—குறிப்பு எழுதுக.
7. கோவலன் எவ்வாறு கொல்லப்பட்டான் ?
8. கண்ணகி எப்படி வழக்குரைத்தாள் ? அவள் செய்த அரிய செயல் யாது ?
9. அவள் முடிபு யாது ?
10. நீ இப்பாடத்தால் அறியும் உண்மைகள் யாவை ?

3 இலக்கணம்

1. இரட்டைச் சொல்

சில சொற்கள் இரண்டாகவே சேர்ந்துவரும், அவற்றைப் பிரித்துப் பொருள் கூற இயலாது. அவை இரட்டைச் சொல் எனப்படும்.

(உ - ம்.) மழை சளசளவெனப் பெய்தது.

அவன் துடிதுடித்து விழுந்தான்.

2. அடுக்குத்தொடர்

விரைவு, கோபம், மகிழ்ச்சி, அச்சம், துன்பம் இப்பொருள்கள் காரணமாகச் சில சொற்கள் பல முறை அடுக்கி வரும், அவை அடுக்குத் தொடர் எனப்படும்.

(உ-ம்.)

வந்தேன் வந்தேன்—விரைவு.
விடு விடு நான்பார்த்துக் கொள்கிறேன்—கோபம்.
வாழ்க வாழ்க—மகிழ்ச்சி
பாம்பு பாம்பு—அச்சம்.
பிழைக்கேன் பிழைக்கேன்—துன்பம்.

சொற்றொடர்

1. வாக்கியங்களை மாற்றி யமைத்தல்

வாக்கியங்களை மாற்றி யமைத்தலாவது, வாக்கியங்களின் கருத்து மாருமல் அவற்றி லமைந்துள்ள சொற்கள், அல்லது சொற்றொடர்களைப் பலவிதமாக மாற்றி அமைத்தலாம்.

(உ-ம்.) 1. தேசம் முன்னேற்ற மடையவேண்டு மானல் ஜனங்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும்.

மாற்றி யமைத்தது

ஜனங்கள் ஒற்றுமையாய் இருந்தால் தேசம் முன்னேற்ற மடையும்.

ஜனங்கள் ஒற்றுமையாயிராவிட்டால் தேசம் முன்னேற்ற மடையாது.

தேசம் முன்னேற்ற மடைவதற்கு ஜனங்கள் ஒற்றுமையாயிருக்க வேண்டும்.

2. தனியாகக் காட்டு வழியே செல்வதற்குத் தைரியம் அதிகமாக வேண்டும்.

மாற்றி யமைத்தது

தனியாகக் காட்டு வழியே செல்ல வேண்டுமானல் தைரியம் அதிகமாக இருக்கவேண்டும்.

தைரியம் அதிகமாக இருந்தால் தனியே காட்டு வழியாகச் செல்லலாம்.

தைரியம் அதிகமாக இல்லாவிட்டால் தனியே காட்டு வழியாகச் செல்ல இயலாது.

பயிற்சி 1.

பின்கண்ட வாக்கியங்களை வேறு பலவிதமாக மாற்றி அமைக்க :—

1. எனக்கு அவனைவிட வயது அதிகம்.
2. பொருள்கள் எல்லாம் கடவுள் படைத்தனவே.
3. அறிவு வளரவேண்டுமானால் சோம்பல் தொலைய வேண்டும்.
4. இந்த வேலை செய்ய அவனுக்கு இருவரது உதவி வேண்டும்.
5. கஷ்டப்பட்டதனால் அவனுக்கு நன்மை உண்டாயிற்று.
6. பரீக்ஷையில் தேறவேண்டுமானால் கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டும்.
7. அவன் மொழி யாவர் மனத்தையும் கலங்கச் செய்தது.
8. நீ அவனைக் கூப்பிடாவிட்டால் அவன் வரமாட்டான்.
9. அரசன் சினந்து பேசியது வேலன் மனத்தை வருத்தியது.
10. கைகேயி தன் செயலால் இராமனைக் காட்டுக்குப் போகச் செய்தாள்.

பயிற்சி 2.

1. பின்வரும் வாக்கியங்களிலுள்ள நேர்க்கூற்றுப் புள்ளிகளை அகற்றுக :—

(1) "மார்ட்டின் என்னும் நீ என்னை அறியவில்லையா" என்றதோர் குரல் கேட்டது.

(2) அச்சிறுவன் முன்வந்து, "பாட்டி! நான் இந்த மூட்டையைத் தூக்கி வருகிறேன்" என்று கூறி எடுத்துக் கொண்டு உடன் சென்றான்.

2. பின்வரும் வாக்கியங்களில் உள்ள சொற்களுக்கு இலக்கணம் கூறுக :—

(1) கிறிஸ்துவின் பொருட்டு இச்சிறுவனை மன்னித்து விடு.

(2) நீ பழத்தைத் திருடியதை நான் பார்த்தேன்.

(3) மார்ட்டின் வீட்டுப் பலகணிக் கெதிரில் ஒரு பழக் கூடைக்காரி நின்றாள்.

---

19. நூல் நிலையங்கள்

நம் பாரதநாடு பண்டைக் காலத்தில் பெருஞ்சிறப்பு வாய்ந்ததாயிருந்ததென்பது உண்மை. ஆயின் என்? தற்காலத்தில் உலகிலுள்ள ஏனைய நாடுகளோடு இந்தியாவை ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, அதன் நிலை மிக்க கேவலமானதாக இருக்கின்றது. அலை அலையாக வரும் தொற்று நோய்களும், என்றும் நின்று வாட்டும் வறுமையும், பஞ்சமும் நமது நாட்டில் மலிந்துவிட்டன. மக்களும் பண்டைப் பெருமையை இழந்து, ஆண்மை குன்றி, அறிவு மழுங்கிச் சடமான உயிர் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். இவற்றிற் கெல்லாம் அடிப்படையான காரணம் அறிவின்மையேயாகும். கண்மூடித்தனமான கொள்கைகளும், இயற்கை விதிகளை அறியாது நிராகரிக்கப்படுகின்ற தினசரி வாழ்க்கை முறைகளும், பிணிகட்கு இடந்தரும் துர்வழக்கங்களும், இன்பம் தரவல்ல தூய உயிர் வாழ்க்கையில் பற்றின்மையும், சூறவளியில் அடிபட்டோடும் சருகுகள்போல், அங்கு மிங்கும் அலைவுற்று ஒன்றிலும் பற்றில்லாது நடந்துவரும் கேவலமான சட வாழ்க்கையும், இவை போன்ற பிறவனைத்தும் அறிவின்மையாலேயே வருவன. இவ்வறிவின்மையை அழிப்பது அறிவு. அறிவானது வாழ்க்கையை நடத்துவிக்கும் தூண்டுகோலாகும்; வாழ்க்கைக்குச் சிறப்பளிக்கும்

ஒளி போலாகும்; அதுவே இனிதாய் உயிர் வாழ்க்கை செல்வதற்கு உரிய நேர்நெறியைக் காட்டுகிற வழி காட்டியாகும்; அதுவே வழியுமாகும்.

இவ்வறிவு கல்வியால் விளைவது; ஆதலின் மாந்தரின் இன்ப வாழ்க்கைக்குக் கல்வியே மூலாதாரமாகும். இது பற்றியே திருவள்ளுவனாரும் **"கேடில் விழுச்செல்வம் கல்வி"** என்றருளினர். கல்வியறிவாலேயே பெருமைகளனைத்தும் வந்து சேர்கின்றன; கல்வியே அறம், பொருள், இன்பம், வீடாகிய நான்கு புருடார்த்தங்களை அடைதற்குக் கருவியாயுள்ளது. இவ்வுண்மைகளை எல்லோரும் அறிவர். அறிந்தென்ன? **'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'** என்று கூறிக்கொண்டே, நம் நாட்டவர் பெரும்பாலும் இவ்விரு கண்களும் இல்லாத குருடர்களாயிருக்கின்றனர். பெரும்பாலோர் எழுதப்படிக்கும் முயற்சியே யின்றி முற்றிலும் தாழ்ந்த நிலைமையிலிருக்கின்றனர். பலருக்குக் கற்கவேண்டுமென்னும் அவாவும் இல்லை. இன்னோர் தமது அறிவின்மையால் தமக்கும் பிறர்க்கும் செய்யும் தீமைகட்குக் கணக்கில்லை.

ஆதலின், நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு மக்களின் நன்மையைப் பெருக்கவும், அறிவின்மையைப் போக்கவும் வல்ல கல்வியே சிறந்த சாதனமாகும். இதன் அவசியத்தைப் பற்றிப் பிரிட்டன் நாட்டில் கல்வி அபிவிருத்தி விஷயத்தில் சிறந்த பிரமாண கர்த்தாவான **ரைட் ஹானரபிள் பிஷ்ஷர்** என்பவர் கூறியுள்ளதாவது:—

"இளைஞர்கட்குச் செய்யவேண்டும் கடமைகளில், கல்வி கற்பதை முதலாவதாகவும், சம்பாதிப்பதை இரண்டாவதாகவும் வைத்துக் கொண்ட ஜனசமூகம் ஏற்பட வேண்டுமென்று யான் துணிவுடன் வேண்டிக் கொள்கிறேன். இஃது ஒரு வகுப்பாருக்கு மாத்திரமன்று; எல்லாச் சிறுவர்கட்குமே

தேவை. இக்காலத்தில் பணக்காரர்கள் படிக்கிறார்கள் ; ஏழை களோ உழைக்கிறார்கள்.”

இதுகாறும் கூறியவற்றால் மக்களின் சீரிய வாழ்க்கைக்கே இன்றியமையாத சாதனமாயுள்ளது கல்வியென்பது தெற்றென விளங்கும். ஆனால் எம்முறையில் மக்கட்குக் கல்வி புகட்டுவதென்பதை நாம் கவனித்தல் அவசியமாகும். மக்களுள்ளத்தில் கல்விப் பெருக்கத்தை யுண்டுபண்ண மேனாட்டாரால் கையாளப்பட்டுவரும் முறைகள் பற்பலவாகும். அவற்றுள் **நூல் நிலையங்கள்** அமைத்தலும் ஒன்று.

எழுத்துக்களே வழக்கிலில்லாதிருந்த அதி புராதன காலத்தில், கேள்வியின் மூலமாக அறிவு பரவி வந்தது. இதனாற்றான் முற்காலத்தில், கேள்வி ஞானத்திற்கு விசேஷ கௌரவம் இருந்து வந்தது. அதற்குப்பின் எழுத்துக்கள் வழங்கப் பெற்றன. இதனால், கல்வி கற்க விரும்புவோரது கருத்து முற்றுதற்குரிய கருவிகள் கைகூடின ; பெரும்பாலான நூல்கள் எழுதப் பெற்றன. கற்பதன் பொருட்டுக் கலாசாலைகளும் ஆங்காங்கே நிறுவப் பெற்றன.

இக்கலாசாலைகளில் ஆசிரியராக விளங்கியவர்கட்குக் **கணக்காயர்** எனப்பெயர் வழங்கப்பெற்றது. பின்னர்க் கோயில்களில் கல்வி நிலையங்கள் ஏற்படுத்தப் பெற்றன. இவற்றில் பெரும்பாலும் சமயச் சார்பான நூல்களே சேகரிப்பெற்று, சமயக் கல்வியே போதிக்கப்பட்டு வந்தது. பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசாண்ட **முதல் இராஜேந்திர சோழன்** வெட்டுவித்த சாசன மொன்றிலிருந்து, தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள **எண்ணாயிரம்** என்ற ஊரின் கோயில் மண்டபத்தில் வேதங்கள், கிருஹ்ய சூத்திரங்கள், சாஸ்திரம், வியாகரணம் முதலியவற்றை 340 மாணாக்கர்கள் ஓதியுணர்ந்தனரெனத் தெரியவருகின்றது. ஆங்கொரு நூல் நிலையம் அமைக்கப்

பெற்றிருந்ததாகவும் அறியப்படுகிறது. அங்குக் கற்று வந்த மாணவர்கட்குச் **சட்டர்** எனப் பெயர் வழங்கப் பெற்றது.

நாளாவட்டத்தில் பற்பல சமயத்தவரான துறவிகள், கலை பரவுதல் பொருட்டுத் தாங்கள் உறைந்திருந்த மடங்களில் கலாசாலைகளை ஏற்படுத்தியும் நூல் நிலையங்களை ஸ்தாபித்தும், சிதறிக்கிடந்த நூல்களைத் தொகுத்தும், உரை யெழுதியும், புதிய நூல்கள் பலவற்றைத் தாமே எழுதியும் வந்தனர். இன்றும் புராதனமான மடங்களில் பல அரிய நூல்கள் ஏட்டுச் சுவடிகளாக விருப்பதை நாம் காணலாம். இவ்வாறுகக் காலம் செல்லச் செல்ல, கலை வளர்ச்சிக்கு இன்றியமையாதனவான நூல் நிலையங்கள் பெருகி வந்தன. எனினும் நூல்களின் பெருக்கம் அக்காலத்தில் இல்லை. பற்பல நாட்டு அறிஞர்கள் செய்துள்ள ஆராய்ச்சிகள், யாவர்க்கும் எளிதிற் பரவ ஏற்ற சாதனங்களும் அந்நாளில் கிடையா. எளிதில் அழியாத எழுத்துச் சாதனங்களும் இல்லை. இந்நாளிலோ, பல்வேறு விஷயங்களைப் பற்றிய ஆயிரக்கணக்கான அரும்பெரும் நூல்கள் அச்சிலேற்றப் பெற்று வெளிவருகின்றன. இத்தகைய வசதி முன் காலத்தில் இல்லை.

கல்வியை மூலைமுடுக்குகள்தோறும் பரவச் செய்ய, அவசியமான சாதனங்க ளனைத்தும் இக்காலத்தில் ஏற்பட்டுள்ளன. ஆகையால், கிடைக்கக் கூடியனவும், அவசியமானவையுமான புத்தகங்களைப் பொறுக்கித் திரட்டி ஓரிடத்தில் வைத்து, அவற்றை வாசிக்க விரும்புகின்றவர்கட்குக் கொடுத்து உதவினல், அதனல் கலை மலியுமென்பதில் சற்றும் ஐயமில்லை. இங்ஙனம், நூல்கள்சேகரித்து வைக்கப்படும் இடங்கட்கு **நூல் நிலையங்கள்** என்று பெயர். இந்நூல் நிலையங்களின் வாயிலாக மேனுடுகளில் சிறந்த பயன் விளைந்துள்ளது. அந்நாடுகளில், ஒவ்வொரு சிறு கிராமத்திலும் ஆங்குள்ள மக்களால் நூல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அங்குக், கல்வியின் பல

துறைகள் சம்பந்தமான புத்தகங்களும், பத்திரிகைகளும் காணப்படுகின்றன. நூல் நிலையங்களில் அடிக்கடி பிரசங்கங்கள் நிகழ்த்தப்படுகின்றன. நூல் நிலையச் சங்கங்கள் ஆற்றி வரும் பொதுஜன சேவையைப்பற்றி, அறிஞர்கள் பத்திரிகைகளில் எழுதிப் பாராட்டுகின்றனர். தவிரத், தொழிற்சாலைகளிலும், நகரின் பொதுவிடங்களிலும் புத்தக நிலையங்கள் அமைக்கப்பெற்று, யாவர்க்கும் அப் புத்தகங்களைப் படிக்க வழங்குகின்றனர். கலாசாலைகளில் நூல் நிலையத்கள் அமைந்துள்ளனவென்று கூறவும் வேண்டுமோ? மாணவர்கள், தம் தம் கலாசாலையிலுள்ள நூல் நிலையங்களிலிருந்து அடிக்கடி புத்தகங்களை வாங்கி வாசிக்கின்றனர். விடுமுறை நாட்களில் அவர்களுக்குப் புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் கற்க ஏற்ற புத்தகங்கள் இவையென்று ஆசிரியர்கள் கூறி, அவற்றைப் பெற்றுக் கொடுக்கின்றனர். பொது நூல் நிலையங்களில் வந்து படிக்க இயலாதவர்கட்குப் புத்தகங்கள் வீடுகளில் கொண்டுபோய்க் கொடுக்கப்படுகின்றன. அவரவர் ஊக்கத்திற்கும், வயதிற்கும், கல்வி யறிவிற்கும், ருசிக்கும் ஏற்ற புத்தகங்கள், அந்த நூல் நிலையங்களின் காப்பாளர்களால் தேர்ந்து தரப்படுகின்றன. உணவுச் சாலைகளிற் கூட, நூல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளனவென்று தெரிய வருகிறது. ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகட்குக்கூட, அவர்கள் விரும்பிக் கேட்கும் நூல்கள், இந்நூல் நிலையங்களிலிருந்து அனுப்பப்படுகின்றன.

நிற்க, நூல் நிலைகளின் அமைப்பைப் பற்றிச் சிறிது கவனிப்போம். நூல் நிலையங்களின் உண்மையான பயனை அடைய வேண்டுமாயின், நூல் நிலையங்களின் அமைப்பு, நூல் நிலையக் காப்பாளர், புத்தகங்களை வாங்கி வாசிப்போர் ஆகிய இம் மூன்று உறுப்புக்கள் இன்றி யமையாதனவாம். ஆதலின், அவற்றைப்பற்றி நாம் இனிக் கூறுவோம்.

நூல் நிலையங்கள்:—இயன்றவரை ஒவ்வொரு சிறு கிராமத்திலும் புத்தகாலயங்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டும். அந்தந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களின் சரித்திரம், தொழில், ஆகாரம் முதலியவற்றை ஒட்டி அவர்கட்குப் பயன் படத்தக்க நூல்கள் மட்டும் அவ்வூர்களில் சேகரித்து வைக்கப்பட வேண்டும். எல்லாப் புத்தகாலயங்களிலும் ஒரே விதமான புத்தகங்களே இருக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. இந்நூல் நிலையங்களில் சந்தா செலுத்துவோர் மட்டும் வந்து வாசிக்கவும், புத்த



கங்களை வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போகவும் அனுமதிக்கும் வழக்கம் கூடாது. சந்தா செலுத்த முடியாத ஏழைகளும் வந்து படித்துப்பயன்பெற இடந்தரவேண்டும். இவற்றிலுள்ள புத்தகங்கள் மிகவும் பளுவுள்ளனவாகவும், அளவில் பெரியனவாகவும் இல்லாமல், எளிதில் கையாள ஏற்றனவாயிருத்தல் நலம். கிராமங்களிலுள்ள நூல்நிலையங்களில், பெரும்பாலும் சித்திரப் படங்களுடன் கூடிய புத்தகங்கள் இருப்பின் விசேஷ நன்மை பயக்கும். ஒவ்வொரு புத்தக நிலையத்திலும், ஆயிரக்

கணக்கான புத்தகங்கள் இருக்கவேண்டுமென்ற நியதி கிடையாது. எண்ணிக்கையில் குறைவா யிருப்பதால் நூல்நிலைகட்குள்ள பெருமை குறைந்து விடாது. அந்நூல்க ளனைத்தும் ஒவ்வொருவரும் ஆவலோடு படிக்கத் தக்கனவா யிருக்கவேண்டும். அப்படிப்பட்ட புத்தகங்கள் சில விருப்பினும் அமையும்.

நூல் நிலையக் காப்பாளர்:—நூல் நிலையங்களைக் காத்து வருபவர் வைக்கோல் போரில் கட்டிய நாயை ஒத்திருந்தால் அதை விடக் குறை வேறொன்றுமில்லை. அவர்கள் புத்தகங்களிடத்திலும், அவற்றைப் படிக்க வருபவரிடத்திலும் உள்ளன்பு காட்டிப் பழகிக் கல்வியில் ஊக்கமில்லாதவர்க்கு அதை ஊட்டத் தக்கவராகவும், 'இதன் பின்னர் இதனை வாசிக்க வேண்டும். இது சிறந்த அறிவை அளிக்க வல்லது' என்று கூறி வழி காட்டக் கூடியவராகவும், கர்வமற்றவராகவும் இருத்தல் வேண்டும், சில நூல் நிலையங்களில் ஏராளமான புத்தகங்கள் இருந்தாலும் அவற்றின் காப்பாளர், வாசிக்க வருபவர்கட்கு, அன்னோர் கேட்கும் புத்தகங்களை எடுத்துக் கொடுக்கச் சோம்பியோ, மனமின்றியோ "இல்லை, இல்லை" என்று சொல்லிப் புத்தகங்களைக் கைதிகளைப்போல் அடைத்து வைத்து மக்கிப் போகும்படி விடுகிறார்கள். புத்தகாலயத்திற்குப் படிக்க வரும் ஒவ்வொருவரும் ஒரு பூவிலிருந்து மற்றொரு பூவிற்குப் பறந்து தன்னிஷ்டம் போற்சென்று, தான் விரும்பிய அளவு மனம் போனவாறு மதுவை அருந்திச் செல்லும் தேனீயைப் போலத் தடை புரியாது தமக்கு விருப்பமான நூலை எடுத்துப் படிக்க எல்லா உரிமைகளும் அளிக்கப்படவேண்டும்.

படிப்போர்:—மேற்கூறிய இரண்டு உறுப்புக்கள் சரிவர அமைந்திருப்பினும், படிப்பில் ஆவலுள்ளவர்கள் இல்லையேல் பயன் இன்றாம். ஆதலின், புத்தக நிலையங்களின் உபயோகத்தைப்பற்றி ஆங்காங்கே பிரசாரம் செய்யப்பட வேண்டும். **இலவச வாசக சாலைகள்** அமைக்கப்பட வேண்டும். முதலில் வந்து

படிக்கத் தொடங்குகின்றவர்கட்கு, அவாவை எழுப்பத்தக்க முறைகளைக் கையாள வேண்டும். உத்தியோகத்திலிருந்து நீங்கி உதவிச் சம்பளம் பெற்று வரும் அறிவும் அனுபவமும் முதிர்ந்த பெரியோர்களும், கலாசாலைப் படிப்பு முடிந்து வித்யா தாபத்துடன் வெளிவரும் மாணவர்களும் இவ்விஷயத்தில் ஊக்கங்காட்டி உழைப்பார்களானால் சிறந்த நன்மை விளையும். விடுமுறையைக் கழிக்கத் தத்தம் கிராமங்கட்குச் செல்லும் மாணவர்கள், தம்மாலியன்ற அளவு கிராமத்திலுள்ளவர்கட்குப் படிப்பில் ஊக்கம் ஏற்படச் செய்யவேண்டும். படிப்பில் ஆவலுள்ளவர்களின் தொகையைப் பொறுத்தே நூல் நிலையங்களின் செழிப்பும் இருக்கின்றது.

நூல் நிலைய இயக்கம்:—இவ்வியக்கம் பரோடா சமஸ்தானத்தில் ஆரம்பிக்கப் பெற்றுச் சிறந்த நிலையை எய்தியுள்ளது. அம்மன்னர்பிரான், அமெரிக்காவிலுள்ளவை போன்ற நூல் நிலையங்களைத் தம் சமஸ்தானத்தில் அமைக்கக் கருதி, அமெரிக்காவில் இவ்வியக்கத்தில் சிறந்த அனுபவம் வாய்ந்தவரான **பார்டென்** என்பாரை அழைத்து, அவரது உதவியால் நூல் நிலைய இயக்கத்தைச் சில வாண்டுகட்கு முன் தொடங்கினர். அது நன்கு உழைத்து வருகின்றது.

1. அரும்பத விளக்கம்

நிராகரித்தல் - ஏற்காது தள்ளுதல், தூய - பரிசுத்தமான, வளி - காற்று, சடவாழ்க்கை-நடைப்பிண வாழ்க்கை, அளிக்கும்-கொடுக்கும், விழு - சிறந்த, வீடு - இன்ப நிலை, புருடார்த்தங்கள் - பேறுகள், சீரிய - சிறந்த, அதிபுராதன - மிகப் பழைய, விசேஷ - சிறந்த.

2. கேள்விகள்

1. இந்தியநாடு இழிநிலையில் இருப்பதற்குக் காரணம் யாது?
2. கல்விச்சிறப்பு யாது? கல்வி இன்மையால் வரும் தீமை யாது?

3. பிஷ்ஷர் கூறியுள்ளது யாது ?
4. முற்காலத்தில் அறிவு பரவக் காரணம் யாது ?
5. கணக்காயர், சட்டர்-யாவர் ?
6. துறவிகள் கல்விக்காகச் செய்த சேவை யாது ?
7. 'இத்தகைய வசதி முன்காலத்தில் இல்லை'.—எவ்வசதி ?
8. நூல் நிலையங்கள் யாவை ?
9. அவற்றால் என்ன பயன் விளைகிறது ?
10. நூல்நிலையங்கள் எப்படி அமைக்கப்பட வேண்டும் ?
11. நூல்நிலையத்திற்கு இன்றியமையாத உறுப்புக்கள் எவை?
12. நூல்நிலையக் காப்பாளர் இலக்கணம் என்ன ?
13. படிப்போர் எப்படி இருத்தல் வேண்டும் ?
14. நூல்நிலைய இயக்கம் பரோடாவில் எப்படி அமைக்கப் பெற்றது ?

3. இலக்கணம்—1

1. வாக்கிய முடிபுகளை மாற்றி அமைத்தல்.

(உ-ம்.) 1. உழவுத் தொழிலுக்கு அடுத்தபடியாக இருப்பது கைத்தொழிலேயாம்.

'கைத்தொழில்' என்னும் சொல் எழுவாயாக அமையும்படி இவ்வாக்கியத்தை மாற்றி அமைக்க.

மாற்றி அமைத்தது :

கைத்தொழிலே உழவுத் தொழிலுக்கு அடுத்தபடியாக இருப்பது ஆகும்.

2. ஒரு நாடு பிறநாடுகளுக்கு வணங்கா திருப்பதற்குச் செல்வமே முக்கிய காரணமாகும்.

'வணங்காது' என முடியும்படி இவ்வாக்கியத்தை மாற்றியமைக்க.

மாற்றி அமைத்தது :

செல்வம் அதிகமாக இருக்குமானால் ஒரு நாடு பிறநாடுகளுக்கு வணங்காது.

பயிற்சி 1

1. முயலை ஆமைவெல்லாது என்று நினைப்பீர்கள்,—'நினைக்க மாட்டீர்கள்' என்று முடியுமாறு இவ்வாக்கியத்தை மாற்றி அமைக்க.

2. இம்மொழி அவன் கோபத்தீயை மூட்டிற்று.—'மூண்டது' என முடியுமாறு இவ்வாக்கியத்தை மாற்றி அமைக்க.

3. கலி நளனது குணத்தை மாற்றியது.—'மாறியது' என முடியுமாறு இவ்வாக்கியத்தை மாற்றியமைக்க.

4. அதை அந்த விதமாய்ச் சுழற்றலாகாது. 'சுழற்ற வேண்டும்' என முடியுமாறு இவ்வாக்கியத்தை மாற்றியமைக்க,

5. நோய்கள் நம் உயிரை உடலினின்று பிரியச் செய்கின்றது 'பிரிகின்றது' என முடியுமாறு இவ்வாக்கியத்தை மாற்றி அமைக்க.

6. சகுனியினது சூழ்ச்சியால் பாண்டவர் வனவாசம் செய்ய நேர்ந்தது.'செய்தான்—என முடியுமாறு இவ்வாக்கியத்தை மாற்றி அமைக்க.

7. பட்டாடைகளைச் செல்வர்கள் மாத்திரம் அணிகிறார்கள்.—'பட்டாடைகள்'என்பது எழுவாயாக வரும்படி இவ்வாக்கியத்தை மாற்றி எழுதுக.

8, பகைவர்கள் அரண்மனைக்குத் தீவைத்தார்கள்.—'அரண்மனை' என்பது எழுவாயாக வரும்படி இவ்வாக்கியத்தை மாற்றி அமைக்க.

9. பசி என் உடலை வாட்டுகிறது.—'வாடுகிறது' என முடியுமாறு இவ்வாக்கியத்தை மாற்றி யமைக்க.

10. திருமாவளவன் இரும்பிடர்த் தலையாரியிடம் பல் கலைகளும் கற்றான், 'கற்பித்தார்' என முடியுமாறு இவ்வாக்கியத்தை மாற்றி யமைக்க.

இலக்கணம்—2

1. செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்றி அமைத்தல்

(உ-ம்) 1. துஷ்டருடைய சிநேகம், கெடுதியை விளைக்கும்.
துஷ்டருடைய சிநேகத்தால் கெடுதி விளையும்,
2. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.
திருவள்ளுவரால் திருக்குறள் இயற்றப்பட்டது.

2, செயப்பாட்டு வினை வாக்கியங்களைச் செய்வினை வாக்கியங்களாக மாற்றி யமைத்தல்.

(உ-ம்) 1. இதனால் கோபத்தை வெல்லும் வகை விளங்கும்.
இது கோபத்தை வெல்லும் வகையை விளக்கும்.
2. வேலனால் நேற்று இக்காரியம் செய்யப்பட்டது.
வேலன் நேற்று இக்காரியத்தைச் செய்தான்.

பயிற்சி

பின்வரும் செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டு வினை வாக்கியங்களாகவும், செயப்பாட்டு வினை வாக்கியங்களைச் செய்வினை வாக்கியங்களாகவும் மாற்றி அமைக்க.

1. இச்செய்யுள் கல் நெஞ்சையும் உருக்கும்.

2. அவனால் அவனது அண்ணன் மக்கள் அன்போடு வளர்க்கப்பட்டார்கள்.

3. அதிக ஆசை அதிக நஷ்டத்தை உண்டாக்கும்.

4. வீண் பொழுது போக்குவது பிற்காலத்தில் நஷ்டத்தை உண்டாக்கும்.

5. ஆசிரியர் கூறியதை நான் நன்கு தெரிந்துகொண்டேன்.

6. படையெடுத்துவந்த அரசனால் பல நகரங்கள் பாழாக்கப்பட்டன.

7. அந்தத் திருடன் போலீஸ்காரர்களால் கடைத்தெருவில் பிடிக்கப்பட்டான்.

8. சென்ற வருஷத்திலேயே நாங்கள் அந்த வேலையைச் செய்து முடித்துவிட்டோம்.

9. மிகவும் பசித்தாலும் புலி புல்லைத் தின்னாது.

10. நீங்கள் ஏன் இப்படிச் செய்கிறீர்கள் ?

3. வினா வாக்கியங்களை விடை வாக்கியங்களாகவும், விடை வாக்கியங்களை வினா வாக்கியங்களாகவும் மாற்றி அமைத்தல்.

(உ-ம்) 1. அவர் தம் நாட்டிற்குச் செய்துள்ள தொண்டு யாது? அவர் தம் நாட்டிற்குச் செய்துள்ள தொண்டு இது.

2. உலகத்தில் உள்ள பிராணிகளைப் பல வகைகளாகப் பிரிக்கலாம்.

உலகத்தில் உள்ள பிராணிகளைப் பல வகையாகப் பிரிக்கலாமா?

---

20. குகப் பெருமான்

(நாடகம்)

முதற்களம்

இடம் : கங்கைக் கரை.

காலம் : இரவு.

பாத்திரங்கள் : இராமன், இலக்குவன், சுமந்திரன் சீதை, குகன்.

[இராமன் ஆசிரமத்தில் இருக்கிறார். குகன் வாயிற்புறம் வருகிறான். இலக்குவன் வந்து தெரிவிக்கிறான்.]

இலக்குவன் :—அண்ணா! ஒரு வேடன் வந்திருக்கிறான் : நேரில் உங்களைப் பார்த்துப் பேச விரும்புகிறான்.

இராமன் :—இலக்குவ ! அவனை இங்கே அழைத்துவா. அவன் வந்துள்ள காரியம் என்னென்று அறிவோம்.

[இலக்குவன் அழைத்து வருகிறான்.]

குகன் :—அண்ணலே, சரணம்; ஆட்கொள்ள வேண்டும். கங்கைக்கரையில் உள்ள சிருங்கிபேர புரத்தின் தலைவன் நான். இங்கு ஓடம் செலுத்துவது எங்கள் பணி. என் பெயர் குகன் என்பர்.

இராமன் :—அன்பா, வருக. உன்றன் துணையால் யாங்கள் பயன் எய்துவோம். கங்கையைக் கடந்து அப்பால் செல்லு வதற்கு, நல்ல ஓடக்காரனின் உதவியைப்பற்றி நாங்கள் சிந் தனை செய்து கொண்டிருந்தோம். தக்க சமயத்தில் நீயும் வந்தனை.

குகன் :—சுவாமி! அடியேன் காத்திருக்கிறேன்; யான் கொணர்ந்துள்ள இவைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

[காய்கனி கிழங்குகளையும், தேனையும் முன் வைக்கிறான்.]

இராமன் :—நீ அன்பாற் கொடுத்த இக் கனிகளும் தேனும் எங்களுக்கு மிக்க உவப்பானவை; இன்று இரவு இங் கேயே தங்கி யிருப்போம்; காலையில் நாங்கள் அக்கரைக்குச் செல்ல வேண்டும்.

குகன் :—ஏந்தலே, அங்ஙனமே செய்கிறேன். அடியேன் அகத்தில் ஒரு சிறு ஐயம். மன்னர்க்கு மன்னராய் விளங்கக் கூடிய தாங்கள், சடைமுடி தரித்தது ஏன்? ஈண்டு உற்ற உண்மையினை அடியேன் அறிதல் தகுமோ?

இராமன் :—அன்ப, என் சிற்றன்னை கைகேயி என்பவள் தந்தையிட மிருந்து இரண்டு வரங்கள் முன் ஒரு சமயத்தில் பெற்றிருந்தனள். ஆதலின், அவள் விருப்பப்படி என் இளவ லாகிய பரதன் பட்டம் அளிக்கப் பெற்றான். யான் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்யும் பேறு பெற்றேன்.

குகன் :—ஆயின், தாங்கள் அயோத்தி செல்ல வேண்டா. ஈண்டே என்னுடைய ஊரில் இருந்தருள்க. தேனும் பழமும் கிழங்கும் கொணர்ந்து தந்து, யானும் என் இனத்தாரும் உங்

களுக்குச் சேவை புரிவோம். புனித நீர்க் கங்கை ஓடுகிறது ; வனப்பும் இன்பமும் உள்ள சோலைகள் சூழ்ந்துள.

இராமன் ;—குகா, அன்பின் மிகுதியால் நீ இவ்வாறு உரைக்கின்றனை; நான் வனவாசத்தை மேற்கொள்ள வேண்டுமென்பது என் தந்தையின் ஆணை; ஆதலின், நகரில் தங்கி வாழ்தல் முறை அன்று.

குகன் :—நகரத்துள் வர விருப்பம் இல்லை என்றால், இங்கேயே பன்னசாலை அமைத்துத் தருகிறேன்; வேண்டுவன எல்லாம் தேடித் தருகிறேன் ; என் பணியை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இராமன் :—அப்பா, நாங்கள் இங்கே இருந்தால், எங்கள் நகரத்து ஜனங்கள் அடிக்கடி வந்து, எங்களை அழைக்க நினைப்பார்கள் ; சிறிதூரம் போவதே நல்லது.

குகன் :—ஆயின், நானும் துணையாக வர விரும்புகிறேன் ; காட்டில் வழி அமைக்கும் தொழில் எனக்குத் தெரியும். விலங்குகள் வந்தால் வேட்டை யாடுவேன் ; தகுந்த காலங்களில் உணவுப் பொருள் தேடி வருவேன் ; இரவிலே நீங்கள் தூங்கும்போது காவல் இருப்பேன்; அரசே, என்னை அழைத்துப் போக வேண்டும.

இராமன் :—நீ என்னுடன் வந்து விட்டால். இங்குள்ள உன் குலத்தாரைப் பரிபாலிப்பவர் யார்? நீ வேறு, நான் வேறு அன்று; இந்த நாடும் என் நாடு என்றே சொல்கிறேன்; இந்தக் குடிகள் என் குடிகளே. இவர்களைக் காப்பதற்காக நீ இங்கே இருக்கவேண்டும். நான் காட்டுக்குப் போய் வருகிறேன்.

குகன் :—என்னை விட்டுப் போவதாகவே முடிவு செய்து விட்டீர்களே !

இராமன் :—நீ என் தோழன்; இவன் உன் தம்பி ; இவள் உன் அண்ணி ; இந்த நாடு அரசின்றி அலையாவண்ணம், நீ இங்கேயே இருக்க வேண்டும்.

குகன் :—ஐயனே, அப்படியே செய்வேன்.

இராமன் :—காலையில் ஓடம் கொண்டுவா ; அக்கரைக்குப் போவோம்.

குகன் :—இரவு இங்கேயே தங்கிக் காவல் தொண்டு புரி கின்றேன்.

இராமன் :—நன்று.

இரண்டாம் களம்

காலம் : காலை.

இடம் : கங்கையின் தென்கரை.

பாத்திரங்கள் : குகன், வேடர்.

[குகன் கங்கைக் கரையில் நிற்கிறான். வேடர் பலர் இருக் கின்றனர். எதிர்க் கரையில் பரதன் சேனை நிற்கிறது.]

குகன் :—வேடர்களே, எதிர்க் கரையில் என்ன கூட்டம்?

ஒரு வேடன் :—பெரும்படை ஒன்று வருகிறது. அயோத் திக் கொடி தெரிகிறது.

மற்றொரு வேடன் :—ஒரு தேர் தனியே வருகிறது. அதில் இருக்கிறவன் யாரா யிருக்கலாம்?

குகன் :—ஆ! தெரிந்தது! தெரிந்தது! பரதன் வருகிறான்! பரதன் வருகிறான்!

வேடன் :—யார் அது? பரதன்!

குகன் :—அண்ணல்! ஆருயிர்த்தலைவன்! ஸ்ரீ ராமபிரான் முடிபெறச் சகியாமல், வஞ்சனையால் தன் தாயைத் தூண்டி, மன்னரிடம் வரங் கேட்டு முறையின்றி அரசு பெற்றவன்.

வேடன் :—இராமர் தம்பியா?

குகன் :—ஆமாம், வேடர்களே, இவர்கள் நம்மை அறி யாமல் இங்கு வந்து விட்டார்கள். நாம் வழி விட்ட பிறகல் லவோ அப்புறம் போக வேண்டும்?

வேடர்கள் :—ஆமாம்! ஆமாம்!! வரட்டும் ஒரு கை பார்ப்போம்!

குகன் :—வீரர்களே, அறத்தின் உருவே நம் இராமபிரான்; ‘தந்தை சொன்மிக்க மந்திரமில்லை’ என்னும் உண்மையைச் சிரமேற் கொண்டு வனவாசத்தை மேற்கொண்டுள்ளார். நாட்டை விட்டு விரட்டிய பின், காட்டிலும் இன்னல் செய்யக் கருதிப் படையோடும் வருகின்றான் போலும் இப்பரதன்! அவ்வாறாயின், நாம் சற்றும் இடம் கொடோம். நாம் எல்லோரும் இங்கேயே மடிவதாய் இருந்தாலும் சரி; இராமருக்கு இன்னல் நேராமல் நாம் காப்போம். இவர்களைக் கங்கையில் இறங்க விடக்கூடாது.

வேடர்கள் :—ஆம்! ஆம்!! அப்படியே!!!

குகன் :—வேடர்களே, நீங்கள் இங்கேயே இருங்கள்; நான் தனியாக ஓர் ஓடத்திற் சென்று, அங்கே உள்ள நிலைமையைப் பார்த்து வருகிறேன்.

[குகன் போகிறான்.]

மூன்றாம் களம்

காலம் : காலை.

இடம் : கங்கையின் வடகரை.

பாத்திரங்கள் : குகன், பரதன், சத்துருக்கினன், சுமந்திரர், கோசலை, சமித்திரை, கைகேயி முதலியோர்.

[சுமந்திரர் பரதனுடன் கரையோரத்தில் நின்று குகனைக் காட்டிப் பேசுகிறார்]

சுமந்திரர் : இளவரசே, இதோ வருபவன் இராம மூர்த்தியின் அன்புக்கு உரியவன். கங்கைக் கரையில் இருப்பவன். கணக்கற்ற ஓடங்கள் உடையவன். இவனுக்குக் கீழே எண்ணற்ற வில்லாளிகள் இருக்கிறார்கள். இவன், மலைபோன்ற பலம் உள்ளவன. அன்பே உருவாய் இருப்பவன். உம்மைக் காணும் எண்ணத்தோடு இதோ வருகிறான்.

[நெருங்கி வந்து, தனக்குள்]

குகன் : இவர் என் அண்ணலைப் போலவே இருக்கின்றார். அயலில் இருப்பவர் அவர் தம்பிபோன்று இருக்கிறார். அதே தவவேடம்! முகத்திலோ துன்பக்குறி விளங்குகிறது. இவர் இராமபிரான் போன திசையை நோக்கித் தொழுகிறார்; கண்ணீர் தாரை தாரையாக வடிக்கின்றார். ஆ! நான் என்ன நினைத்தேன்! என்ன சொன்னேன்! எம்பெருமான் பின் பிறந்தார் குற்றம் செய்வாரோ?

[விரைவாக வந்து வணங்குகிறான்.]

சுமத்திரர் : ஐயா, சேனைகளோடு நாங்கள் கங்கையைக் கடந்து இராமபிரானைக் காண உதவி செய்வீரா?

குகன் : இதோ ஓடங்கள் வருகின்றன; வாருங்கள்.

பரதன் : அரசர் பெருமானிடம் எங்களை அழைத்துச் செல்வீரா?

குகன் : அவ்வாறே செய்வேன், செய்வேன்; என் ஓடத்திலேயே ஏறுக. [கோசலையைக் காட்டி] இவ்வம்மையார் யார்?

பரதன் : இவரே சக்கரவர்த்தியின் முதற்றேவி; இராமபிரான் தம் வயிற்றிலே பிறந்ததாற் பெறும் இன்பத்தை, நான் தோன்றியதால் இழந்த தாயார்.

குகன் : தாயே, என் இராமமூர்த்தியைப் பிரிந்து எப்படிப் பொறுத்திருக்கிறீர்!

[பணிகிறான்.]

கோசலை : குழந்தாய், பரதா, இவன் யாவன்?

பரதன் : அம்மா, இவர் இராகவன் துணைவர்; இந்நாட்டில் உள்ள வேடர்களுக்குத் தலைவர்; குகப் பெருமான் என்பது இவர் திருநாமம்.

[குகன் கோசலை முன் பணிந்தபடியே அழுகிறான்.]

கோசலை : குழந்தாய், அழாதே. பரதா, நாம் காட்டுக்கு வந்தும் பெரிய இலாபம் அடைந்தோம். இவனோடு நீங்கள் நால்வரும் சேர்ந்து ஐவரும் ஒரு மனமாக அரசு செய்யுங்கள்.

குகன் : தாயே, என் தெய்வமே!

[பிறகு பரதனிடம் சுமித்திரையைச் சுட்டிக் காட்டி இவர் யார்.]

பரதன் : அண்ணா, இவர், மெய்யை நிறுத்தத் தம்முயிரைக் கொடுத்த மன்னர் பிரானின் இளந்தேவியார். இராமபிரானுக்கும் அண்ணியாருக்கும் தொண்டு செய்யும் பாக்கியம் பெற்று, அவருடன் வந்த இலக்குவனைப் பெற்ற பெரியார்.

குகன் : தாயே, வணங்குகிறேன்.

[மீண்டும் பரதனிடம் கைகேயியைச் சுட்டிக் காட்டி 'இளவரசே', இவர் யார்?]

பரதன் : அண்ணா, இவள் துன்பத்தைப் பெற்ற தாய்; பழிக்கு வளர்ப்புத் தாய்; தன் வயிற்றிற் சுமந்த எனக்கே துன்பத்தை விளைவித்தவள். நாடெங்கும் இராமனை எண்ணி உயிர் விடுகிறார்கள். இக்காலத்தில் துயரமே தோன்றாத முகம் உள்ளவளாய் விளங்கும் இப் புண்ணியவதி, என்னைப் பெற்ற அன்னை.

குகன் :—தாயே, உம்மையும் வணங்குகிறேன். உமது கருணையாலன்றோ, நான் இராமபிரானைக் காணும் பெரும் பேறு பெற்றேன்! இனி, நீங்கள் எல்லாரும் என்னுடைய ஓடத்தில் ஏறுங்கள். படை வீரர்கள் முதலிய யாவரும் மற்ற ஓடங்களில் ஏறி, அக்கரை சென்று விட்டனர்.

[குகன் ஓடம் செலுத்துகிறான்.]

நான்காம் களம்

காலம் : மாலை

இடம் : கங்கையின் மறுகரை.

பாத்திரங்கள் : குகன், பரதன், சத்துருக்கினன்.

[மூவரும் கரையில் நடந்து வருகிறார்கள்.]

பரதன் : அண்ணா, குகா, இராமபிரான் இங்கே வந்து தங்கிய இடத்தைப் பார்ப்போம்.

குகன் : இதோ, அருகில் இருக்கிறது. காட்டுகிறேன். [நடந்து] இதோ பாருங்கள்.

பரதன் : என்ன இது! புல் விரித்திருக்கிறது. இடமோ கருங்கற் பாறை!

குகன் : இரவில் இங்கே இராமபிரான் படுத்திருந்தார். இந்தப் புற்படுக்கை இளைய பெருமான் விரித்தது; பச்சைப் பசேர் என்று இருக்கிறது. சீதாதேவி இங்கே இராமபிரானுடன் இருந்தாள்.

பரதன் : அண்ணா, அண்ணா, நான் அன்னத் தூவி விரித்த கட்டிலிற் படுக்க, முடிதாங்க வேண்டிய நீர், இந்தப் பாறையிலோ கிடந்தீர்? நான் பல வகை இனிய தின்பண்டகளை விலாப்புடைக்க உண்டு கொழுத்து நிற்க, நீர் காயும் கிழங்கும் தின்னக் காட்டில் வந்தீரோ! தேரில் அமர்ந்து பல படைகளோடு நான் வர, நீர் இங்கே கால்நடையாகக் கல்லும் முள்ளும் நிறைந்த இக்கானகத்தின் வழியே தம்பியே துணையாக நடந்து வந்தீரே. இந்தக் காட்சியைக் கண்டு என் உயிர் இருக்கின்றதே!

[மள மள என்று கண்ணீர் உகுக்கிறான்.]

சத்துருக்கினன் : அண்ணா, இளையவர் எங்கே படுத்திருந்தார்?

குகன் : இளையவர் இந்த இடத்தில் விழித்தது விழித்தபடியே நின்று, இரவு முழுவதும் படபடப்புடன் காவல் செய்தார். அவர் பாக்கியமே பாக்கியம்.

பரதன் : இனி, நாம் ஏன் தாமதிக்க வேண்டும்? விரைவில் இராமபிரானிடம் போவோம். எல்லாரும் வந்து சேர்ந்தார்களா?

குகன் : எல்லாரும் வந்து விட்டார்கள்.

சத்துருக்கனன் : அண்ணு, இராமபிரான் ஓர் இரவு தங்கிய இடத்தில் நாமும் இன்றிரவு இருப்போம்.

பரதன் : அப்படியே ஆகுக. விடியற்காலையில் விரைவாகப் புறப்படுவோம்.

அரும்பத விளக்கம்

அண்ணல் - அரசர் ; ஏந்தல் - அரசர் ; ஆட்கொள் - அடிமை கொள் ; வனம் - காடு ; இன்னல் - துன்பம் ; மடிவது சாவது ; முடி - கிரீடம். சடைமுடி ; தேவி - மனைவி ; அமர்ந்து - உட்கார்ந்து ; பாக்கியம் - செல்வம் ; அதிர்ஷ்டம்,

2, கேள்விகள்

1. இராமன் காடு செல்லக் காரணம் என்ன ?
2. குகன் இராமனிடம் வேண்டிக்கொண்டது யாது? அதற்கு இராமன் என்ன பதில் அளித்தான் ?
3. சுமந்திரர் தூரத்தில் வருகிற குகனைப் பரதனுக்குச் சுட்டிக் காட்டி என்ன கூறுகிறுர் ?
4. பரதன் கோசலை, சுமித்திரை, கைகேயி இவர்களைக் குகனுக்கு அறிமுகப் படுத்தும்போது, ஒவ்வொருவரையும் பற்றி என்ன கூறினுன் ?
5. இப்பாடத்திஞல் அறியப்படும் நீதி யாது ?

3. இலக்கணம்

1. உடன்பாட்டில் உள்ள வாக்கியங்களை எதிர்மறையிலும், எதிர்மறையில் உள்ளவற்றை உடன்பாட்டிலுமாக மாற்றி அமைத்தல்.

(உ-ம்) 1. நாங்கள் நேற்று மாலை உலாவச் **சென்ருேம். — உடன்பாடு.**

நாங்கள் நேற்று மாலை உலாவச் **செல்லவில்லை.—எதிர்மறை.**

பயிற்சி—1

பின்வரும் உடன்பாட்டு வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாகவும், எதிர்மறை வாக்கியங்களை உடன்பாட்டு வாக்கியங்களாகவும் மாற்றி அமைக்க :—

1. கந்தசாமியால் கண்ணாடி உடைக்கப்படவில்லை.
2. உலாவச் சென்றபோது ஆசிரியர் மெல்ல நடந்து சென்றார்.
3. இந்தக் குளத்தில் தண்ணீர் நிறைய இருக்கிறது.
4. நேற்றிரவு வானத்தில் நக்ஷத்திரங்கள் நன்றாகப் பிரகாசிக்கவில்லை.
5. நீ அவன் சொற்படி கேட்பது நல்லது.
6. அவன் பாடிய பாடல் என் உள்ளத்தை உருக்கிவிட்டது.

2. நேர்க்கூற்று வாக்கியங்களை அயற்கூற்று வாக்கியங்களாகவும், அயற்கூற்று வாக்கியங்களை நேர்க்கூற்று வாக்கியங்களாகவும் மாற்றியமைத்தல்:

(உ-ம்) 1. இராமன் தங்கள் பாடசாலையில் இன்னம் விடுமுறை விடவில்லை என்றும், அதனால்தான் அப்பொழுதுஊருக்குப் போக முடியாது என்றும் கோபாலனை நோக்கிக் கூறினான்.

இராமன் கோபாலனை, நோக்கி "எங்கள் பாடசாலையில் இன்னம் விடுமிறை விடவில்லை; அதனால் நான் இப்பொழுது ஊருக்குப் போக முடியாது" என்றான்.

2. அவன் தகப்பனார் அவனைப் பார்த்து, "நீ ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும், உடனே எனக்குக் கடிதம் எழுதவேண்டும்" என்றார்.

அவன் தகப்பனார் அவனைப் பார்த்து அவன் ஊருக்குப்போய்ச் சேர்ந்ததும், உடனே அவருக்குக் கடிதம் எழுதவேண்டும் என்றார்.

பயிற்சி—2

பின்வரும் நேர்க்கூற்று வாக்கியங்களை அயற்கூற்று வாக்கியங்களாகவும், அயற்கூற்று வாக்கியங்களை நேர்க்கூற்று வாக்கியங்களாகவும் மாற்றி அமைக்க :—

1. ஆசிரியர் என்னை நோக்கிப், "பாம்பொடு பழகேல் என்று நான் எப்பொழுதும் உன்னிடம் கூறியதில்லையா?" என்ருர்.
2. இரவில் தங்களால் படிக்க முடியவில்லை என்று அந்த மாணவர்கள் கூறினர்.
3. குசேலர் அரண்மனைக் காவலரிடம் தாம் கண்ணனது பாலிய சிநேகிதர் என்று கூறினர்.
4. வேலன் சாமிநாதனை நோக்கித், தான் அவன் சொல்லையன்றி வேறு எவர் சொல்லையும் கேளான் என்று கூறினன்.
5. நியாயாதிபதி குற்றவாளியை நோக்கி, "நீ இக்குற்றம் செய்தது உண்டா?" என்று வினவினர்.
6. கந்தன் மிக்க வருத்தத்துடன், "மானம் இழந்த பின் உயிர் வாழ்வது நன்ருே? இப்புல்லுரை கேட்ட பிறகும் உயிருடன் வாழ்வேனே?" என்ருன்.

3. அலங்கார வினு வாக்கியங்களைச் சாதாரண வாக்கியங்களாகவும், சாதாரண வாக்கியங்களை அலங்கார வினு வாக்கியங்களாகவும் மாற்றி அமைத்தல் :

(உ-ம்) 1. இதனல் நமக்கு என்ன உணர்ச்சி உண்டாகின்றது ?
இதனல் நமக்கு ஓர் உணர்ச்சியும்உண்டாகவில்லை.

2. வியாதி இல்லாதவனுக்கு மருந்து வேண்டியதில்லை.
வியாதி இல்லாதவனுக்கு மருந்து எதற்கு ?

பயிற்சி—3

பின்வரும் அலங்கார வினு வாக்கியங்களைச் சாதாரண வாக்கியங்களாகவும், சாதாரண வாக்கியங்களை அலங்கார வினு வாக்கியங்களாகவும் மாற்றி அமைக்க :—

1. ஐயோ! உங்கள் கதி இவ்விதமா ஆகவேண்டும் ?
2. உற்றவிடத்தில் உயிர் வழங்கும்தன்மையோர்பற்றலரைக் கண்டாற் பணிவரோ ?
3. ஆ! உன்னைப் பார்த்து எத்தனை காலமாகிறது ?
4. இந்தக் கொடி எவ்வளவு அழகாய்ப் படர்ந்திருக்கிறது ?
5. இச்செயல் செய்ய உன் மனம் துணிந்திருக்கலாகாது.
6. இவ்விதம் வேலை செய்யாமல் திரிவது உனக்கு அழகாகாது.

4. குணவாசக வாக்கியங்களைக் குணிவாசக வாக்கியங்களாகவும், குணிவாசக, வாக்கியங்களைக் குணவாசக வாக்கியங்களாகவும் மாற்றி யமைத்தல்:

(உ-ம்.) 1. அந்த உத்தியோகஸ்தரது அதிகாரம் மிகவும் உயர்ந்தது.
அந்த உத்தியோகஸ்தர் மிகவும் உயர்ந்த அதிகாரி.

2. நன்மை செய்கிறவன் நன்மை அடைவான்.
நன்மை செய்தால் நன்மை விளையும்.

பயிற்சி—4

பின்வரும் குணவாசக வாக்கியங்களைக் குணிவாசக வாக்கியங்களாகவும், குணிவாசக வாக்கியங்களைக் குணவாசக வாக்கியங்களாகவும் மாற்றி அமைக்க :—

1. ஈகைக் குணம் நன்மை விளைக்கும்.
2. உபகாரம் வீண் போகாது,
3. தீமை செய்பவன் தீமை அடைவான்.
4. நல்ல நடக்கையுள்ளவன் யாவராலும் நன்கு மதிக்கப்படுவான்.
5. ஆசை வெட்கம் அறியாது.
6. நல்லிணக்கம் அல்லாதது அல்லல் படுத்தும்.
7. இளமைப் பருவத்தவர்கள் தவறுவது இயற்கை.
8. வஞ்சனை உடையவர்கள் துன்பமடைவார்கள்.
9. அந்தக் கீழ்ப்படிதலுள்ள மாணவன் உபாத்தியாயரால் நன்கு மதிக்கப்பட்டான்.
10. சோம்பல் உள்ளவர்கள் தேம்பித் திரிவார்கள்.

பயிற்சி—5

1. 'தெய்வச் செயல்'—இப்பாடத்தை நாடகமாக நடித்துக் காட்டுக.
2. 'பாரி வள்ளல்'—இதனை நாடகமாக நடித்துக் காட்டுக.
3. 'கண்ணகி'—இதனை நாடகமாக நடித்துக் காட்டுக,
4. 'குகப் பெருமான்'—இதனை நாடகமாக நடித்துக் காட்டுக.
5. **தெய்வச் செயல்**; இதில், (1) ஒருவன் காட்டு வழியே போதல் (2) பாம்பு எதிர்ப்படல் (3) புலி வருதல் (4) முதலை தோன்றுதல் (5) கடவுள் செயல் (6) அவன் பேசுதல்—இக்காட்சிகளை நடித்துக் காட்டுக.
6. **பாரிவள்ளல்** : இதில், (1) பாரியும் முல்லைக் கொடியும் (2) பாரியும் ஔவையாரும் (3) பாரியும் புலவர் பலரும் (4) பாரியும் மூவேந்தர் முற்றுகையும் (5) பாரிமகளிரும் கபிலரும் (6) பாரிமகளிரும் ஔவையாரும்—இக்காட்சிகளை நடித்துக் காட்டுக.
7. **கண்ணகி** : இதில், (1) கோவலனும் மாதவியும்—கோவலன் பிரிவு (2) கோவலனும் கண்ணகியும் மதுரை நோக்கிச் செல்லல் (3) இருவரும் இடைச்சேரியில் இருத்தல் (4) கோவலனும் பொற்கொல்லனும் (5) பொற்கொல்லன்—அரசன்—ஏவலர்—கோவலன் கொல்லப்படல் (6) கண்ணகி அரசன்முன் வழக்குரைத்தல் (7) கண்ணகி மதுரையை எரித்து மீள்தல் (8) மலைமீது நின்ற கண்ணகி சுவர்க்கம் புகுதல்—இக்காட்சிகளை நடித்துக் காட்டுக.
8. குகப்பெருமான் பாடத்தில் உள்ள, (1) ஐம்பால் வினை முற்றுகள் (2) வினையால் அணையும் பெயர்கள் (3) அறுவகைப் பெயர்கள் (4) முறைப் பெயர்கள் (5) வினையெச்ச - பெயரெச்சங்கள் (6) தன்வினை - பிறவினை, செய்வினை - செயப்பாட்டு வினை, செ. குன்றாவினை - குன்றியவினை (7) இரட்டைக்கிளவி - அடுக்குத்தொடர் (8) வே. - பண்பு - உவமை - உம்மைத் தொகைகள் இவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் கூறுக.

செய்யுள் பாடம்

I. நீதிச் செய்யுள்

1. நீதிநெறி விளக்கம்

கற்றவர் பெருமை

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் — மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு. 1

கல்வி அழகு

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் - முற்ற
முழுமணிப் பூணிக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார். 2

கல்விச் செருக்கு

முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க - சிற்றுளியாற்
கல்லுந் தகரும் ; தகரா கனங்குழாய் !
கொல்லுலைக் கூடத்தி னால். 3

கற்றது சிறிதெனக் கருதல்

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க - தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெல்லாம்
எற்றே ! இவர்க்குநா மென்று. 4

பெரியோர் பணிவு

ஆக்கம் பெரியார் சிறியார் இடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப - தூக்கின்

மெலியது மேன்மேல் எழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழுந் துலைக்கு. 5

கெடுவது காட்டும் குறி

நட்புப் பிரித்தல், பகைநட்டல், ஒற்றிகழ்தல்,
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல் - தக்கார்
நெடுமொழி கோறல், குணம்பிறி தாதல்,
கெடுவது காட்டும் குறி. 6

சலியாத கற்பக மரம்

கண்ணைக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையார் அன்றே
சலியாத கற்ப தரு. 7

இகைச் சிறப்பு

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா - ஆங்கதுகொண்டு
ஊரும் எறும்பிங் கொருகோடி உய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று. 8

விதியை வெல்லும் முயற்சி

உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வண்மையும் உண்டே - உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலும் கரி. 9

கருமமே கண்ணாய் இருப்பவர் இயல்பு

மெய்வருத்தம் பாரார் ,பசிநோக்கார், கண்துஞ்சார்,
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார், - செவ்வி
அருமையும் பாரார், அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். 10

1. அரும்பதவுரை

1. கலைமகள் - ஸரஸ்வதி. மலரவன் -பிரமதேவன்—தமிழோர் தமிழ்ப்புலவர், வெற்றுடம்பு - பூததேகம் (மனிதவுடம்பு.)

2. நலன் - சிறப்பு, கலன் - அழகு, ஆபரணம், அணிகலன் —ஆபரணம், மணிப்பூண் - இரத்தினாபரணம்.

3. களியற்க - மகிழவேண்டா, தகரும் - பிளக்கும், கொல்லுலைக்கூடம் - கொல்லன் உலையில் உள்ள சம்மட்டி.

4, மெலியார் - ஏழைகள், உடைமை - செல்வம்,

5. ஆக்கம் - கல்விச் செல்வம், மீச்செலவு - வரம்பு மீறிய தன்மை, தூக்கு - தராசை நிறு, துலை - தராசு.

6. நட்டல் - சேர்தல், ஒற்று - ஒற்றர், தக்கார் - பெரியோர், நெடுமொழி - உபதேசம், கோறல் - பாழாக்கல்.

7. நோக்கு - பார்வை, வாய்மை - வாய்ப்பேச்சு, பலம் - பழம், சலியாத - கொடுப்பதிற் சலிப்பில்லாத.

8. தூங்கும் - அசையும், உய்யும்-உயிர்வாழும்,ஆரும் - நிறைந்த, அயின்று - உண்டு.

9. உலையா - குறையாத, பால்முளை - வினைப்பயன், மறலி-யமன், கால்முனை - மகன் (மார்க்கண்டன்), கரி - சான்று.

10. துஞ்சார் - தூங்கார், செவ்வி - காலம், கண்ணுயினர் - கண்ணுக இருப்பவர்.

2. கேள்விகள்

1. மலரவன் தமிழோர்க்கு ஒவ்வாமை ஏன் ?
2. ‘ அழகுக்கு அழகு வேண்டா ’ என்ற உண்மை எங்கு விளங்கும் ?
3. சிற்றுளியும் கூடமும் எதை விளக்கும் உண்மைகள் ?
4, செல்வத்திறம் கல்வியிலும் நம் எண்ணம் எப்படி இருத்தல் நலம் ?
5. தராசுத் தட்டினுல் விளக்கிய நீதி என்ன ?
6. கெடுவது காட்டும் குறிகள் யாவை ?
7. சலியாத கற்பதருவுக்கு உள்ள அங்கங்கள் எவை ?

8. யானையும் எறும்பும் எந்த உண்மை விளக்கும் ?

9, மறலி உயிர் குடித்தகான்முளை - யார் ? குடித்தது எப்படி ?

10. கருமமே கண்ணுயினுர் இலக்கணம் யாது ?

2. இனியவை நாற்பது

கற்ருர்முன் கல்வி உரைத்தல் மிகவினிதே ;
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்னினிதே ;
எட்டுணை யானும் இரவாது தானீதல்
எத்துணையும் ஆற்ற இனிது. 1

நட்டார் புறங்கூருன் வாழ்தல் நனியினிதே ;
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகல் முன்னினிதே ;
முட்டில் பெரும்பொருள் ஆக்கியக்கால் மற்றது
தக்குழி யீதல் இனிது. 2

தருவாய் அறிந்து வழங்கல் இனிதே ;
ஒருவர்பங் காகாத வூக்கம் இனிதே ;
பெருவகைத் தாயினும் பெட்டவர் செய்யார்
திரிபின்றி வாழ்தல் இனிது. 3

வெல்வது வேண்டி வெகுளாதான் நோன்பினிதே ;
ஒல்லுந் துணையு மொன்றுய்ப்பான் பொறையினிதே;
இல்லது காமுற் றிரங்கி யிடர்ப்படார்
செய்வது செய்த லினிது. 4

ஆற்ருனை யாற்றென் றலையாமை முன்னினிதே;
கூற்றம் வரவுண்மை சிந்தித்து வாழ்வினிதே ;
ஆக்கம் இழியினும் அல்லவை கூருத
தேர்ச்சியிற் றேர்வினிய தில். 6

—பூதஞ்சேந்தனுர்

1. அரும்பதவுரை

1, மிக்கார் - பெரியோர், எட்டுணை - எள் அளவு.
2. நட்டார் - நண்பர், பட்டாங்கு - தருமநெறி, முட்டில் - குறைவு குறைவு இல்லாத, ஆக்கியக்கால் - தேடினால்.
3. வருவாய் - வரவு, வழங்கல் - செலவிடல், பெட்டவை - விரும்பிய வண்ணம். திரவு - உலகத்தார்க்கு மாறுபாடு.
4. வெகுளாதான் - கோபம் கொள்ளாதவன், அலையாமை - துன்புறுத்தாமை, ஆக்கம் - செல்வம்.
அல்லவை - அந்நியாயம்.

2. கேள்விகள்

1. 'கற்றார்முன்' என்று தொடங்கும் செய்யுளில் கூறப்படும் 'இனியவை' யாவை? அவை இனியவை ஆதல் எப்படி?
2 'நட்டார்' என்று தொடங்கும் பாவில் 'இனியவை யாவை?
3, 'வருவாய்' என்று தொடங்கும் பாட்டில் உள்ள 'இனியவை' எவை? அவை இனியவை ஆதல் எப்படி?
4. நோன்பு, பொறை, இடர்ப்படார்—இச்சொற்களைப் பாட்டோடு பொருந்த விளக்குக.
5. கூற்றம், ஆற்றான்—குறிப்பிடப்பெற்ற சந்தர்ப்பம்யாது?
6. இவற்றில் உனக்கு உரிய 'நல்லவை' எவை?

3. இன்னா நாற்பது

கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா;
நெடுநீர் புணையின்றி நீந்துதல் இன்னா
கடுமொழி யாளர் தொடர்பின்னா; இன்னா
தடுமாறி வாழ்த லுயிர்க்கு. 1.

சிறையில் கரும்பினைக் காத்தோம்பல் இன்னா;
புரைசேர் பழங்கூரை சேர்ந்தொழுகல் இன்னா;

முறையின்றி யாளும் அரசின்னு ; இன்னு
மறையின்றிச் செய்யும் வினை. 2.

ஆற்ற லிலாதான் பிடித்த படையின்னு
நாற்ற மிலாத மலரி னழகின்னு ;
தேற்ற மிலாதான் துணிபின்னு ; ஆங்கின்னு
மாற்ற மறியா னுரை. 3.

பொருளுணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னு ;
இருள்கூர் சிறுநெறி தாந்தனிப் போக்கின்னு ;
அருளில்லார் தங்கட் செலவின்னு; இன்னு
பொருளில்லார் வண்மை புரிவு. 4.

ஆன்றவிந்த சான்ருேருட் பேதை புகலின்னு ;
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னு ;
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னு; ஆங்கின்னு
ஈன்ருளை யோம்பா விடல் 5.

—கபிலர்.

1. அரும்பதவுரை

1. நெடுநீர் - வெள்ளம், புணை - தெப்பம், தொடர்பு-நட்பு.

2. சிறை - வேலி, புரை - ஒழுகும் துளை, மறை - வேதம்.

3. ஆற்றல் - சக்தி, படை - ஆயுதம், நாற்றம் - மணம், தேற்றம் - தெளிவு, மாற்றம் அறியான் - பேசத் தெரியாதவன்.

4. இருள்கூர் - இருள்மிக்க, வண்மை புரிவு - தருமம் செய்தல்.

5. ஆன்றவிந்த - உயர்ந்து அடங்கிய, மான்றிருண்ட - மயங்கி இருண்ட, வழங்கல் - நடமாடுதல், ஈன்ருள் - தாய்.

2. கேள்விகள்

1. உயிர்க்கு இன்னுதாவது எது ?

2. ஏன் கரும்பைக் காத்தல் இன்னுது ?

3. எம்மலரின் அழகு இன்பம் தராது ?

4. எவன் உரை இன்னாது ?
5. எங்குப் பாட்டுரைத்தல் இன்னாது ?
6. எவர் தருமம் செய்தல்இன்னாது ?
7. பேதை எங்குப் புகல் இன்னாது ?
8. எந்த நோன்பு இன்னாது ?

4. திரிகடுகம்

வைததனை இன்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்—ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும் **இம்மூவர்**
மெய்ப்பொருள் கண்டு வாழ்வார். 1.

வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கும் நோன்பிலியும்
இல்லது காமுற் றிருப்பானும்—கல்வி
செவிக்குற்றம் பார்த்திருப் பானு**மிம் மூவர்**
உமிக்குத்திக் கைவருந்து வார். 2.

வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை—எய்தப்
பலநாடி நல்லவை கற்றல் **இம்மூன்றும்**
நலமாட்சி நல்லவர் கோள். 3.

கிளைஞர்க் குதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கட் போற்ருன் உழவும்—இளைஞனுய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் **இம்மூன்றும்**
உள்ளன போலக் கெடும். 4.

நன்றிப் பயன்றூக்கா நாணிலியும் சான்ரேர்முன்
மன்றிற் கொடும்பா டுரைப்பானும்—நன்றின்றி
வைத்த அடைக்கலம் கொள்வானும் **இம்மூவர்**
எச்சம் இழந்து வாழ்வார். 5.

—**நல்லாதனுர்.**

1. அரும்பதவுரை

1. வைதது - வசவு, கைப்பு - கசக்கும் பொருள், கட்டி - வெல்லம்,

2. வெகுண்டு - கோபித்து, செவிக்குற்றம் - கேள்விக் குற்றம்.

3. செரு - போர், நலமாட்சி - நல்ல குணம்.

4. பைங்கூழ் - பசும் பயிர். குடிமை - குடிப்பிறப்பு.

5. நன்றிப்பயன் - பிறர் தனக்குச் செய்த உதவியின் பயன், மன்று - நியாய சபை, கொடும்பாடு - அக்கிரமம், எச்சம் - மக்கட் பேறு (பின்னிருப்பது).

2. கேள்விகள்

1. மெய்ப்பொருள் அறிய வல்லார் யார்?
2. உமியைக் குத்தி வருந்துவோர் யார்?
3. நல்லோர் எங்ஙனம் வாழ்வர்?
4. உள்ளன போலக் கெடுவன எவை?
5. வமிசம் இன்றி அழிபவர் யார்?

5. நான்மணிக் கடிகை

கொடுப்பின் அசனம் கொடுக்க; விடுப்பின்
உயிரிடை யீட்டை விடுக்க—எடுப்பின்
கிளையுட் கழிந்தார் எடுக்க; கெடுப்பின்
வெகுளி கெடுத்து விடல் 1.

நலனும் இளமையும் நல்குரவின் கீழ்ச்சாம்;
குலனும் குடிமையும் கல்லாமைக் கீழ்ச்சாம்
வளமின் குளத்தின்கீழ் நெற்சாம்; பரமல்லாற்
பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு. 2.

நீரான்வீ றெய்தும் விளைநிலம்; நீர்வழங்கும்
பண்டத்தாற் பாடெய்தும் பட்டினம்—கொண்டாளும்
நாட்டால்வீ றெய்துவர் மன்னவர்; கூத்தொருவன்
ஆடலாற் பாடு பெறும். 3

கள்ளாமை வேண்டும் கடிய வருதலால் ;
தள்ளாமை வேண்டும் தகுதி யுடையன ;
நள்ளாமை வேண்டும் சிறியரோ டியார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை. 4.

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம் ;
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம் ;
கிளைஞரில் போழ்திற் கிளங்குற்றம் குற்றமே
தமரால்லர் கையகத் துண். 5.

1. அரும்பதவுரை :

1. அசனம் - உணவு, இடையீடு - ஆபத்து, கழிந்தார் - ஏழைகள், எடுத்தல் - உயர்த்துதல்.

2. நலன் - அழகு, குடிமை - குடிப்பிறப்பு, வளம் - நீர்வளம் பரமல்லற் பண்டம் - பெரும் பாரமாகிய பண்டம், பகடு - வண்டியிற் பூட்டிய எருது.

3. வீறு - பெருமை, நீர் - கடல், பட்டினம் - கடற்றுறைப் பட்டினம், பாடு - பெருமை.

4. கள்ளாமை - திருடாமை, நள்ளாமை - நட்புச்செய்யாமை போழ்தத்து - சமயத்தில், வள்ளன்மை - தருமம் செய்தல்.

2. கேள்விகள்

1. கொடுக்க, விடுக்க, கெடுக்க—எவற்றை ? எடுக்க—எவரை ?
2. எவை எவை எங்கெங்குச் சாரும் ?
3. விளைநிலம், பட்டினம்,—இவை எவற்றால் உயர்வு பெறும் ? கூத்து யாரால் சிறப்புறும் ? மன்னர் எதனால் சிறப்புறுவர் ?
4. வேண்டும்—எவை எவை ?
5. குற்றங்கள்—எவை எவை ?
6. உனக்கு வேண்டும் நீதிகளை இப் பதியிலிருந்து எடுத்துக் கூறுக.

II. கதைச் செய்யுட்கள்

1. நளவெண்பா

வாகுவனுக வந்த நளன் மக்களைக் கண்டது

மக்களைமுன் காணு மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா — 'மக்காள்! நீர்
என்மக்கள் போல்கின்றீர்; யார்மக்கள்?' என்றுரைத்தான்
வன்மக் களியானை மன். 1.

மக்கள் மறுமொழி

'மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கான்விட் டவனேக— இங்கர்க்கே
வாழ்கின்றோம்; எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்' என்றார் அழுது. 2.

நளன் சொல்வது

'உங்கள் அரசொருவன் ஆளநீர் ஓடிப்போந்து
இங்கண் உறைதல் இழுக்கன்றோ ?—செங்கை
வளவரசே!, என்றுரைத்தான் மாதவத்தார் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து. 3.

மக்கள் கோபம்

'நெஞ்சால் இம்மாற்றம் நினைந்துரைக்க நீயல்லால்
அஞ்சாரோ மன்னர்? அடுமடையா!—எஞ்சாத
தீமையே கொண்ட சிறுதொழிலாய்! எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி. 4.

மேலும் மக்கள் சொல்வது

எந்தை கழலிணையில் எம்மருங்கும் காணலாம்
கந்து அளியும் கடாக்களிற்றின்—வந்து
பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தங்கள்
மணிமுடியில் தேய்ந்த வடு.' 5.

நளன் மறுமொழி

'மன்னர் பெருமை மடையர் அறிவரோ?
உன்னை யறியா துரைசெய்த—என்னை
முனிந்தருளல்' என்று முடிசாய்த்து நின்ருன்
கனிந்துருகி நீர்வாரக் கண். 6.

—புகழேந்திப் புலவர்.

1. அரும்பதவுரை

1. காணு - கண்டு, நடுங்கா நடுங்கி, வெய்துயிரா - பெருமூச்சுவிட்டு, வன்மம் - கோபம், களி - மதம், மன் - அரசு.

2. நிடதத்தார் - நிடத நாட்டு மக்கள், அன்னை - தாய் கான் - காடு, ஏக - போக, இந்நகர்க்கு - இந்நகரில்.

3. போந்து - வந்து, இழுக்கு - குற்றம், மாதவம் - பெருந் தவம்.

4. மாற்றம் - சொல், மடையன் - சமையல் செய்வோன், எஞ்சாத - குறையாத, கோமான் - அரசன், வாய்மை - உண்மை, வலி - வன்மை.

5. எந்தை - எங்கள் தகப்பன், கழலிணை - இரண்டு பாதங்கள், எம்மருங்கு - எல்லாப் பக்கங்கள், கந்து - யானை கட்டும் தூண், அளியும் - முறிக்கும், கடாக்களிறு - மதயானை, பணி - பாம்பு, ஆதிசேடன் முடி - தலை, பார் - பூமி, மணிமுடி - இரத்தின கிரீடம், தேய்ந்த வடு - அழுந்திய தழும்பு.

6. முனிந்தருளல் - கோபிக்க வேண்டாம், முடி சாய்த்து - தலை வணங்கி, நீர் வார - நீர் கொட்ட.

2. கேள்விகள்

1. மக்களைக் கண்ட நளன் என்ன சொன்ஞன் ?
2. மக்கள் கூறிய மறுமொழி என்ன ?
3. 'இழுக்கன்ரே' என்று எதைப்பற்றிச் சொன்ஞன் ?
4. 'அடுமடையா' ? என்று மக்கள் அழைத்தது ஏன் ?
5. தந்தை பெருமையை மக்கள் கூறியது எங்ஙனம் ?
6. முடிசாய்த்து நின்றது யார் ? எப்பொழுது ? ஏன் ?

2. குசேலோபாக்கியானம்

குசேலர் கண்ணனைக் கண்டது

வருந்துமோர் மிடியன் சேம வைப்பெதிர் கண்டாற் போலும்
அருந்துண விழந்தோன் விண்ணோர் அமுதெதிர் கண்டாற்
போலும்
பரிந்துவெப் புழலு வோன்கற் பகமெதிர் கண்டாற் போலும்
சரிந்தபற் றினன்மெய் யாசான் றனையெதிர் கண்டாற்
போலும். 1.

எண்ணனைக் கிலங்கு மார்பம் ஈந்தருள் பிரானை நீல
வண்ணனைத் திகிரி சங்கம் வலமிட முறக்கொண் டானை
மண்ணனைத் தும்பு ரக்கும் வாசு தேவனை மணக்கும்
கண்ணனைத் துளவத் தாமக் கண்ணனைக் கண்ணிற் கண்டான் 2

கண்ணன் அடைந்த மகிழ்ச்சி

பாக்கிய முற்ற திந்நாள் பாக்கிய முற்ற திந்நாள்
ஆக்கிய அறம்ப லித்த ஆக்கிய அறம்ப லித்த
யோக்கிய மடைந்த திந்த மனையுமென் றுரைத்து ரைத்துத்
தேக்கிய புகழி னுன்கொண் டாடினன் சிலவ லோயே! 3.
வழிநடந் திளைத்த வேயிம் மலரடி இரண்டு மென்று

கண்ணன்செய்த உபசாரம்

கழிமகிழ் சிறப்ப மெல்ல வருடினன் கமலக் கண்ணன்;
பழியில்பல் லுபசா ரங்கள் பண்ணவும் தெரியா னுகி
ஒழிவறு தவக்கு சேலன் ஒன்றும்பே சாதி ருந்தான். 4

கண்ணன் குசேலரை விசாரித்தது

நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்புபெரு நீர்மையளே?
மன்னுடைய சொற்காத்துச் சோர்விலா மாண்பினளே?
தன்னுடைய வுயிராநின் றனைப்பேணுந் தன்மையளே?
உன்னுடைய வருவாய்க்குத் தக்கசெலவு ஞற்றுவளே? 5.

சொன்னகா ரியமனைத்தும் சொன்னபடி இயற்றுவளோ?
என்னமிடி வரினும்வெளி யெடுத்தியம்பா இயல்பினளோ?
தன்னமும்நா யகன்பழிதூற் றுதமையத் தக்கவளே
பன்னருமா மறையுணர்ந்த பளகறுநற் குணக்குன்றே. 6.

பைங்குதலை வாய்மைந்தர் பலர்பிறக்க வேண்டுமே;
எங்குமரும் புகழுடையாய்! எத்தனைமைந் தர்கள்பிறந்தார்?
அங்கவரைப் பேரவையோர் அணிதாச்செய் செயலனைத்தும்
சிங்கலறப்புரிந்தனயே செய்தனையே உபநயனம்? 7.

நிறைகின்ற சிறுமைந்தர் நினைத்தவை எலாங்கொடுத்துக்
குறைவின்றி நடத்திவரு கின்றனையே? கொடும்பகலில்
உறைகின்ற பசிவருத்தத் துறுநர்மா லெனச்சுருதி
அறைகின்ற தாலவர்க் கன்னமிடு கின்றனையே? 8.

குருகுல நினைவுகள்

இருவேமும் முன்னாளில் இலங்குசாந் தீபமுனி
வருகாமர் அடிவணங்கி மாமறைகற் றுணர்ந்திடுநாள்
பெருகார்வத் தொடும்பேசிக் கொண்டிருந்த பேச்செல்லாம்
திருகாரா வுளத்துனைத் திருக்கின்று யோசிறப்ப? 9

கொள்ளைமறை உணர்ச்சிமிகு குருராயன் பத்தினியாம்
தள்ளைநமைப் பார்த்தமுது சமைப்பதற்கிந் தனமின்றின்
றெள்ளருநன் மைந்தர்காள்! கொடுவாரு மெ'னவேவ
லிள்ளருமோர் பெருங்காட்டுள் விறகொடித்துத் திரிந்தனமே 10

கண்ணன் சிற்றுண்டி கேட்டது

'பந்தனை அகன்றமேலோய்! பற்பல நாட்குப் பின்பு
வந்தனை; எனக்கென் கொண்டு வந்தனை? அதனை இன்னே
தந்தனை யாலி னன்று; தருசுவைப் பக்கணத்தென்
சிந்தனை நின்ற தெ'ன்றுன் தெரிவரும் வஞ்சக் கள்வன். 11.

கண்ணன் அவல் தின்று மகிழ்ந்தது

மலிதரும் அன்பின்வந்த வண்பொழி அவிழ்த்து நோக்கி,
வலிதரும் அவற்றுள் நன்று வாய்த்தது நமக்கீ தென்னு,
ஒலிதரு கழற்கால் ஐயன் ஒருபிடி அவலைக் காதல்
பொலிதரஎடுத்து வாயிற் போகட்டுக் கொண்டான்மாதோ?.12,

—தேவராசப் பிள்ளை.

1. அரும்பதவுரை

1. மிடியன் - ஏழை, சேம வைப்பு - சேர்த்த செல்வம், அருந்து உணவு - உண்ணும் உணவு, விண்ணோர் - தேவர், அமுது - அமிர்தம், பரிந்து - வருந்தி, வெப்பு - வெப்பம், வெயிற் கொடுமை. கற்பகம் - குளிர்ச்சி தரும் நீர் நிறைந்த மரம். கேட்டவற்றை யெல்லாம் தரும் மரம், சரிந்த பற்றினன் - ஆசை யழிந்தவன், மெய்யாசான் - உண்மையான தத்துவத்தை அருளும் ஆசாரியன்.

2. எண்ணனை - எட்டுத் தேவியர், திகிரி - சக்கரம், புரக்கும் - காக்கும், கள்நனை - தேனில் நனைந்த, துளவத் தாமக் கண்ணன் - துளசிமாலை யணிந்த கண்ணன்.

3. யோக்கியம் - தகுதி, சிலவலோயே என்று அழைத்தது, பாகவத புராணம் கேட்ட பரீக்ஷித்து மகாராஜனை.

4. கழி - மிக்க, வருடு - பிடி, குசேலன் - கந்தை அணிந்தவன்.

5. மனைக்கிழத்தி - மனைவி, மன் - அரசன், தலைவன், நாயகன், வருவாய் - வரவு, உஞற்று - செய்.

6. மிடி - வறுமை, தன்னமும் சிறிதேனும், பன் - சொல் பளகறு - குற்றமற்ற, குணக்குன்று - குணமலை.

7. குதலை - மழலைச் சொல், பேரவையோர் - அறிவு மிக்க பெரியோர், சிங்கல் - குறைவு.

8. உறைகின்ற - வயிற்றுள் இருக்கும், உறுநர் - வருபவர் மால் - திருமால், சுருதி - வேதம், அன்னம் - சோறு.

9. இருவேம் - நாம் இருவர், காமர் - அழகிய திருகு, வஞ்சகம், ஆரா - இல்லாத.

10. கொள்ளை - நிறைந்த, குருராயன் - குருமகாராஜர், தள்ளை - தாய், இந்தனம் - விறகு, எள் - இகழ், விள்ளரு - அடர்த்தி மிக்க, சொல்ல முடியாத.

11. பந்தனை - உலகப் பற்று, பக்கணம் - சிற்றுண்டி.

12. ஒலிதரு கழற் காலையன் - கண்ணபிரான்.

2. கேள்விகள்

1. குசேலர் கண்ணனைக் கண்டபோது எப்படி மகிழ்ந்தார் ?
2. கண்ணன் எப்படி உபசரித்தான் ?
3. குசேலரை என்னென்ன கேட்டான் ?
4. குருகுல வாசத்தைப்பற்றிப் பேசியவை என்ன ?
5. சிற்றுண்டியைக் கண்ணன் எப்படி ஏற்றுக் கொண்டான் ?

3. குமண சரித்திரம்

குமணன் கூறுவது.

முன்னைய பிறப்பில் அறம்பல புரிந்த
முறைமையால் உயர்பெருஞ் சிறப்பின்
மன்னிய மனித்தர் இங்குமவ் வாறே
மனத்தொடு நல்லறம் புரிந்தால்,
பின்னரும் இவ்வா றுயர்நலம் பெறுவார் ;
பேதமை யால்மறந் தனரேல்,
என்னபாழ்ப் பிறவி யெடுப்பரோ, இதனை
எண்ணவே நடுங்குமென் னிதயம் ! 1.

ஈகையும் புகழும்

ஈதலெனும் நற்குணமொன் றிசைந்தவர்பால் எவ்வகைய
தீதுபெறுங் குணமுறினுஞ் செஞ்சுடர்முன் பனிபோலாம்;

ஆதலினுல் மானிடர்க்கும் அமரருக்கும் யாவருக்கும்
மேதினியிற் கொடைநிகரா விளங்குதுணை வேறிலையால் 2

புகழுடம்பு

அகழ்தருமண் புழுநரியாய் அனைத்துமெதிர் பார்த்திருக்கு
இகழுடம்பை யடைந்தவர்கள் இருக்கையினும் இறந்தவரே ;
திகழிரவி சவி நாணத் தேயமெலாம் மிகவிளங்கும்
புகழுடம்பைப்பொருந்தினவர்பொன்றுகினும்பொன்ருரே

அன்புடையார்

அன்பிலரே எப்பொருளும் அழிந்துபடுந் தமக்குரியார்;
அன்புடையார் என்பினுடன் ஆவியுமே பிறர்க்குரியர்;
என்பதைமுன் **சிபிவேந்தன்** இளம்புறவுக் கின்பமுற
என்பதையும் அளித்தழியா இசையடைந்த திசையாதோ 4.

தம்பிக்கு உரைத்தது

ஆதலினு லரசேநீ யன்புகொடை யருளறிவு
மேதகவுற் றிவ்வரசின் விளங்குதிபன் னெடுங்காலம் ;
ஓதுமதி மந்திரிமார் உரைசிறிதும் தள்ளற்க
ஈதுறுதி யெனக்கோடி யென்னினுனக் கழிவிலையால். 5.

அரசைத் தம்பிக்குக்கொடுத்தது

வேட்டவர்கள் வேட்டவெலாம் விலக்காற் கொடுப்பவெனும்
நாட்டமுளேன்; அயலொருவன் நண்ணியிரக் கினுமகிழ்ச்சி
காட்டியளித் திடும் அரசைக் காப்பதனுக் குரிமையை நீ
கேட்டபொழு தில்லையெனக் கிளத்துவனே கெழுவலியாய்!

அழிவுபடும் இகச்செல்வம்
ஆயஇதை நீபொருந்தி
வழியுமது மலர்க்கடவுள்
வாழ்க்கைநிலை மாய்ந்தாலும்

அழிவுபடாப் பரச்செல்வம்
ஆந்தவத்தை எனக்களிக்கும்
தொழிலுடையாய் துணைவனெனும்
சொற்பொருளைத் துலக்கினையால். 7.

குமணன் தவஞ்செய்யச் செல்லுதல்

நன்றாய தொழிலினைப்பின்
ஞட்புரிவா மெனக்கருதா(து)
அன்றேசெய் வதுவேண்டும்;
ஆதலினால் அருந்தவத்திற்(கு)
இன்றேநான் ஏகுவன்; நீ
இருத்தி'' எனத் தனித்தெழுந்து
சென்றான் நல்லறத்தினுக்குச்
செவிலியெனத் திகழ்பெரியோன். 8.

குடிகள் வருந்தியது

'நிதியிழந்தோம்' என்பர்சிலர்;
'நெடியசிர மசைத்திசைக்கும்
துதியிழந்தோம்' என்பர்சிலர்;
'சொற்கடலிற் றுணைந்தறியும்
மதியிழந்தோம்' என்பர்சிலர்
மனமறுகி வாணரெலாம்
பதியிழந்து வனநோக்கிப்
பார்வேந்தன் படர்பொழுதே, 9.

குமணன் தவம்

கனிசில நாள ருந்திக் காய்சில நாள ருந்தி
நனிதழை சின்னு ளுண்டு நன்னிலக் கிழங்குட் கொண்டு
இனிய தேங் கலந்து போதும் ஈர்ம்புனல் வாயு மாந்தித்
தனியர சான பூமான் தவத்தரசாகி நின்றான். 10.

இளங்குமணன் அரசியல்

அறத்தையும் நோக்கான் செவ்வி
யருளையும் நோக்கான் அன்புத்
திறத்தையும் நோக்கான் கொண்ட
சிறப்பையும் நோக்கான் எய்தும்
மறத்தையும் நோக்கான் பண்டை
வழக்கையும் நோக்கானுகிப்
புறத்தொடும் அகத்துஞ் செலவப்
பொருளையே நோக்கி வாழ்ந்தான். 11.

—மு. ரா. கந்தசாமிக் கவிராயர்.

1. அரும்பதவுரை

1. மன்னிய-நிலைத்த, பாழ்பிறவி- பாழான பிறவி, இதயம்-மனம்.

2. தீது பெறும் குணம்-கெட்டகுணம், செஞ்சுடர்-சூரியன், அமரர்-தேவர், மேதினி-பூமி.

3. அஃழ்தரு-தோண்டுகிற, மண்புழு-மண்ணுண்ணும் புழு, இகழ் உடம்பு - இகழத்தக்க நிலையில் உள்ள உடம்பு, இருக்கையிலும் - இருக்கும்போதே. இரவி - சூரியன், சலி-ஒளி, பொன்றுதல்-இறத்தல்.

4. ஆவி-உயிர், என்பு-எலும்பு, புறவு-புரு.

5. மேதக-பெருமையுற, தள்ளற்க-தள்ளாதே.

6. வேட்டவர்-விரும்பியர், கொடுப்பல்-கொடுப்பேன், நாட்டம்-எண்ணம், உரிமையை-உரிமையுள்ளாய். கிளத்துவனே-சொல்லுவேனே.

7. இகச் செல்வம்-இம்மைச்செல்வம், மலர்க் கடவுள்-மலரின் மேல் இருக்கும் பிரமதேவன்.

8. பின்னுள் - பிற்காலத்தில், ஏகுவன் - போவேன், இருத்தி-இருப்பாய், செவிலி-வளர்ப்புத்தாய்,

9. நிதி-செல்வம், சிரம்-தலை, சொற்கடல்-சொல் ஆகியகடல், வாணர்-புலவர், பதி-நகரம்.

10. அருந்தி-உண்டு, நனி-மிகவும், தேம் - தேன், ஈர்ம்புனல்-குளிர்ந்த நீர், மாந்தி-உட்கொண்டு, பூமான்-செல்வன், தவத்தரசு-தவத்தின் தலைவன்.

11. செல்வி-செம்மை, மறம்-பாவம், பண்டை வழக்கு - முன்னாளில் நடந்தமுறை.

2. கேள்விகள்

1. குமணன் 'எண்ணவே நடுங்கும் இதயம்' என்றது எதனை ?
2. ஈகையின் சிறப்பை விளக்குக.
3. இகழுடம்பு என்றது எதனை ? புகழுடம்பு எது ?
4. அன்புடையார் தன்மை யாது ? யார் விளக்கினர் ?
5. குமணன் அறிவுரை யாது ?
6. துணைவன் கூறும் சொற்பொருள் துலக்கியது எப்படி ?
7. அறத்தினுக்குச் செவிலி யார் ? அவன் தவத்திற்கு வரும்போது என்ன சொன்னன் ?
8. குமணன் எப்படித் தவம் செய்தான்?

III. பலசுவைச் செய்யுட்கள்

1. தனிப் பாடல்கள்

இயாத உலோபியைப் பாடியது

கல்லாத ஒருவனைநான் கற்ருய் என்றேன் ;
காடெறியு மறவனைநா டாள்வாய் என்றேன் ;
பொல்லாத ஒருவனைநான் நல்லாய் என்றேன் ;
போர்முகமே அறியானைப் புலியே றென்றேன் ;
மல்லாரும் புயமென்றேன் சூம்பல் தோளை
வழங்காத கையனைநான் வள்ளல் என்றேன் ;
இல்லாத சொன்னேனுக் கில்லை என்ருன் ;
யானு மென்றன் குற்றத்தால் ஏகுவேனே. 1.

ஒருவன் பட்டபாடு

ஆவீன மழைபொழிய இல்லம்வீழ
அகத்தடியாள் மெய்நோவ அடிமை சாவ
மாவீரம் போகுமென்று விதைகொண் டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்
தள்ளொணு விருந்துவரச் சர்ப்பந் தீண்டக்
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்பக்
குருக்கள்வந்து தட்சிணைகள் கொடுவென் ருரே. 2.

புல்வர் மனத்துயர்

வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்
வாயில்தொறு முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகு நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தேன் அப்பா!
கொஞ்சமல்ல பிரம்படியின்புண்ணும், வேடன்
கொடுங்காலாவ் உதைத்த புண்ணும், கோபமாகப்
பஞ்சவரில் ஒருவன் வில்லால் அடித்த புண்ணும்
பாருமென்றே காட்டி நின்ருன் பரமன்ருனே. 3.

வறுமையின் கொடுமை

வறுமையே துன்பம் யாவும் வளர்வுறப் பெற்ற தாயாம்;
வறுமையே அறத்தைக் கொன்று மறத்தினை வைக்கும் பாவி;
வறுமையேஅறிவி னுட்பம் மழுங்குறச் செய்யும் பேயாம்;
வறுமையே இம்மை வாழ்வின் வந்திடும் நரகம் ஆமே. 4.

செல்வச் சிறப்பு

செல்வமே நினைத்த தெல்லாம் செயவதில் தேவ தாரு;
செல்வமே சொல்லின் வன்மை சிறப்பருள் காம தேனு;
செல்வமேஇன்மை வாழ்விற் செறிந்திடு சுவர்க்க போகம்;
செல்வமே எங்குஞ் சென்று செயம்பெற வுதவுஞ் சீரே. 5

கல்வியும் செல்வமும்

கல்வியைப் பெற்ருர் எங்கும் கவிந்துறு புகழைக் கொள்வர்;
கல்வியைப் பெற்ருர் செல்வர் காவலர் போற்ற வாழ்வர்;
செல்வமுங் கல்வி சேரச் சிறந்ததோர் உதவி யாகும்;
கல்வியுஞ் செல்வம் நிற்கக் கருதுநற் றுணையா மன்றே. 6.

1. அரும்பதவுரை

1, காடு எறியும் - காட்டில் வேட்டையாடும், போர்முகம் - போர்க்களம், புலியேறு-ஆண் புலி, மல் - மற்போர், புயம்-தோள். சூம்பல் - வளர்ச்சி குறைந்து, இளைத்த தன்மை. வள்ளல் - வரையாது கொடுப்பவன்.

2. ஆ - பசு, இல்லம் - வீடு, அகத்தடியாள் - வீட்டுப் பணி செய்யும் அடிமைப்பெண், மனைவி என்றும் கூறலாம். சாவோலை-சாவு குறிக்கும் கடிதம், சர்ப்பம் - பாம்பு, கோவேந்தர் - அரசர், கடமை - வரிப்பணம்.

3. சங்கரன் - சிவன், பிரம்படி - பிட்டுக்கு மண் சுமந்த கதை, வேடன் உதைத்தது - கண்ணப்பநாயனர் கதை, பஞ்சவர்-ஐவராகிய பாண்டவர், ஒருவன் - அருச்சுனன், வில்லால் அடித்தது - சிவனேடு போர்செய்து பாசுபதாஸ்திரம் பெற்ற கதை.

4. மறம் - பாவம், இம்மை - இப்பிறப்பின் வாழ்வு.

5. தேவதாரு - தேவருலகில் உள்ள கற்பகம், காமதேனு - விரும்பியவற்றைக் கொடுக்கும் தேவர் பசு, சுவர்க்கபோகம்-தேவர் வாழ்வு, செயம் - வெற்றி, சீர் - கீர்த்தியுள்ள பொருள்.

6. கவிந்துறு - சூழ்ந்துள்ள, காவலர் - அரசர்.

2. கேள்விகள்

1. ஏன் இல்லை என்ருன் ?
2. ஒருவன் பட்டபாடுகள் எவை ?
3. புலவர் பெற்ற புண்கள் எவை ?
4. அமலன் பெற்ற புண்கள் எவை ?
5. வறுமையின் கொடுமையை விளக்குக.
6. செல்வச் சிறப்பை விளக்குக.

2. நாடு

பாரத வீரர் வாழ்ந்து மலிபுகழ் பொலிந்த நாடு;
நாரதர் பிறந்த நாடு; ஞானியர் சிறந்த நாடு;
நீரதம் மழையை நல்க நிலங்களால் விளங்கும் நாடு;
பாரத நாடு நந்தம் பண்டையோர் வாழ்ந்த நாடே. 1.

அன்பையே கடவு ளென்ன அறிந்தவர் பிறந்த நாடு;
துன்பையே இன்பாக் கொண்ட தூயவர் நடந்த நாடு;
வன்பையே மனத்து வையா வள்ளுவர் திரிந்த நாடு;
நண்பையே எவர்க்கு நல்கும் நாடுநந் தாய்நா டன்றே. 2.

தவத்தினுல் உலகை வென்ருேர் தாயினைப் போற்றும் நாடு ;
நவத்தினுல் மயக்க மெய்தா ஞானமே புகன்ற நாடு ;
அவத்தைகள் எவற்றின் கண்ணும் அமலனை யறிந்த நாடு ;
பவத்தினுல் எய்தும் மேன்மை பகர்ந்தநந் தாய்நா டன்றே. 3.

எவ்வழி நாடி னுலும் இறையுளான் என்ற நாடு;
செவ்வழி பாடி ஈசன் திறத்தையே விளக்கும் நாடு;
மெய்வழி பலவா மேனும் மெய்யொன்றே யென்ற நாடு;
பொய்வழி புகாத நாடு போற்றுநம் தாய்நா டன்றே. 4.

உறுதியா மெய்ம்மைக் காக உயிரையும் கொடுக்கும் நாடு;
பெறுபொருள் உலக வாழ்வு பெரிதென மதியா நாடு;
மறுமையே கருதி யிம்மை மறந்ததா லுயர்ந்த நாடு;
நறுமலர் மலரு நாடு; நந்திருத் தாய்நா டன்றே. 5.

—**வித்வான் ந. கனகராஜ அய்யர்**, B.O.L.

1. அரும்பதவுரை

1. மாரதவீரர் - அர்த்தரதர், சமரதர், மகாரதர், அதிரதர் என்ற நால்வகை வீரருள் மூன்றும் வகையார். நீரதம் - மேகம்.

2. துன்பு - துன்பம், இன்பு - இன்பம், வன்பு - கொடுமை, நன்பு - நன்மை, வள்ளலர் - எல்லார்க்கும் உதவும் இயல்பினர்.

3. நவம் - புதுமை, அவத்தைகள் - நிலைமைகள், பவம் - பிறப்பு.

4. இறை - கடவுள், செவ்வழி - பண்வகை.

5. மறுமை - வரும்வாழ்வு, நறுமலர் - மணமலர்.

2. கேள்விகள்

1. வீரத்தினும் ஞானத்தினும் நம் நாட்டின் பழம் புகழ் கூறுக.
2. வள்ளலர் தன்மை தெய்வவுணர்ச்சி நம் நாட்டில் எங்ஙனம் இருந்தது ?
3. தவத்தினுல் உயர்ந்தவர் தாயினை எவ்வாறு மதிப்பர் ?
4. தெய்வங் கொள்கையில் நம் நாட்டுக்குள்ள பெருமை யாது ?
5, இம்மை மறுமை உணர்ச்சியில் நம் நாட்டில் நிலை யாது ?

3. தமிழ்மொழி

உள்ளமெலாம் உருக்கவல்ல உயர்வொப்பில் சுவையுடைத்தாய்
வள்ளலென வாழ்பவர்க்கு மாயாத புகழளித்துக்
கொள்ளரிய பொருளையெலாம் குவலயத்தார் பெறநல்கி
வள்ளுவராற் குறள்படைத்த மதிப்பினது **தமிழ்மொழியே** 1.

உம்பருக்கு வாய்ப்பரிய ஒருசுவைப்பே ரமுதெனவே
இம்பருளார் இயம்புகின்ற ஏற்றமுள தரசரெலாம்
செம்பொனெடு மழைபொழிந்து சிறிதுபுகழ் பெறவமைந்த
கம்பரது கவிபடைத்த களிப்பினது **தமிழ்மொழியே** 2.

உள்ளபொருள் உள்ளபடி உறுதியுற வுரைப்பவராம்
எள்ளரிய புகழ்படைத்த எண்ணிறந்த புலவர்களால்
கள்ளடைத்த மலரெனவே காலமெலாம் வளர்வுறுபேறு
ஒள்ளியதாய் அடைந்திதுநம் உரிமைபெறுந் **தமிழ்மொழியே** 3.

நாவார நம்பனையே நாணுளும் பாடிமகிழ்
தேவாரப் பெரியோர்கள் செயல்படைத்த சிறப்பினது
மாவாரத் திருமாலும் வழிவருமோர் மாண்பினது
பாருரரப் புரவலர்கள் பயின்றபழந் **தமிழ்மொழியே** 4.

தமைமறந்த குருகையர்கோன் தனியருளிச் செயல்பயிலும்
நமைநிகர்க்க மொழியுளதோ நாட்டிலெனு நினைப்பினது ;
சமயநெறி யறநெறிகள் தழைப்ப அருள் நடையினது ;
அமையுடைய நல்லறிஞர் கருத்துநிறை **தமிழ்மொழியே** 5.

—**வித்வான் ந. கனகராஜ ஐயர்**, B. O. L.

1. அரும்பதவுரை

1. மாயாத - அழியாத, குவலயத்தார் - உலகத்தார்.
2. உம்பர் - தேவர், கம்பரதுகவி - இராமாயணம்
3. எள்ளரிய - இகழக் கூடாத, கள் - தேன்,
4. நாணுளும் - தினந்தோறும், நம்பன் - கடவுள், செயல் செய்யுள், மாவாரத் திருமால் - திருமகள் அன்பு பூண்ட திருமால்' வழிவருதல் - கணிகண்ணன் பின்சென்ற கதை, பாவாரர்-பாமாலை புரவலர் - பிரபுக்கள்.
5. குருகையர்கோன் - நம்மாழ்வார், அமை - பொறுமை.

2. கேள்விகள்

1. தமிழ்க்குள்ள சிறப்புக்களைப் பத்து வரிகளில் எழுதுக.
2. தமிழ்ப்புலவர் பெருமையைப் பத்து வரிகளில் எழுதுக.

——:o:——

PRINTED AT THE B. N. PRESS, MADRAS